ஞானானந்தனடிமாலை, தினைவாட்சி

முதலிய

# செய்யுட் கோவை.

தி. லக்ஷ்மணபிள்ளை, பி. ஏ., யால்

இயற்றப்பட்டது.

" விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போல்
மறையநின்றுளன் மாமணிச்சோதியான்
உறவுகோனட் டுணர்வுகயிற்றினால்
முறுகவாங்கிக் கடையமுன்னிற்குமே. "

—திருநாவுக்கரசு.

திருவனந்தபுரம்

பாஸ்கர பிரஸ்.

1915.

*Copy-right*] [*Registered.*

PRINTED FOR THE AUTHOR
AT THE "BHASKARA PRESS", TRIVANDRUM
1915

(*First Edition Copies 1,000*)

# அட்டவணை


| பாடல் | பக்கம் |
|---|---|
| திருவடிவாழ்த்து | |
| ஞானானந்தனடிமாலை | ௧ |
| விண்ணப்பமாலை | ௩௫ |
| பதியுண்மை | ௪௨ |
| வினை வாட்சி:— | |
| அருளேயெல்லாம், சமயவொற்றுமை | ௪௫ |
| பதியின் மாட்சி | ௪௬ |
| படைப்பின் பயனாராய்ச்சி | ௪௮ |
| அருளாட்சி | ௫௰ |
| பதியின் செயல் வியப்பு | ௫௧ |
| அழகினியல், காதலுங் காமமும் | ௫௪ |
| படைப்பிற் குறிப்பறிதல் | ௫௫ |
| வாழ்க்கைமதிப்பு | ௫௭ |
| அகநிலை, செயல் தோன்றவிடல், பதியின் ஆற்றல் | ௫௮ |
| தத்துவ ஆராய்ச்சி | ௫௯ |
| பக்தி | ௬௫ |
| துறவுவேண்டாமை | ௬௬ |
| அகந்தையறல் | ௬௭ |
| நடுநிலை | ௬௮ |
| அருள்மாட்சி, அன்பு | ௬௯ |
| மெய்ம்மை | ௭௰ |
| உயர்வு தாழ்வு | ௭௧ |
| உள்ளிடுக்கம், கேடுசூழாமை | ௭௨ |
| ஜீவகாருண்ய உழைப்பு | ௭௩ |
| அவா | ௭௪ |
| வினைமாட்சி, உள்ளப்பயிற்சி | ௭௫ |
| நிகழ்காலத்தேற்றம் | ௭௬ |
| நேரமதிப்பு, புகழ் | ௭௭ |
| உழைப்பு | ௭௮ |
| பெருந்தன்மை, பொருள் | ௮௧ |
| இயற்கைக்காட்சிநலம் | ௮௨ |
| இசைமாட்சி | ௮௩ |
| தன்னிலைசூழ்ந்து பரவல் | ௮௪ |
| அருள்வேண்டுதல் | ௯௨ |

| பாடல் | பக்கம் |
| --- | --- |
| கடல் .... .... .... | ௯௬ |
| அந்திப்பொழுது .... .... .... | ௯௯ |
| நடையறைக் காயல் .... .... .... | ௱௧ |
| வாழ்க்கைமாலை .... .... .... | ௱௨ |
| செய்கடன் .... .... .... | ௱௪ |
| விதி .... .... .... | ௱௫ |
| உண்மைநட்பு .... .... .... | ௱௬ |
| ஓர் மாதின் விண்ணப்பம் (வைக்கம்) .... .... | ௱௭ |
| ஓர் மாதின் விண்ணப்பம் (ஏற்றுமானூர்) .... | ௱௰ |
| இசையின் பெருமை .... .... .... | ௱௰௩ |
| பெண்ணென்பாள், முயற்சி, அற்றூர்க்குணவளித்தல் | ௱௰௪ |
| உத்யோகஒறுப்பு, இராமச்சந்திர பாகவதர் மேல் .... | ௱௰௫ |
| வலியகோயில்தம்பிரான் மேல், முத்துக்குமார சுவாமிப் பிள்ளைமேல் .... .... | ௱௰௬ |
| முனுஷி கிருஷ்ணய்யங்கார் மேல், பாலராமவல்லி மேல் | ௱௰௭ |
| விதி (கீர்த்தனம்) .... .... .... | ௱௰௮ |
| ஆணவம் (கீர்த்தனம்) .... .... .... | ௱௰௯ |
| துறவு வேண்டாமை (கீர்த்தனம்) .... .... | ௱௨௰ |
| ஓர் மாது வரங்கேட்டல் .... .... .... | ௱௨௰௧ |
| அரங்கேற்றுப்பாயிரம் முதலியன .... .... | ௱௨௰௫ |

# PREFACE

The present publication brings together most of my compositions in Tamil verse, excepting those in dramatic form and my songs set to music. I make no apology for producing them in this collected form, as the public is more or less familiar with two of them at least, as separate booklets. Ninaivatshi has been considerably enlarged from what it was, and I seize this opportunity to give a fresh lease of life to a few of my minor pieces, which were written after Western models and which appeared in some of the Tamil Magazines at various times. Following Western lines again, I have made one departure from our customary methods by including among them a few verses in memory of certain deceased friends and kinsmen of mine. One or two Kirtanams also, owing to the general nature of the subjects they treat of, and because they do not come under regular musical compositions, find a place at the end of this volume.

One circumstance, in this connection, perhaps, calls for an explanation and that is the appearance of three pieces addressed to Siva under the headings "ஓர் மாதின் விண்ணப்பம்" and "ஓர் மாது வரங்கேட்டல்". They were written for the use of a lady of the orthodox type, in the manner best calculated to appeal to her simple and unquestioning faith. Devotion is a spiritual and regenerating influence, no matter what primitive conditions produced it; and it seems to me where they have had too long and too firm a hold, wisdom lies in fostering that devotion. I hope in the light of this declaration, and the ideas I have brought out in my Ninaivatshi and Gnanananthan adimalai, there is no danger of the reader identifying the idolatrous view of Siva taken in those three pieces, with my own conception of the Supreme.

T. L.

INTRODUCTION

TO

# GNANANANTHAN ADI MALAI

OR

## A garland at the feet of God.

---

The subject-matter of the first portion of the present work may be divided into three parts:—(1) The existence of God; (2) The struggles and questionings of the individual soul; (3) Invocation of the grace of God for the advancement, guidance and protection of the soul.

The views intended to be expressed therein are, briefly, that God, who is love, permeates the whole universe with his light, power, beauty and bliss; that the world is God's; that the soul in man is God's; that a self or ego entirely apart from the Absolute is either a convention or a chimera; that the soul derives everything from the Absolute for its earthly abode and happiness and stands to It merely in the relation of a pensioner; that the aims attainable by man are circumscribed: and that the difficulties and obstacles in the way of that attainment are many and cannot all be overcome by him alone. Viewed from every standpoint, therefore, it becomes clear that it is necessary to know God and seek His aid. The universe invites us to love, to look upon all sentient beings as our brethren. Every being has its origin in God. More evil lies in ignorance of the truth than in God's world. The theory of Evolution is a partial view of the truth, but it fails to trace the divine origin of *consciousness*, the chief element in all living beings. The existence of hunger, disease, death, &c. in the world cannot, in the eye of the true seer, be any hindrance whatever to a belief in the existence of God. Such evils are

indispensable for action, progress and happiness in the world—nay, even for the exercise of virtue. They are really blessings in disguise and, to grapple with and overcome **avoidable** evils, God has endowed man with intelligence and **will**. The *will* is a part of the machinery of fate, which, latter, is nothing more than the totality of natural laws at work. The world, in *all* its aspects, presents, to *thinking* minds, miracles in abundance without making it necessary on the part of God to manifest Himself by miracles which vitiate the natural operations of His own physical laws. A life of asceticism is unnecessary and, to some extent, it is selfish to seek salvation not minding our suffering brethren. It is possible to know the God of love through nature and to worship Him by following Him in the path of love. It will suffice, for the welfare of the soul, to pray for the grace of God without specifying any temporal aims and His grace, if deserved and obtained, would supply all that men need and all that is best for them.

It is idle to build too much upon frail man, especially on men who have no faith in a Supreme Being. All are equalized in death and, in view of the "funeral march beatings of our heart-drums to the grave," it is important that we bestir ourselves and do what we can towards widening the circle of good for the world, to love all and envy none. An attempt has been made in the latter portion of the work to describe some of the cardinal wants and aspirations of the soul. The work concludes with an invocation of God's help for the progress and elevation of the soul.

The second part named விண்ணப்பமாலை is a further prayer for relief in distress and for guidance in the path of right and truth.

The third part called பதியுண்மை is an attempt to detail briefly the steps by which the existence of a Supreme Intelligence may, in my humble opinion, be proved by the negative method of Inductive demonstration, the postulates to be granted being:—

1. That a thing, force or attribute, cannot be derived from nothing.

2. That a thing, force or attribute, cannot be derived exclusively from any thing, force or attribute, inferior to itself.

3. That *consciousness* cannot be derived from any thing or state of things which is *less than consciousness* or which *excludes consciousness*.

4. That a person who is continuously clean-starved *must lose*, in a few days, his *mental* as well as his physical power; but, (the process not being carried to the point of death) he can regain the same by taking food.

T. L.

INTRODUCTION

TO

# NINAIVATSHI

OR

## MEDITATIONS.

---

There are moments in a man's life-time when he stands face to face with the ultimate problems of existence, his relation to God, to man, in fact to everything in Nature—moments more charged with significance to him than all the rest of his days. If, however, his inward questionings are not adequately met, they become a perpetual menace to his peace; while if they are set at rest with answers that are in harmony with the great and indisputable Laws of the universe, they ensure to his soul the highest and the most enduring satisfaction. And no doubt, every earnest man, with what knowledge and powers of introspection he possesses, endeavours to grapple with those obstinate problems and, to the extent to which he feels he has succeeded, is anxious to record his solutions.

I have been engaged on these problems myself for some years past and the results are embodied in the verses contained in this book. It was after much inward debate, that I decided that it would be wiser to publish my views to the world—whatever may be their intrinsic value—than keep them buried within me.

We live in an age that is remarkable in many respects—but most remarkable, perhaps, for the supremacy that Western science and Western thought have gained all over the world. India, in particular, came under the influence of the spirit and culture of the West earlier than all the other countries of the East, and it is not surprising that we should have felt sympathetic shocks of the momentous conflict that raged between Science and Faith so long. We are compelled to admit that Science has emerged out of the struggle victorious at many points. Much of our traditionary

knowledge and many of our fondest notions have fallen like the walls of Jericho before the shout of Science "Truth for its own sake"; and we have been obliged to revalue our ideals in the light of Reason. So far nothing could have been more wholesome or more desirable. But, I believe, the value of Science for us lies in the intellectual unrest and challenge she has breathed into the midst of our deadly stagnation and smug self-sufficiency. In the immediate and marvellous success which Science has achieved in all directions, she has exceeded her bounds and made one colossal mistake. She has mistaken certain aspects of truth for the whole truth. While emphasising the Intellect as a potent instrument in the hand of man, she has forgotten the commanding position that the Emotions occupy in the economy of Nature. She has overlooked the fact that Feeling is the mainspring of human action; that as a motive power, intellect and conviction operate only in the few and not in the many; that noble thoughts beget noble action only when they are not overruled by passions and prejudices; and that only when the most elevating thoughts, based upon the fundamental truths of Nature have been made to combine and coexist with the worthiest instincts in him that man rises to the full stature of the divinity in him. It is because Science has not sufficiently realised this truth that she has left us spiritually cold and empty—left us to wrestle with doubts and misgivings. She provides us with no answers for our deepest longings, no consolation to sustain us through misery and sorrow and bereavement; and lacking a consistent theory of life, we either fall into an unlovely attitude of negation towards all the most sacred things of life, or abandoning reason and thought altogether as unsatisfying, we seek relief in mysticism and vague speculations.

Having lightly touched upon the dangerous nature of the influence Science exerts on our convictions, let me as briefly state what Religion stands to us for. * Religion, as representing the

* The words Religion and Science are employed here as in common usage. True Religion, as I understand it, is not something that is opposed to Science or is even apart from it, but something that includes it; that is, Religion is the amplification and the perfect consummation of Science or in other words, true Religion and true Science are synonymous.

highest aspirations of the human soul, sets herself two tasks to perform. She attempts to teach a coherent conception of the universe, as well as to establish a well-regulated system of human conduct, based upon that conception; that is to say, she tries to convince *the intellect* and at *the same time appeal to the heart* of man. In so far as she lays stress upon the necessity to reach and direct the feelings of man, she demonstrates her decisive superiority over Science, and therein also do we find the explanation and the justification of the permanent hold Religion has had on the attachments of men. Every Religion builds up its edifice of dogmas and practices upon an unchangeable groundwork of ethical truths. No two Religions, however, unless they have had a common origin, agree in many of their dogmas. How could it be otherswise? Those conceptions depend upon a multitude of circumstances that contribute to the origin and growth of each particular religion. The times, the countries, the traditions, the state of civilization, the knowledge and the racial characteristics of the people in whose midst a religion takes its rise, would all determine the distinctive features that mark out one religion from another. But for the very reason that those conceptions are the result of the fortuitous play of forces, they are liable to be modified or even completely overthrown by the expansion of knowledge—a fact which has been amply made evident by the happenings of the Nineteenth century.

But there are other conceptions, common to all truly great Religions, forming the bulwarks and buttresses of morality—such as the reign of Law and Truth, Justice and Love in Nature, which no revolution of thought, and no alteration of circumstances could ever disturb without shattering the authority of all religion and utterly disorganising society.

Hence, unless we guard carefully against misconceptions about what is essential and what non-essential in religion, we shall be led into unsuspected blind alleys of thought and grave anomalies in action. But it is precisely confusions of this sort that have become the rule and not the exception. They are the result of three qualities inherent in the average human being all

the world over, qualities which are praiseworthy in themselves, but which when allowed to distort all one's actions become subversive of all progress. As it would take me further than I intend to deal with each of them in detail, I shall content myself with merely indicating them. They are first, the highly exaggerated respect one feels towards all that belongs to the past for no other reason than that it belongs to the past; secondly, the tendency to cling to the letter and not to the spirit of a law or a precept; and thirdly, intellectual inertia, the proneness to love an old custom more than a new truth, that is, the incapacity to appreciate any standpoint other than one's own. These in combination have done and are doing immeasurable harm to the world by retarding the onward march of humanity. But their effect upon India has been specially unfortunate. They have made us suffer from self-inflicted paralysis. They have made us exalt man-made institutions into God-given ordinances; they have bred in us such absolute mistrust of our own powers, such self-abasing contempt for the present, that Reverence toward our ancients instead of being the inspiration and the boon that it ought to be, has become in very truth an obsession and a curse, the glaring brand of slavery in thought and degeneracy in life. And what wonder if the efforts of a few educated people to eliminate social evils from our midst, with occasional lectures and pamphlets, and annual conventions, appear to others like attempts to transform the fruits by merely trimming and chopping off from the tree of social life those particular branches which offend their sense of the fitness of things.

If my reading of the facts is even approximately correct, I believe no one would deny that our situation is one that demands the clearest convictions upon all such questions as are vital to our peace of mind; and first in importance comes our attitude towards the Supreme Being. It appears to me that a pure and rational worship of God, divested of all symbolical mystification, alone can deliver us from the perilous alternative of an uncritical credulity on the one hand and a pernicious scepticism on the other. There is none so poor in spirit but can see God and love Him and worship Him in all his manifested works both great and small,

All can approach Him, each in his own way, for God is catholic and it is not sacrilege to rely upon powers He himself has implanted in us. Such an attempt to get a direct and intimate knowledge of God by observation of Nature and intropection of oneself has, I admit, its difficulties, perhaps its dangers; but it is there that the wisdom of the great men of the past and the present can help us. And if a man, undismayed by initial obstacles and with unabated ardour, forges ahead, his efforts would be rewarded by his discovering truths fraught with the promise of widespread happiness.

Let no one be discouraged by this insistence upon self-reliance, since it requires no Yogam or development of psychic powers to get at these truths, or to realise them in life; on the contrary, it seems to me that if we are to measure a man by the extent of the good he can confer upon the world, one unaffected devotee of the type I have in mind, will outweigh a legion of ascetics. At the same time, let me add, that I yield to no man in my respect for those who embrace asceticism, not for the sake of a pitiful salvation for themselves, but because they dedicate themselves to some high enterprise for which they have received a compelling inward call.

One truth among others that will come upon such an inquirer with an overwhelming force of conviction would be the ineffaceable unity that underlies all the hidebound conventions of rank and distinction, of caste and creed, and all the crude classifications of an infantile science. That is the truth that all the religions of the world have been labouring to express with varying degrees of success; and that would be the most formidable truth Science would have verified for herself in the near future with her special methods of reasoning—the one truth that would explain and validate all the others she has unearthed for us.

The underlying unity of all things—that is the truth that must sink into the minds and the hearts of our people. The right perception and the widest application of such a truth would have the most far-reaching influence upon human thought and human

conduct. It would be the first step in the process of true regeneration, individual as well as national. It would be the most imperious prompter of sympathy, the most uncompromising suppressor of meaningless distinctions, of narrow patriotisms, the surest healer of social evils and the most persuasive inspirer of charity and loving kindness and universal brotherhood. It would further be the most irresistible argument in favour of political progress; for what is it but the full and logical extension of the democratic cry of "Liberty, Equality and Fraternity" as applied to human affairs?.

It is not a new truth. It is as old as the prophets of the world—as old as Buddha and Christ and Socrates and Tiruvalluvar. How is it then that such a cardinal principle of their teaching has not found that acceptance among men that its importance deserves? How is it that it has been submerged under a mass of unessential formulæ? There are more reasons for it than one.

Primarily, of course, it is due to the intellectual inertia to which I had occasion to refer previously. It is so hard to overcome the pressure of environments, of habit, of predispositions. But there is another reason of a different complexion altogether. There has at all times and in every country been an interested class to whom such doctrines of fundamental unity and brotherhood have been distasteful, not to say hateful, namely, those who have had in their hands the exercise of power, temporal or spiritual. A recent English writer speaks of the type of mind "that sees society in two clearly defined strata—a small select aristocracy (of birth, or spiritual influence, or wealth, it does not matter what,) born booted and spurred to ride, and a large dim mass born saddled and bridled to be ridden, and firmly believes it to be a divine arrangement." It goes without saying that the riders as a class are sure to resist the revolutionary idea that they are made of the same stuff as the ridden. History teems with examples to show how jealous those in power are of their privileges, and how desperately they would fight for them. To them no ruse is too low, no hypocrisy too despicable, no cruelty too inhuman, to use against whatever threatens their authority, or their profits. It is they who would twist the clearest declarations

of their prophets to suit their own convenience, or to cover their imperfections. They would explain away the Ten commandments or the Sermon on the Mount, or the injunctions of Buddha, or the message of the Vedas. The Philistines and the Pharisees have, between them, mangled the doctrines of the purest and the wisest of men. They have sought to render the unspeakable martyrdoms of the redeemers of the world as though they never had been; and, as might be expected, the faint-hearted and those of little faith have begun to fight shy of ideals and look upon them as mere impossible moonshine. But it rests with those who have a deeper faith in the ways of the Eternal to do whatever in them lies to promote love and sympathy and unselfishness, and foster those priceless sentiments of virtue that will make humanity worthy of the splendid destiny that awaits it.

It is as a humble venture in that direction that I make bold to publish this book to the world.

T. L.

# திருவடிவாழ்த்து.

---

அகமாகின்ற பதம், அருளாகின்ற பதம்,
அறிவாகின்ற பதமே,
இகமாகின்ற பதம், இறையாகின்ற பதம்,
இசையாகின்ற பதமே,
உகமாகின்ற பதம், ஒளியாகின்ற பதம்,
உயிராகின்ற பதமே,
சுகமாகின்ற பதம், இணையேதுமின்றியுறு
துணையாகின்ற பதமே.

கலையேறுகின்ற பதம், அணியேறுமன்பர்புகல்
கவியேறுகின்ற பதமே,
விலையேறுகின்ற பதம், உயர்வேதமுடியேறி
விளையாடுகின்ற பதமே,
மலையேறுகின்ற பதம், மலைவேறுகின்ற பதம்,
மதமோரனந்தமவைதந்
தலையேறுகின்ற பதம், நலமேதரும்பரம
தருவாகின்ற பதமே.

அறவாழியென்ற பதம், அணுவாகின்ற பதம்,
அருவாகின்ற பதமே,
இறவாமைகொண்ட பதம், இயல்பாயுயர்ந்த பதம்,
எழிலேறுகின்ற பதமே,
உறவாகின்ற பதம், உணர்வாகின்ற பதம்,
உரைநாடுகின்ற பதமே,
நறவூறுகின்ற பதம், எழுவாழ்விலுந்தழுவி
நமையாளுகின்ற பதமே.

# ஞானாநந்தனடிமாலை.

அருள்வடிவே யுலகனைத்தும், அருள்மயமே
அகமனைத்தும், அமைந்துநின்ற
அருள்வலியே வலியனைத்தும், அகம்புறமுந்
தோன்ற உயிராகத்தோன்றும்
அருளொளியே ஒளியனைத்தும், அருளழகே
அழகனைத்தும், அந்தமில்லா
அருள்நிலையே நிலையனைத்தும், அருட்பெருமை
அகிலமெங்கும் அமருந்தானே. (க)

அருந்துணையே, அறமுடையார்க் ககமுருகி
நினைத்தடியாரழைக்குப்போது
வருந்துணையே, மதிபொருத்தி வஞ்சனையில்
லாதுழைப்பார் மதிக்குங்கூலி
தருந்துணையே, சகலருக்குந் தகைபொருந்த
அருணீதி தழைக்குந் தெய்வப்
பெருந்துணையே, பெருநிதியே, இடங்காலம்
இறப்பில்லாய் பிறப்பில்லாயே. (உ.)

நின்னுடையதாமிந்த உலகமெலாம்,
நானுமதே, நினைப்பில்லாமல்,
என்னுடையதாமென நான் பிழைபிதற்றி,
இறுமாப்புற் றேமாந்தேனைச்,
சொன்னடையே சொல்லிவருங் கிளிபோலப்,
பேதையர்சொற் றொடர்ந்துதாழும்
பொன்னடையுஞ் சுகமொன்றே பொருளென்று
திரிந்துமனம் பொய்கொண்டேனே. (௩)

கண்காணும் பொருளொன்றும் நான்செய்த
தன்றே, என் கருத்துமெட்டா
விண்காணும் அண்டமெலா நின்மகிமையே
விளக்கி வியப்புச்சேர்க்கும்;
எண்காணப்படா உயிர்களியல்பெல்லாம்
நின்றிறமே எடுத்துக்காட்டும்;
பண்காணும் ஆனந்தம் நின்னியல்பு
படர்ந்ததனாற் பகரொண்ணாதே. (௪)

எதுவென்று நானென்பேன்? இசையென்போ,
இரிதோலோ, இறைச்சிக்கூடோ,
பொதுநின்ற உதிரமதோ, பொங்குயிர்ப்போ,
புகுநரம்புப் புணர்ச்சிக்காடோ,
அதுவன்றி மூளையதோ, பொறிபலவோ,
அறிமனமோ, அதற்குமப்பால்
இதுவென்றுதோன்றா தெல்லாமியக்கும்
நின்னொளியி னிருக்கைதானோ? (௫)

நானென்ற அறிவெனக்கு நீயின்றி
யிலையென்ற ஞானமில்லேன்;
ஊனென்ற சுவர்மறைவால் நீநின்ற
உண்மைதனை யுற்றுப்பாரேன்;
தானென்றபொய் யுண்மைபோனின்று
மெய்யறிவைத் தடுப்பதின்றேல்,
தேனென்ற சுகமுறத் தெய்வமலா
திலையெனநான் தெரிவேனன்றே. (௬)

உடம்பளித்தாய், உயிரளித்தாய், உணர்வளித்தாய்,
உறவளித்தாய்; உயிர்வாழ்தற்கே
இடம்படைத்தாய், பொருள்படைத்தாய்; எண்ணுவதை
இயற்ற என்னுள்ளிடத்தில் மெய்யில்
திடம்படைத்தாய், ஐம்பொறியின்திறம் படைத்தாய்,
மறைந்துனையே தேடவைத்தாய்;
கடம்படைத்த கருணையினை, கருதினுனக்
கெந்நன்றி காட்டுவேனே? (௭)

சின்னவெனைப் பெற்றோய்நீ; உன்மகனென்;
என்குருநீ, சீடனேனே;
என்னருமை உயிர்த்துணைநீ, அந்தகனென்;
ஈவோனீ, இரப்போனேனே;
பொன்னருமைப்புரவலனீ, சிறுகுடிநான்;
பெருமானீ, புழுக்கைநானே;
முன்னவனீ, கடையவனென்; முற்றுணர்ந்த
கொற்றவனீ, மூடனேனே. (௮)

இலங்குமணி ப்ரபையெழுந்த சூரியன்போல்,
இதயமலரிடத்தே வீற்று,
நலங்கமழ நீயிருக்க, நானுனையே
அடுத்திருக்க, நாளுநாளும்
துலங்குமொழி நாவாழ்த்தக், கைகூப்பத்,
தலைவணங்கத், தூயபாவால்
அலங்கலுனக்கணிந் தபயம் நீயளிக்க
அகங்களிக்க அருள்செய்வாயே. (௯)

விண்களிக்க, வியப்பெனுஞ் சாகரம்பொங்க,
விளைநலத்தை விரிந்த இந்த
மண்களிக்க, நின்மகிமை வகித்திருக்கும்
பெருமியற்கை மதியாற்கண்டார்
கண்களிக்கக், கருத்தவிழக், கரையறியா
தோங்குகின்ற காலத்தூடே,
பண்களிக்கப் பாடுமருள் நான்பலர்க்கும்
பரிந்துரைக்கப் பயிற்றுவாயே. (௰)

உலகமெனுங் கரைதெரியாக் கடலிடத்தே
காலமெனும் ஒழுக்கிலோடிக்,
கலகமெனுஞ் சுழிகடந்து, கடுமையெனுங்
கன்னீங்கிக், கயங்கள் தாண்டிப்,
பலகவலைத் திரையேறி, மிடிப்புளினம்,
பிணிப்புயற்கள் படைக்குமோசம்
விலகிட, இவ்வுடற்றோணி வேண்டுமருள்
வலங்கணிக்க வியக்கின்றேனே. (௰௧)

ஏக்கந்தான் மனிதர் தனித்தால் வரும்பங்
கென்றும், அதற்கிறைவா நின்கண்
ணோக்கந்தான் பொருந்துமருந்தென்றும், நினைத்
தாற்றெளியும்; நாவன்றால் நின்ற
ஊக்கந்தான் அவருக்கம், அவர் துணிவு
நின்னடிக்கண்ணுறுதி, யெல்லா
ஆக்கந்தான் அன்பவர் நோற்குஞ்சுகந்தான்
நின்னருளை யடைதலன்றே? (௧௨)

மானிடர் தாமுயன்றடையும் பயன்களுக்கு
வரம்புளதே; மதுரந்தங்குந்
தேனிடைக் காஞ்சிரங்கலந்ததென இன்பத்
திடை துன்பஞ்செழித்த இந்த
ஊனிடை நின்னருளொளியி னுதவியின்றேல்,
உலகிலவர் உய்வரோ? வெங்
கானிடைக் கூரிருளில் வழிகாணாத
குருடரைப்போற் கலங்குவாரே. (௧௩)

மருந்தளிக்க மருத்துவனாய், வரமளிக்க
வரபதியாய், வரையாதென்றும்
விருந்தளிக்க விழைவவனாய், முறையளிக்க
வேந்தனுமாய், விழுமியார்க்கும்
அருந்தவர்க்கும் பொருந்தியவை தெரிந்தளிக்க
வல்லவனாய், அழியாவின்பம்
இருந்தளிக்க அருணிதியாய், ஈசனைப்போல்
எவரிருந்தார் இப்பாருள்ளே? (௧௪)

இருபொருளாஞ் சராசரமும், இயங்குவதாம்
நீர்நெருப்பும், இயலுங்காற்றும்,
பெருவிசும்பும், மண்ணும், இவைபெறுமுயிரின்
பெருக்கமும், அப்பெருக்கத்துள்ளே,
உருநிறையு மனமுணர்வோ டொளிரறிவும்,
உயரன்பும் ஒருங்கேயாகி,
மருவுமருட் கடல்கொண்ட மகிமையுரை
மனமளக்க வரம்பெய்தாதே. (௰௫)

வரம்புக ளெலாங்கடந்து, மனங்கடந்தா
ருயிர்கடந்து, மலர்ந்துநின்ற
பரம்பொருளைப், பக்தருளம் பழுத்திருக்குங்
கனியை, அறம்பருகுந்தேனை,
நிரம்பிஅருள் ததும்பியெழு நெடுங்கடலை,
ஆனந்த நிமலவூற்றைத்,
தரம்பகர வல்லேனோ? சதுர்மறையா
லதின்பெருமை சாற்றொண்ணாதே. (௰௬)

சாற்றிவரும் பொருளிலெலாந் தனித்துவரும்
உட்பொருளைத், தருவித்தெல்லாம்
மாற்றிவரும் அருட்பொருளை, மறைந்துவரு
மெய்ப்பொருளை, மனத்திலன்பாற்
றோற்றிவரும் பெரும்பொருள்க ளாற்றிவரும்
அரும்பொருளைத், தொல்லைநூற்கள்
போற்றிவரும் பரம்பொருளைப், புகல்கின்ற
தெம்மொழியாற் பொருந்துமம்மா? (௰௭)

பொருந்துவதோ உலகமெலாமளக்க, மணாற்
கூட்டமெண்ணப்போகுமோ, நாம்
வருந்திஉயிர்த் தொகைமதிக்க மாளுவதோ,
வரையறியா வான்மீன்மாட்சி
இருந்தடங்க லெழுதவென்றால், இயலுவதோ,
மணங்களெலாம் எண்ணுமெண்ணப்
பெருந்திரளைக் கணிப்பெளிதோ, அவ்வருமை
அதின்பெருமை பேசுமன்றோ? (௰௮)

பேசவரும் பெரும்பொருளைப் பேசுவதற்
கொருப்படலோர் பிசகென்றால், நம்
வாசகத்திற் குண்ணிறைந்தும், வாசகாதீ
தப்பெருமை வகித்தும் நின்றார்
ஈசனென நினைக்கினவர் எல்லையிலாப்
பெரும்புகழ்நாம் இயன்றவாறே
நேசமுற வெடுத்துரைத்தல் இழுக்கலவாம்,
அவரருளை நேடலாமே. (௰௯)

உடலிருந்தபயனெதுவோ, உயிரிருந்த
பயனெதுவோ, உணவால்வந்த
அடலிருந்த பயனெதுவோ, அறிவிருந்த
பயனெதுவோ, ஐம்புலத்தின்
றொடலிருந்த பயனெதுவோ, தொகுத்தனைத்தும்
நமக்களித்த தூயநேயக்
கடலிருந்த வகையறிந்து கையிரண்டுங்
கூப்பியுளங் கருதாக்காலே? (௨௰)

தொலையடுத்ததெனச் சொல்லவரியசுகப்
பொருளே, நற்றொண்டருக்கே
மலையடுத்த தெனத் துணைக்குமாமணியே,
மாற்றமிலா வாய்மைஞான
நிலையடுத்தவருக் குலவாநித்திலமே,
நித்யமுனை நினைந்துநேடி
உலையடுத்த மெழுகினைப்போலுருகாத
நெஞ்சமெதற் குதவுந்தானே ? (௨௧)

பணங்கலந்த பகட்டுலகின் பகைநெருப்பும்
பரதவிப்பும் பறக்கவிட்டுக்,
குணங்கலந்த நின்குழுதவடி குறித்துக்
கொண்டுமனங் குழையாதங்கோர்
கணங்கலந்ததாயின், அருஞ்சிறையொழித்துக்
கற்பகப்பூங் காவினுள்ளே,
மணங்கலந்த தென்றலெழ, மகரயாழ்
கேட்டெழுந்த மகிழ்ச்சியாமே. (௨௨)

கொண்டலிடந் தண்ணீருங், கூந்தலிடங்
கொய்ம்மலருங், கூவித்தாவித்
தண்டலையிற் பைங்கிளியுந், தாமரையிற்
கார்வண்டும், தழைப்பதெல்லாம்
மண்டலத்துந் தோன்றிடுமோ, வயங்கியமெய்
யோன்அருளின் வயத்தால்முன்னே
விண்டலத்திற் றோன்றிலனேல்? விறல்மெய்யோ
னருளின்றி மெய்வாழ்வின்றே. (௨௩)

அன்பியற்ற அகிலமைமை யமைத்ததுவே;
அகிலேச னளவில்லாத
அன்பிலிருந் துலகமெலாம் பிறந்தனவே;
எழ்நிறமொன் றடங்குமாறே
அன்படங்கும் அறங்களெலாம்; அமரர்களு
முண்டேல் அவ்வன்பால் மேலோர்;
அன்பறியாக் குறையிருக்க இன்பறியாக்
குறையிருக்கும், ஆயுங்காலே. (உ௪)

அனைத்துயிரும் சுகிப்பதற்கா மெனைத்துயிரும்
அகிலேசன் அமைத்தன்றித்,
தினைத்துணையும் பலநலிந் தோருயிர்சுகிக்க
வன்றென்ற சிறந்தநீதி,
நினைத்துலகில் அன்பறிந்து பழகாதார்,
நிலையறியா நிந்தைசேரும்
வினைத்துயரி லாழ்ந்து, விழி நனைத்துயிரை
விடுவதற்கே விரைகின்றாரே. (உ௫)

இருளொன்றே திமையின்றாய்; எவ்வுயிரு
நம்முயிருக் கினமென்றெண்ணு
மருளொன்றே வானருளை மறைப்பதுவாம்;
இவ்வகில வளங்கொள்காட்சி
பொருளொன்றே பலபடநின்றதுவாம்; எப்
பொருளும், உடற்புகுமான்மாவும்
அருளொன்றே ஆளுவதாம்; அஃதொன்றே
அனைத்தினுக்கும் ஆதியாமே. (உ௬)

விரும்பிவிடும் பொருளெல்லாங் கிடைத்திலவே
என்கின்ற விசனத்தாலே,
கரும்பான மனமெல்லாம் இரும்பாவர்
சிலர்; தமது கருத்தினுள்ளே
பெரும்பதவி எனநினைக்குந் துரும்பெல்லாம்
ஈந்திலதேற், பேதைநெஞ்சால்
வரும்பிசகென் றுணராது, தெய்வமில்லை
யென்றவர்நா வழுக்குவாரே. (உஎ)

ஊக்கமொடு ஜடமுறழ உலகமுண்டாம்,
உத்தமம் எஞ்சுவதனாலே,
ஆக்கமொடு தற்காத்தல் அழித்தல்இவைக்
கதிகாரி அமையவேண்டாம்,
நோக்கினென ஒருசாரார் நவல்வர்; அவர்
நோக்கொருசார் நோக்காம்; தோற்றப்
போக்கினுக்கோர் போக்குரைப்பர், போதமெனு
முட்பொருளின் பொருள்காணுரே. (உஅ)

போதத்தின் றனியியல்பும், உயர்பிறப்பும்
ஜடமாய்ந்தும் புலப்படாமல்,
வாதத்தேமுழ்கி, அஃதிலதென்றும்
ஜடமென்றும் வகுத்தநாளு
பூதத்தின் பண்பென்றும் புலம்புவர்; பண்
பவையெல்லாம் போதத்திற்கென்
றேதத்தான் றடையெதுவோ, ஜடம்போதம்
பிறக்குமிடம் ஒன்ருகாதோ? (உகூ)

தீதிருக்கத், தீதிழைக்குந் துன்பிருக்கத்,
தெய்வமில்லை செகத்துக்கென்று
வாதுரைப்பர் சிலர்; தோலாற் பழம்பொதிந்த
வாறுநன்மை மறைத்துத்தீது
மீதிருக்கும், அதுநன்மை யுருவிகற்ப
மாமென்ற விவரம்பாரார்;
ஈதிருக்கவேநன்மை நன்மையெனக்
காண்பர்விழி யெட்டாதாரே. (௩௰)

ஆழ்ந்தகன்ற நோக்கினர்க்கு, நன்மையலா
தகிலத்தில் அணுவுமில்லை;
மாழ்ந்தவுயிர் உடல்மாறி வாழ்ந்தவுயிர்;
ஒன்றுக்கும் மரிப்பேயில்லை;
தாழ்ந்ததெனல், உயர்ந்ததெனல் சங்கேத
மாம்பேச்சுத்; தத்துவங்கள்
சூழ்ந்தவருக், குயிரிலெல்லாம் உலகிலெல்லாம்
ஒருசோதி துலக்கமாமே. (௩௧)

பசியின்றி உணவில்லை, பாடில்லை;
சுகமில்லை பாடில்லாதே;
நிசியின்றி உதிப்பில்லை; சலிப்பின்றி
நினைப்பில்லை, நிகழ்ச்சியில்லை;
நசிவின்றி வசிப்பில்லை; வசிப்பின்றி
வாழ்விலுறு நன்மையில்லை;
கசிவின்றிக் கடவுள்பதங் கருதலில்லை,
வருதலில்லை கருணைதானே. (௩௨)

பிறந்திருந்த மனிதரெல்லாம் பறந்தொளித்தார்,
நாமவர்க்குப் பிந்திநின்றோம்,
இறந்திருந்த மனிதரெல்லாம் இருந்திருந்தால்,
நாமிருக்க இடமின்றென்றே
மறந்திருந்து மரணமதைப் பழித்திடுவோம்;
நம்மதுபோல் மதியாகாமற்,
சிறந்திருந்த தெய்வவருட் சித்தவிரி
வறியாதே தியங்குவோமே. (௧௩)

மண்ணின்றிக், காற்றின்றி, விண்ணின்ற
விளக்கின்றி, வளப்பமோடு
தண்ணின்ற நீரின்றித், தரையில்மரம்
மாமனிதர் தங்கலில்லை;
கண்ணின்றிக் காட்சியில்லை; புலனின்றி
மனமில்லை, கருதலில்லை;
பெண்ணின்றிப் பிறப்பில்லை; பிறப்பின்றி
உயிரில்லை, பெருக்கமின்றே. (௧௪)

நோயின்றி மருந்தெண்ணோம், சௌக்கியத்தின்
மதிப்பறியோம், நோக்கோந் தேகம்;
தாயின்றிப் பிள்ளையிலாவதுபோல,
உணவின்றிச் சரீரமில்லோம்;
தீயின்றி உணலரிதே; தெரியாமை
முன்னின்றித் தெளிவதில்லை;
காயென்ற உழைப்பின்றிக் கனியென்ற
தகுதியில்லோம், கருதினிங்கே. (௧௫)

பேதத்தால் வழக்குளதாம், வழக்கிலையேல்
ஞாயமெனும் பேச்சுமில்லை;
சீதத்தால் வெப்பறிவோம், சீதவெப்பின்
திரிபின்றித் தேகமில்லை;
சேதத்தால் ஆதாயமுள்ளதுவாம்,
இவையிரண்டும் செனனத்தாகும்;
கேதத்தால் சுகமுளதாம், தனிச்சுகத்தில்
இருப்பதொரு கேதமாமே. (௨௬)

படர்கின்ற இரவுபடைப்பிலதேல், நட்
சத்திரங்கள் பகட்டும் திவ்யச்
சுடர்கின்ற தறிவோமோ, தூங்குவதாற்
சுகமுளதோ, சோர்வுபோமோ?
இடர்கின்றதாலன்றி அறமறியோம்,
உயர்நிலையை எண்ணோம்; துன்பம்
தொடர்கின்ற தாயினதைத் தொடர்கின்ற
நலமறிந்து துதிசொல்வோமே. (௨௭)

தீயதெனும் விறகெரிய, நன்மைப்ரகா
சிக்கின்ற தீபமாகும்;
ஆயதெனுந் தெளிவுடையார்க் ககிலேசன்
தீயவையால் அல்லாதாகார்;
தூயபொருள் உலகிலழுக்கிடைகின்ற
தோற்றமதாற் றூயதன்றோ,
தாயவள்தன் சோணிதப்பை வாயிழிந்த
சேயதனைத் தள்ளுவாரோ? (௨௮)

இவ்வளவு துன்புலகத் திருந்துநய
திறுமாப்புக் கெதிரொன்றில்லை;
அவ்வளவு துன்பிலையேல், அறியாமை
இறுமாப்புக் களவுண்டாமோ?
எவ்வளவு கொடுத்தாலும் எடுத்தாலும்
அன்புவழி எண்ணாமாந்தர்
செவ்வளவு செல்வாரோ, தெய்வவரு
ளிருந்தவரைத் திருப்பாக்காலே? (௩௯)

ஈங்கிருந்த தேனுமிகு மாறுமவை
யகற்றவழி சிந்திப்போர்க்குப்
பாங்கிருந்ததா மதியே; மதிசிறக்க
வகையுமுண்டு, பயிற்சியுண்டேல்;
ஓங்கிவரமதி, செழிக்கவளம், உழைக்கவலி
நமக்கென் றுதவிக்கண்டும்,
ஏங்கிடுவோ மெனி லீந்தவர்குறையோ,
நங்குறையோ, எண்ணுவீரே. (௪௰)

மதியென்ற கண்ணிருக்க, முயல்கின்ற
கையிருக்க வாழலாமே,
விதியென்ற திலையென்பர் சிலர்; விதியே
மெய்மதியே வீணென்றெண்ணி,
ஓதியென்ற வாயிருப்பர்; மதிவிதியில்
ஒருபங்கென் றுணராதன்றோ,
கதியென்ற தறியாமற், பதியருளுங்
காணாமற் கலங்குவாரே? (௪௧)

அறிகின்ற அறிவின்றி, அற்புதமெங்
　　கென்றலைவார் அவமேசில்லோர்;
மறிகின்ற பூமியையும், வான்கொண்ட
　　மீன்களையும் வகுத்ததோரார்;
செறிகின்ற காடுமலை நாடுகடல்,
　　இவைபெருமை சிந்தித்தாயார்;
எறிகின்றபுல்லு நமக்கெட்டாத
　　அற்புதமென் றெண்ணாதாரே. (சஉ)

தினமென்ற பகலிரவு திரிகின்ற
　　விசித்திரத்தைத் தெளியப்பாரார்;
அனமென்ற பொருளுடலில் அமைகின்ற
　　அதிசயத்தை ஆழ்ந்துநோக்கார்;
மனமென்ற அருவமுடல் ஆள்கின்ற
　　அற்புதமு, மற்றாட்சிக்கோர்
இனமென்றபடி, இறைவன் உலகாளும்
　　அற்புதத்தை என்காணாரே? (சஈ)

அற்புதமே உலகம், உயிர் அற்புதமே,
　　அற்புதமே அடைந்ததேகம்,
அற்புதமே அறிவறிவுக் கற்புதமே
　　உணவுயிராய் அமைதல், நித்ய
அற்புதமே பிறப்பிறப்பு, விழிப்புறக்கம்,
　　அற்புதமே ஆன்மாமெய்யில்,
அற்புதமே அறிந்ததெல்லாம், அற்புதமே
　　இவையறியா அறிவுதானே. (சச)

பயனிலெனு மொழியல்லாற் பொருளில்லை
யெனப்பகர்வர் பயிற்சியுள்ளோர்;
நயனிலெனு மொழியல்லாற் பொருளில்லை
யெனநவில்வர் ஞானங்கண்டார்;
அயனரன்மால் வேறில்லையோர் பரம்பொருளே
யுளததனில் அமைந்தஆதி
யியனருளொன்றே பொருளென்றவர் விரிப்பார்,
அதுபெறலே மேலாமென்றே. (௪௫)

மேலான சுவர்க்கமிலை பரிசுத்த
மனமிலையே; விரும்பாநின்ற
பாலாழி யமுத்மென்ப் பேரின்பத்
தனிமிலையே; பரவுந்தொல்லை
நாலான மறைகளுக் கப்பாலான
நலங்குறித்து நாடேல், நம்
மாலான அரக்கனைக்கொல் வேலாகும்,
கசடறுக்கு மருந்துமாமே. (௪௬)

சினஞ்சென்ற வழியொழித்துக், கொடுமைகொலை
சிறுமையுளார் சேர்க்கைநாடி
மனஞ்சென்று வருந்தாது, மதியளிக்கும்
வள்ளலடி மலரிற்சிந்தை
தினஞ்சென்று திடம்பெருக்கி, இயற்கையுளே
தெய்வவருள் தெரிவார் தம்மின்,
வனஞ்சென்று கனிபுசித்து மௌனமிலை
யுற்றாரென் வரப்பெற்றாரே? (௪௭)

தவமிருந்து தானொருவன் றனியாகச்
சாயுஜ்யம் சார்தலென்னும்,
பவமிருந்து தன்னினத்தா ருழல்பொழுது?
தன்மகவைப் பஞ்சம்வாட்ட,
நவமிருந்த அமுதொருவன் உண்பதுவாம்:
நாம் பிறர்க்கு நன்மைசெய்யா
தவமிருந்த வாழ்விலுமோர் அவமிருந்த
வாழ்வுமிக அருமையாமே. (௪௮)

மாயையெனு மியற்கையிலே வகுத்திருக்கு
மகத்துவங்கள் மதியாற்காணல்,
நேயமதே தெரிக்கு முபாயம்பலவாய்த்
தோன்றுவதால், நேயநாதன்
சாயையதிற் காண்பதுவாம்; அதுகன்றி
நேயநெறி சார்ந்த ஞானி
போயவழி யெங்குமவன் றாயவருள்
புகுந்தவனைப் புரக்குமன்றே. (௪௯)

வினைப்பயனைய் வெருவதினை விரும்புவதேன்?
நல்வினையில் விருப்பில்லாமற்
பனைப்பருவம் உடல்நீளப் பருக்கைதர
வேண்டுவதேன்? பாவமுட்டும்
பொனைப்பொருளைக் கேட்பதெவன்? பொன்னருளைக்
கேட்டடியே போற்றிநின்றால்,
நினைப்பதிலும் அதிகசுகம் அளிப்பனது
நிச்சயமே நிமலனேவந்தே (௫௰)

வெல்லரிய வினைப்பகையை வென்றிடலாம்,
விழுப்பொருளை விரைந்து நல்கும்
செல்லரிய உயர்நெறிக்கண் சென்றிடலாம்,
பெற்றிடலாம் சித்தியெல்லாம்,
தொல்லரிய மறைகளெலாந் தொடலரிய
பதங்களித்துத் தொழலாம், எண்ணச்
சொல்லரிய சுகம்பெறலாம், சுயஞ்சோதி
யருள்நமக்குத் துணையானாலே. (௫௧)

கரும்பருந்துங் கூலியதன் கையோடே
கிடைப்பதுபோற், கடவுட்பாதம்
விரும்பிநினையும் பொழுதே விரும்பிவரும்
நலங்கள்; அருள் மெய்யுள்ளார்பாற்
றிரும்பிவரும்பொழுது புறந்திரும்பிவிடு
மிடர்; கண்ணீர் தெய்வமெண்ணி
அரும்பிவிழும்பொழுது நமதரும்பாவம்
அழலகப்பட் டவிந்துபோமே. (௫௨)

தனித்தனியே பிணியிடும்மை தடுக்குகிலா
மனிதரிடஞ் சார்ந்து, கண்ணீர்
பனித்தெழவே, பாடுரைத்துப் பயனடைவ
தொன்றில்லை; பாருள்ளோர் நான்
செனித்தபொழு திடருடன் செனித்ததுவே;
எளியனைப்போற் றீங்குற்றாரை
இனித்தரையில் நம்பியிரேன்; இனித்தவரு
ளோநம்பி யிருக்கின்றேனே. (௫௩)

இன்றிருந்து நாளையிலா ஈசல்போலும்
மனிதர்க் கேற்றசேவை
சென்றிருந்து நாடினுமங் கவர்சித்த
மொருநெறியிற் செல்லாதாகி,
நன்றிருந்து நாட்செயினு, நம்மிடமுட்
பகைநீக்கார், நட்பும் நல்கார்
என்றிருந்த அனுபவத்தா லுணாருநெஞ்சே,
ஈசனைநீ யத்தாயென்னே? (௫௪)

வாக்காடு வல்லபம்போல் விளையாட
வீரமில்லார், வாழ்நாளெல்லாம்
நோக்காடு விட்டகலா நொய்யுடலார்,
நோவறிந்து நோக்கார், சூழுஞ்
சோக்காடு தாண்டும்வகை தெய்வமல
ரடிவழுத்தத் தோன்றமாட்டாச்
சாக்காடு சேரமாந்தர் தமைநம்பி
யோவாழ்வு தரிக்கின்றேனே? (௫௫)

இப்புல்லை, இப்பூவை, இவ்வரும்பை,
இவ்விலையை, இவ்வாசத்தைச்,
செப்பில்லா விலங்கினத்தைச், சிறப்புடைய
மனிதரை, யுட்சிறப்புச்சேர்க்கும்
தப்பில்லாச் சாட்சிதனைத், தனியறிவைத்
தந்தபெருந் தயாமோனத்தை,
ஒப்பில்லா· வொளிர்மணியை, உயர்கதியை
நம்பியுவந் துழைக்கின்றேனே. (௫௬)

பணக்குவியல் கொண்டவரும், பதவிமிகப்
படைத்தவரும், பதறு துற்றுப்
பிணக்குவியல் கொண்டரசு பிடித்தவரும்,
வல்லபத்தைப் பெற்றபேரும்,
கணக்கொருபோற் கூற்றனுக்கே இரையாதல்
கண்டிருந்துங், கல்லோநெஞ்சே?
வணக்கமிலா திருந்தனை, வான் வள்ளலடி
மறந்தனை நீ மதியில்லாயே. (௱எ)

நரைவளர்ந்து வருமுன்னே, நடுவளைந்து
விடுமுன்னே, நகர்ந்துமோசத்
திரைவளர்ந்து வருமுன்னே, செய்கடமை
அறிந்தியற்றிச் செகத்தில்நன்மை
வரைவளர்ந்து வரச்செய்வோம்; வன்மையெலா
மறப்போம்; இவ்வாழ்வையீந்த
உரைவளர்ந்த பேரருளையுற்றறிவோம்;
உண்மைநெறி உயருவோமே. (௱அ)

அழிந்துவிடு மாக்கை; உயிர் அழிந்துவிடும்;
அழிந்துவிடும் அசையாக்கலும்;
கழிந்துவிடும் நாள்; கதையாய்ப் போய்விடும் நம்
முத்யோகம்; கனவாம் வாழ்வே;
ஒழிந்துவிடும் பொருள்; இருப்ப தருளொன்றே;
நன்மையொன்றே உறுதி; ஈசன்
பொழிந்துவிடும் அருளறிந்து போய்ப்புனித
வருள்நிறைப்பீர் புவனத்துள்ளே. (௱கூ)

மற்றவர்பால் மதிபொருள்சீர் வாய்ந்திருந்தாற்,
பொறாமைகொளல் மதியில்லாமை:
உற்றொருவனது நினைக்கில், உலகுடையா
னருள்தன்னி லுயர்வாய் நோற்றுப்
பெற்றவரு மிருப்பாரே; தன்னிலுயர்
வியற்றுரிமை பிரானுக்குண்டே;
சற்றொருவன் றகைநினைக்கில் உற்றவைக்கே
தன்னுரிமை சாற்றொண்ணாதே. (௬௰)

குறைகொண்ட மனமுளதேல், முறையுண்டு;
முறையுளதேற், குறையுமுண்டு;
நிறைகொண்ட முழுமனமிங் கரிதெனினும்,
நிறைநோக்கி நேடலுண்டு:
சிறைகொண்ட சிறியவெனை இறைகொண்ட
பொன்னடியைச் சிந்தித்துள்ளே
கறைகொண்ட தறநீங்கக், கருணைமருந்
தெனக்குதவக் கருதுவேனே. (௬௧)

உன்முறைக்கு நலமளிப்பாய் உறுதியென
அறிந்துமுணர் வுறாததாலே,
என்முறைக்குத் தலைப்படுவ தென்விந்தை?
ஈச்அருள் இனிச்செய்யாயோ?
பன்முறையு மிடர்தடுத் தாண்டாயிலையோ?
வலியிழக்கும் பரவாநெஞ்சம்,
சொன்முறைக்கு முறையிலதேற் சொற்றுரும்பு
பிடிக்குமெனத் தொடுத்ததாமே. (௬௨)

தாயிருக்கப், பாலுமுடைத்தாயிருக்கத்,
தாவெனவே சாற்றுதற்கு
வாயிருக்க, வாடியதன் வயிறிருக்க,
முகமிருக்க, வழக்கில்லாமற்
சேயிருக்க மாட்டுவதோ? சிறியவெனைப்
படைத்திருக்கும் செல்வத்தாயே,
நீயிருக்க, நினதருளாம் பாலிருக்க,
முறையுரைக்க நியாயமின்றே? (௩௩)

வழுத்துமொரு வழியறியேன், வரங்கேட்க
வறியேன், என்வருத்தமெல்லாம்
பழுத்துருகிச் சொலவல்லே னல்லேன், பல்
வகைத்துன்பம் படர்ந்துபற்றிக்
கழுத்தளவு மானதன்பின் கடவுளெனக்
கருதிடுவேன் கடையேன், கற்றால்
எழுத்தளவு மறியார்மே லிரங்கவறி
யேன், என்மே லிரங்குவாயே. (௩௪)

கருத்தறியுங் குறைகளைநின் கழலிணைக்கே
யல்லாது கழறவேறிங்
கொருத்தரையு மறியேன், மற்றோர் துணையு
மில்லேன், இவ்வுலகில்யாதோர்
பொருத்தமெனக் குளதறியேன், பொன்னடி என்
னெஞ்சகத்தே பொருந்தவைப்பாய்,
நிருத்தமுடையா, யெனை நீதவறவிடா
யென்றெண்ணி நிற்கின்றேனே. (௩௫)

நிற்கின்ற நிலையறியேன், நிலையான
நெறியறியேன், நேர்மைசேரக்
கற்கின்ற வகையறியேன், கற்குன்ற
மனங்கரையக் காணேன், பொய்யே
நிற்கின்ற பழங்கூடை யொக்கின்ற
வைம்புலனும் விழலொப்பான
காற்கென்று மென்சுவையா யேற்றுவித்தா
யென்றெண்ணி யெய்க்கின்றேனே. (௩௬)

உடலெடுத்தா லுற்றசெயல் லொன்றுளதே,
அதுசெயநான் உரித்தானேனோ?
மடலெடுத்துங் காயளியா மரம்போல
வளர்தலென்னோ? வருத்தகன்மம
அடலெடுத்துச் செயத்தருமா றறிவளித்தும்
செயலிலேயேல், அமைந்த நாட்டைக்
கடலெடுத்துக் கொண்டகதியாமே, நானே
உழைக்கும் வழிகாட்டாய் மன்னே. (௩௭)

நண்டிருந்த வயல்பலவாய் நல்கியநெற்
கூட்டமெலாம் நமக்கேயென்றிங்
குண்டிருந்த நாளல்லா, துன்மகிமை
யுகந்தறிந்த உயர்ந்தநாளை
கண்டிருந்ததில்லை; கருத்துனதுகழ
லிணையிணைந்து கசிந்ததில்லை;
பண்டிருந்த பெரியவரைப் பார்த்தேனு
முனைப்பரவப் படித்திலேனே. (௩௮)

முனமிருந்த நிலையறியேன், பின்னதன்முற்
குறிப்பறிந்து முயலமாட்டேன்,
வனமிருந்த விலங்கெனநான் தினமிருந்த
பசிதணிக்கும் வகையேசூழ்ந்தேன்;
இனமிருந்த முதுவசனத் துணையிழந்து
தயங்குகின்றேன்; இனிநான்பொல்லா
மனமிருந்த வழிபோனால் நலம்வருமோ?
அருள்வழிநீ வகுப்பாய்மன்னே. (௬௯)

அலையொழிந்து கடலொருநா ளிருப்பதில்லை,
அருங்கவலை யலைக்குமாட்டந்
தொலையவொரு சுகம்வாழ்வு சுவைக்கவில்லை;
சுகம்பெறவே தொடர்ந்துசித்த
நிலைபொருந்த நல்வேலை நிகழ்த்தவில்லை;
நிமலனரு நெறியிற் சேரக்
கலைபொருந்தக் கற்பதில்லை, தலைவணங்கி
நிற்பதில்லை, கசடனேனே. (௭௰)

கிழக்கிருந்து மேற்கறியா வெறுமனத்தேன்,
கல்வியோடு கேள்வியில்லேன்,
வழக்கிருந்து பிடிப்பதெவன்? மதிகொடுத்து
நீவழியும் வகுக்காவிட்டால்,
முழக்கிருந்த உலகினில்யான் முயன்றுமொரு
நலமியற்ற முடிவதோ? சிற்
றழக்கிருந்து நெற்குவிய லளந்திடுமோ,
ஒருகையதற் குதவாக்காலே? (௭௧)

ஒருவாவியிருத்துவதும், பெருவாழி
யிருத்துவதும், ஒருகையாலே;
கருவாகமிசைப்பதுவும், பெருலோக
மசைப்பதுவுங், கையொன்றாலே;
அருவாகிப், பெரிதான உருவாகி,
உருவெல்லாம் அமைந்துநின்ற
திருவாளர் திருவருட்குச், சிறிதென்றும்
பெரிதென்றுந் திரிப்பதுண்டோ? (எஉ)

பலவான உயிர்களெல்லாம் பாழ்நெஞ்சர்
கையிலகப்பட்டுச் சோர,
நலவான சொல்லுதவி கொண்டவைதம்
நயந்தேடி, நாணுவேலே
செலவான தாகவெனப் பொருள்வருத்தம்
பேணாது செய்யநின்றால்,
இலவான கனிதருமென் றெண்கிளிக்குப்
போமெண்ணம் இலவாமென்னே? (எங)

திரைகடந்து செலவறியா மீன்போலத்,
தூநெறியைச் சேறற்குமாந்தர்
உரைகடந்து செலவறியாக் கோழையேன்,
உன்னருளென் னுள்ளேநாட்டும்
வரைகடந்து நடவாம லிருக்கும்வகை
யென்செய்வேன், மனபவாக்காதி
கரைகடந்து குளிர்ந்தெழுந்த மழைகருணைத்
தடங்கடலே கடவுட்டாயே? (எச)

இருநேர முணவில்லையேல் எழமாட்டா
இவ்வுடலை யிரங்கியூட்டி,
ஒருநேரந்தவறாது வளர்த்தனை; அவ்
வுதவியெலா முணர்ந்து, வாழ்நாள்
தருநேரம் நலமியற்று மருநேர
மெனத்தெரியேன், அடியேன் இன்னும்
வருநேரமாகிலும், நன்மதிகொண்டு
நலமியற்றி வரச்செய்வாயே. (௭௫)

வரங்குவித்த கையானே, மனிதனெனப்
பெயர்கொள்ள மகிழாநின்றேன்;
குரங்கு நடித்ததுபோல, நீகுறித்த
கதையல்லாற் கூத்தாடேனே;
அரங்கியற்றுங் கூத்தினிடை யாயினும், நான்
அணிவேட மவிழ்த்துவிட்டுக்
கரங்குவித்து, மனங்குவித்துன் கழல்நோக்கிக்
கசிந்துருகக் கற்பிப்பாயே. (௭௬)

இரங்குமன நிலையறியா திரங்குகவென்
றுனையிரக்க எழுந்தேன், பொல்லாக்
குரங்கெனமற்றவர் துன்பங் குறியாதே
கொடுமாற்றங் கூறிக் கோபம்
சிரங்கொதிக்கச் சீறுவன், ஓர் செந்நெறியிற்
சிந்தையுறேன், தெளிந்தார்போல
வரங்குறித்துக் கேட்பதுவே முறையலவா
யினுநானோர் மனிதனுமே. (௭௭)

மதியாதார் வாசலிலே மிதியர்போல்,
ஓரரிய மாண்பின்காலே
ஓதியாய வென்மனத்திற் பதியாது;
தன்னைநொந்தா லுரமுண்டாமோ?
விதியாது வருவதில்லை யொன்றுமிவ
ணுணுலும், விலக்குமின்றோ?
பதியாய நின்னடியைப் பரவுதலும்
என்றேனும் பயன்செய்யாதோ? (௭௮)

சாணுக்கி, முழமாக்கித், தவழ்கின்ற
மழலைமொழிச் சரீரமாக்கி,
ஆணுக்கி, அடியேனை அறிஞர்சபை
காட்டுவித்தாய்; அறிந்ததெல்லாம்
வீணுக்கிவிடுவாயோ, மெய்யறிவின்
பயனெனக்கு விளைவிப்பாயோ,
தூணுக்கித், துரும்பாக்கித், தோன்றுவதெல்
லாமாக்குந் தூயவாழ்வே? (௭௯)

இனியென்ற புஸ்தகத்தில் யாதெழுதி
எனக்கிட்டா யென்றுகாணேன்;
துனியென்ற துவர்காயோ, கனியென்ன
லாகுமொரு சுகமோ, சொல்லாய்;
சனிநின்ற வெப்பொழித்துத், தண்ணருளின்
றடநிழலிற், சகாயமின்றித்
தனிநின்ற எளியேனைத், தங்கிவரச்
செய்வாயோ தனிக்கோமானே? (௮௰)

கயங்கொண்டு காளிழுத்த காலையிலே,
காலனை நீ காலானீக்கிப்
பயங்கொண்ட வெனக்கபயம் பரிந்தளித்தாய்,
நின்னுரிமை பகரப்போமோ?
புயங்கொண்ட மட்டுமிடர் பொறுத்திருந்தேன்,
புண்ணியமும் புரிந்திலேன், சொன்
னயங்கொண்டு நவிலுரைக்க வறிந்திலன்; நீ
யறிந்துதவி நல்குவாயே. (௮௧)

பொய்கொண்ட வையகத்தே போர்கொண்ட
இடர்நெருக்காற் புழுங்கிநின்றும்,
மெய்கொண்ட நின்னடிக்கே மெய்யன்பு
கொண்டிலனாய், விருப்பினோடே
நெய்கொண்ட ஊண்வயிற்றுப் பைகொண்டு
நாட்கழித்தேன், நேயமுற்றார்
கைகொண்ட கனியே, என் மேலிரக்கங்
கொண்டருளக் கருதுவாயே. (௮௨)

அல்லெனவே வளர்ந்துபடர்ந் தென்னகஞ்சேர்
அறியாமை அகலப்போக்கிப்,
புல்லெனவே அகங்காரம் பறித்தெறிந்து,
பொய்ச்சருகைப் பொசுக்கிப், பாறைக்
கல்லெனவே கடுத்தபகை யுடைத்தருளாம்
நீர்பொழிந்து, கனக்குஞான
நெல்லெடுத்துப் பகுத்தருந்தி, நல்லதன்றிச்
செயாதிருக்க நிகழ்த்துவாயே. (௮௩)

உளங்குளிர உனைநினைக்க ஊற்றெடுக்கும்
உருக்கமதால், உண்மையன்பாம்
இளங்குருந்து தழைத், தறிவாம் இலைசெறிந்து
நிழல்பரப்பி, இன்பம்பூத்து,
வளங்கிளர அறங்காய்த்துத், தவங்கனிந்து
நலமருந்தும் வகை, யெஞ்ஞான்றும்
களங்கமிலா நிலைபொருந்த, விளங்குலவாக்
கருணையொளி காட்டுவாயே. (௮௪)

கடுமனத்தைக் கடுகடுக்குங் கடுமனமும்,
கடவுளுனைக் கருதாதென்றும்
விடுமனத்தை நம்புதலை விடுமனமும்,
அகச்சாட்சி விலக்கும்பாதை
தொடுமனத்தை நல்லறிவாற் சுடுமனமும்,
நிலையிழந்து சுழியாற்சுற்றப்
படுமனத்திற் பக்திநிறுத்திடுமனமுந்
தந்தெனைநீ பாலிப்பாயே. ௮௫)

சிறியவரென் றொருசிலரைச் சிரியாமற்,
செல்வத்தாற் செருக்கெய்தாமல்,
வறியவரென் றொருசிலரை வையாமல்,
மனத்தழுக்கு மருவாமாண்பால்
நெறியவர்மாட் டுளதாயின், எவரேனும்
நேயரென நினைத்துத், தோற்றம்
எறியவிடு முயர்நிலையி லிருக்குமன
மெனக்கருள்வா யிணையில்லானே. (௮௬)

ஒவ்வொருகால் அனுபவத்தா லொருபாடம்
படிப்பித்தா யொப்புவித்தேன்;
செவ்வொருசார் எனதுமன மவ்வழியே
செலத்திட்பம் சேர்ப்பாய்நீயே;
எவ்வரிய பொருளளிக்க யாரிருந்தா
ராலும், யாவுந்தாங்கும்
அவ்வொரு பேறளிப்பதற்கிங் காருமில்லை,
அந்நிலைமை யறிவாய்நீயே. (௮௭)

வனப்புடைய பொருள்களைநான் காண்பொழுதவ்
வனப்புனது வனப்பிற்சின்ன
இனப்பகுதி, அவ்வெழிலோ எல்லையிலை
சொல்லுவதற் கெட்டாதென்றே,
மனத்தவைதம் மயனீக்கி, அவையளித்த
நின்மகிமை மகிழ்ந்துநாடித்,
தினப்படிநான் உனைப்பரவித் தெருளடைய
வருளுகவென் சிந்தையானே. (௮௮)

உரந்தருவாய் உண்மைவழி உளமுறைக்க;
நின்னரிய உதவியீட்டத்
தரந்தருவாய்; சங்கடமாஞ் சேறுகொளுங்
குழிவிட்டுத் தப்பியேறக்
கரந்தருவாய்; நின்கருணைக் கலமேவி
இருங்கன்மக் கடல்கடக்க
வரந்தருவாய், வரவருஷம் பொழிகின்ற
மழைமுகிலே, வந்தித்தேனே. (௮௯)

ஒளிக்கின்ற கபடமெலாம் ஒழிக்கின்ற
வகையு, நெறி உயரச்சித்தந்
தெளிக்கின்ற வகையு, நலந் தெரியாத
எனக்கறிவைச் சேர்ப்பதெல்லாம்
அளிக்கின்ற வகையு, மெனக் களித்தவையி
லெனதுமனம் அமைதியுற்றுக்
களிக்கின்ற வகையும், அருட் கற்பகமே,
கனிந்தருளக் கருதுவாயே. (௬௰)

எய்யாத வாழ்வு, மிகல் வையாத
நெஞ்சு, முயிர்எவைக்கு மின்னா
செய்யாத தன்மையு, நின் செய்யவடித்
தொண்டரிடஞ் சிறக்குமன்பும்,
பொய்யாத நாவு, முயிர் கொய்யாத
கையு, முன்பொற் புகழைப்பாடும்
மெய்யான உடைமையுமே அய்யாநீ
தந்திடயான் விரும்புவேனே. (௬௧)

அல்லாத செயலனைத்தும் அறியாம
லிருத்தவும், நின்னடிக்காளாகி
நில்லாத மடநெஞ்சை நெறிப்படுத்த
வும், விரிந்த நிலத்தே பல்வாய்ப்
பொல்லாத நீசநெறி செல்லாம
லிருத்தவும், நின் பொற்றாள் நான்கொண்
டெல்லாநற் பேறடையும் அருளளிக்க
வும், விழைந்தேன் எளியனேனே. (௬௨)

இளைத்திருந்தால், எனக்குறுதி ஈந்தருள்வாய்;
ஏக்கமெனும் இரும்பேயென்னை
வளைத்திருந்தால், அதைநீக்கும் வகையருள்வாய்;
அகங்கார மமகாரங்கள்
திளைத்திருந்தால், அவையடக்கத் திடனருள்வாய்;
தீச்செயல்கள் தீயமாண்பால்
விளைத்திருந்தாற், பொறுத்தருள்வாய்; வியனருளோர்
துளிக்கெனை நீ விலைகொள்வாயே. (௬௯)

அயர்ந்திருந்தாற், றுயரொழிப்பாய்; உலைநலத்தே
நிலைகோணுந் துலைபோலாசை
உயர்ந்திருந்தால், நிறையருள்வாய்; உயர்நெறியாம்
உறுதிநெறி யுறுதுசித்தம்
பெயர்ந்திருந்தால், ஆண்டதிலே பிடித்திடுவாய்;
பேதையர்வாய்ப் பேச்சாலுன்னை
அயர்ந்திருந்தா, லறிவூட்டி ஆதரிப்பாய்,
அருள்பெறுமா றாக்குவாயே. (௭௦)

கொழுப்பிளமைப் பருவத்தே மனிதர்தனிச்
செயலெனநான் கொண்ட தெல்லாம்
முழுப்புரளி யெனவறிந்தேன், புனிதவுனை
யறியாமல் மோசம் போனேன்,
விழுப்பொருளெல் லாமுனது செயலெனப் பின்
புன்னருளின் விந்தையாலே,
பழுப்புவருங் காலமறி வெழுப்புவித்த
பரிவினையென் பகருவேனே? (௭௧)

எத்தனைதான் படிக்கினுமிங் கேதறிவோம்,
இருக்குமுல கெல்லாங்கொண்ட
தத்தனையு நின்செயலென் றறியோமேல் ?
அஃதறிந்தால், அடியேனுன்வான்
சித்தமுள வாறுவினை செய்வதறிவேன்;
பின்னென் சிந்தையெல்லாம்
இத்தனையாம், எனக்குநல மேதது நீ
அறிவாய் நான் ஏக்கற்றேனே. (௬௬)

நிலைபுரண்டு பக்திநெறி தவறும
விருப்பதுண்டேல், நேமிதன்னில்
மலைபுரண்டு வருகினுநான் மலைவதெவன் ?
மதிபொருளின் மதத்தாலென்புன்
றலைபுரண்டு பரவியநின் றயைமறந்து
விடவையேல், தாயே, ஐயா
தலைபுரண்டு வரங்கொழித்த அருட்கடலே,
இருட்கடலை அகற்றுவோயே. (௬௭)

வினைமறக்கச் செய்யினுமென், தனமறக்கச்
செய்யினுமென், விரும்பாநின்ற
மனைமறக்கச் செய்யினுமென், மகமறக்கச்
செய்யினுமென், மறக்கமாட்டா
எனைமறக்கச் செய்யினுமென், அனைமறக்கச்
செய்யினுமென் ? எல்லாமான
உனைமறக்கச் செய்யினது சகிப்பரிதே,
சகிப்பரிதே, ஒப்பில்லானே. (௬௮)

ஏகாந்த அருள்வலியால் உன்னுலகம்
ஒவ்வொன்று முதவி, அன்பர்
சோகாந்தங் காணவருந் துணையாகித்,
தீமையெலாம் சுத்தநேயத்
தீகாந்த வைத்தவித்துத், திருந்துமுளந்
தித்திக்கச் செய்துமோன
ஏகாந்தப் பெருவெளிக்குள் ளிருப்பவனே,
அடிமையுனக் கென்றும்நானே. (௬௬)

தேனாந்தும் பூஞ்சோலை செய்தானை,
அண்டநிரை சிறக்கக்காட்டி
வானந்தகாரத்தை மாய்த்தானை,
மானிடருள் வாட்டமெல்லாம்
ஞானந்தந் தோட்டுகின்ற நாயகனைத்,
தன்மையெலாம் நன்மையாம்ஞா
னானந்தத் தனிமுதலை, அருணிறைந்த
பெருங்கடலை, அறிந்துய்வோமே. (௭)

# விண்ணப்பமாலை.

என்னுயிர்காத்த பொருட்பதியே,
என்னையீன்றளித்த என்றாயே,
மன்னுயிரனைவர்க்கு மென்னையு மொன்றாய்
வைத்தவான் வள்ளலே, மசகம்
அன்னையான், இருந்த அறைகுதலறியா
மைந்தர்போல், அருட்பதத் துரைக்க
உன்னிய தறிந்தா யாயினுங்கேட்க
ஒப்புவாய், ஒப்பிலாமணியே. (௧)

என்னைநீ அறிவாய், உன்னைநானறியேன்;
என்னைநான் அறிந்திடினல்லால்,
உன்னைநானறிய ஓர்வழியுளதோ,
உரைமனங்கடக்கின்ற ஒன்றே?
முன்னையோர், அறிஞர், முனிவர், மந்திரத்தார்
முயன்றறியாவுனை எளியேன்
பொன்னுயிர் கண்ணென் றெத்தவல்லால்மற்
றுரையிலேன், புரையிலாமணியே. (௨)

ஆவிநீதந்தாய், அங்கநீதந்தாய்,
ஆவியை அங்கத்தே நிறுத்துஞ்
சாவியாம் அன்னத்திரளையுந் தந்தாய்,
சௌக்கியந் தயவினால் என்பால்
ஏவிநீதந்தாய்; இன்னமுநீயே
எவ்வித நன்மையுந் தந்தாற்,
பாவியேன் சுகிப்பேன்; பகரனான் செய்யற்
பாலதொன் றுள்ளதோ, பகரே. (௩)

மன்னுயிர் காத்தல் நின்னருள்வேலை;
மதிக்குநின் னருள் பெறமுயலல்
பன்னுயிரனைவும் பொறுத்த நல்வேலை;
பாங்கருள் பெறுவதற் கன்பே;
தன்னுயிர் போலப் பிறவுயிர்பேணித்,
தற்பரனுமுனை வழுத்தி,
என்னுயிர் காக்க இரத்தலென்கடனும்,
பரத்தனின் கடனுமா மிசைந்தே. (௪)

எளியனே னுனக்கோர் பொருட்டலேன், எல்லை
யில்லதா முயிர்க்கட லிடத்தோர்
துளியனேன், றாயநின் றிருப் பெயரைச்
சொல்லவுந் தகுதியொன் றில்லா
வெளியனேன், எனக்கே வெறுப்புளேன், நின்வான்
விதிப்பினால் இவ்வுட லெடுத்தேன்;
அளியனே, யென்னை நினைத்தல, நின்றன்
அளவிலா அருள்நினைத் தருளே. (௫)

உதவியொன் றில்லேன் உன்னதல்லாலிங்
கொருவரும் ஒப்புவாரில்லை;
சதமிலா வாழ்க்கைச் சாகரங் கடக்கத்
தலைப்படுவேன், உனைச்சார்ந்தேன்;
இதமிலா ஒன்றுன் னடைக்கலம் புகுந்தார்
இதயமும் வாட்டுதலென்றே ?
விதியென நினைத்தால், உன்னருள்வலியை
வெல்லவவ் விதிக்கிலை வலியே. (௬)

வலியிலா எளியேற் குன்னருள் வலியாய்
வருமென நினைந்துவந் திருப்பேன்,
எலியெதிர் பூனைகண்ட வாறிடர்கண்
டேங்கலும் நீங்கில தறிந்தாய்;
பொலிவுறு முன்பொற் கழல்நிழற் கிடைத்தாற்
புண்படுமோ மனம்? இன்னும்
நலிவுற என்றலாகுமோ, நலமோ
நாயினை நம்பினால் நலிவே? (௭)

ஒருதலையென்றன் அவதியே ஒறுக்க,
ஒருதலைப்பிற ரிடருறுத்த,
இருதலைக் கொள்ளி எறும்பென இளைத்தேன்;
எம்பிரான் உன் அருள் துணையாய்
வருதலைநம்பிப் பொறுத்தனன்; வருத்தம்
மதித்திலையோ? மறுதுணைநான்
கருதலைவிட்டுக் கடந்தனே, காக்கக்
கடனுனதலலவோ கனிந்தே? (௮)

இருட்டிலே கிடந்து தடவுதல் போலிங்
கென்னறியாமையில் வஞ்சர்
உருட்டிலே யகப்பட்டுயர் வழிகாணக்
குருட்டுவாழ் வெனதென உழந்தேன்;
திருட்டிலே, கொடியபுரட்டிலே, செல்வச்
சுருட்டிலே சிந்தைசெல்லாத
பொருட்டுனை நினைந்தேன், அருட்டுணை விழைந்தேன்,
பொன்னருள் புரிதலுன் பொறுப்பே. (௯)

முடவனே கொம்புத்தேன் விழைந்ததுபோல்,
முடிந்திடாப் பொருளினைத் தாசை
வடவனல் போலத் தினைத்தனன்; மதியென்
வழிப்படும் வகையெது செய்யக்
கடவனே? நின்பாற் கருத்தினைத்திருப்பிக்
கண்டவை கவர்ந்திடக்கருதல்
விடவெனக் குளதா முயர்வழி விதிப்பாய்,
மெய்யொளி வீசிய விளக்கே. (ம)

ஒன்றிரண்டறியேன், உடம்பெடுத்துற்ற
உழைப்பறியேன், உலகத்தே
நன்றுதீங்கறியா நாயினுங்கடையேன்,
நலமிலேன், நறுநெயுஞ்சோறுந்
தின்றுநான் கொழுத்தால் மாத்திரம் வருமோ
திருவருட்பே றலைத்தின்றி
என்றுதான், எவண்தான், எப்படித்தானென்
இனியொரு சுகம்பெறுவேனே? (மக)

சுகம்பெற வென்றுஞ் சோர்விலா முயற்சி
தோன்றிடல் வேண்டுமே; சோம்பல்
மிகமலிந்துற நான் இளைத்தனன்; வேதை
மேவிடின் வீரமுமில்லேன்;
அகமெலிந்திருந்தேன்; வலிய நின்னருளாம்
அருமருந்துதவினல், அடியேன்
செகமிசைச்சீவ னுடையவனவேன்,
சித்தமெவ்விதந் தெரியேனே. (மஉ)

சுகந்தரும் பொருள்கள் தோன்றினுமென்ன,
சுகத்தினைச் சுகமெனவறியும்
அகம்பெறு ஞானக்கண் தரவிலையேல்?
அந்தகர் அழகறிந்தெனவாம்:
முகந்தரும் எழிலல்லாது கண்ணாடி
காட்டுமோ? முன்னைநீ முடிப்பிட்
டிகந்தர வைத்த இன்பமல்லாதிங்
கென்னையொன் றணைகுவதிலையே. (௰௩)

கொடியனாயினக்கக் கடுமையொன்றில்லேன்;
குறிப்பிலேன்; கருணைகூர்ந் தென்பால்
வடியவென் மனத்தே தோன்றிய விரக்கம்
மறித்திடல் உன்வரமாமே;
அடியனோர் நலமுந்தீங்குமிங் காற்ற
அசக்தனே; அறிதுறையில்லாப்
படியிலே யென்பா டனைத்து நீ அறிவாய்,
நின்மனப்படி யெனைப்பயிற்றே. (௰௪)

தீது செய்யாது தீதினைப்பொறுக்கத்
திட்பமுந், தெளிந்தடைந்தவற்றில்
வாதுசெய்யாது மகிழ்தருமனமும்
வரவிலை நமக்கொரு நன்மை
ஆதலின் நன்மை நாம் செயவேண்டாம்
என்றிடாமதியும், அன்பெவர்க்கும்
ஈதலேதொழிலா யிருக்கு நல்வாழ்வும்
ஈகுவாய், ஏழையுடையானே. (௰௫)

நன்மையாணியற்ற ஞானமும், நலமல்
லாததை விரும்பிடாதிருக்குந்
தன்மையு மருள்வாய் தாயனே; என்மேல்
தயவுபின் அவைவருந் தாமே;
புன்மையேன் அவ்வாறுன் றயவுறவோர்
புண்ணியஞ் செய்திலேனாகில்,
சென்மநான் என்ன செய்வதற் கெடுத்தேன்,
தெய்வமே, செயலறியேனே. (௰௬)

செய்வகை யறியேன், செய்வினை செய்யச்
செய்வதும் உன்னருட் செயலே;
மெய்வகையறிவும், மெய்வழி நடக்க
வீரமும் வேண்டுமே; விரிந்த
பொய்வகைவிட்டுப் போந்திடப் பொறுத்த
புண்ணியம் வேண்டுமே; அவ்வா
றுய்வகைகாட்டி உற்றநலெல்லா
முதவுதல் உனதருட்கடனே. (௰௭)

கடனவை காணக் காட்சியுங், கடனைக்
கருத்துடன் செய்வதற்காகுந்
திடனுமீ யருளல் தேவை; செய்வகைநான்
செய்யினுந், திருவருளாலே
விடனென இருந்தேன் அழைந்தவை பெற்றேன்
என்றறி விவேகமும் பெற்றேன்
னுடனகங்காரம் உறைந்திடாவகையும்,
உனதருள் வேண்டுமே எந்தாய். (௰௮)

வம்பிரான், நலமேவழங்குவான், உயர்வே
நாடுவான், மதிகெடக் கர்வக்
கொம்பிரான்; கொடியர் கொலை புலையுள்ளார்
கூட்டிரான், குற்றமேபுரியான்,
தம்பிரான்சொலினுந் தன்னெறிதவறான்
றன்மனச்சார்பினை யென்றும்
எம்பிரான்றன்பால் இருத்துவான் என்ற
இசையின்றேல், இசைவிரும்பிலனே. (௰௯)

சத்தியந்தவறா நிலையளித் தென்னைத்
தாங்கிய பூமிபோலென்பால்
நித்தியங்காணும் பிழையெலாம் பொறுத்து,
நின்மலமென் மனமாக்கிப்,
பக்திநின்பதத்தே பற்றுறப் பணித்துப்,
பரதவிப்பறும் பதமான
முக்தியைத்தரும் வான்வித்தெனக் களிப்பாய்,
முத்தனே, சித்தமார்ந்தவனே. (உ௰)

# பதியுண்மை.

———:0:———

மதியொன்றினாலிந்த வாழ்க்கையையாள வகுத்துவிட்ட
விதியொன்றினால் விளையாடப்படாத உள்வீரமுற்றுக்,
கதியொன்று தாம்பெற உன்னுகின்றோர், இருட்கட்டறுத்துப்
பதியொன் றுலகத்திற்குண்டோ என்றுயாப பசிப்பவரே. (க)

கண்ணாலறியப்படா வொன்றைக்கண்டு கதியடைய
எண்ணார்மதியின ரென்னினுங், காண்பொரு ளெய்தியபோல்,
உண்ணாடி ஞாயவனுமானத்தால் உற்றறிவதுண்டேல்,
நண்ணாததனை நழுவல் மெய்யாளர்க்கு நல்லதன்றே. (உ)

மனங்கொண் டுழைக்கொரு நூலாக்குவோனைப் பொருளொருவன்,
தினங்கொண் டவ்வேலைசெயு மிடையே, தொடரச் சிலநாள்
அனங்கொண்டிடாதிருந்தால் அவனெண்ணம் அமைவதில்லை;
முனங்கொண்ட திண்மையுமில்லை, மெய்வேலை முடித்திடவே. ()

அன்னாளை யப்புற முன்போல் அமுதிட்டருந்தவைத்தாற்,
சின்னாட்கழிய முன்போலவன் சித்தந் திடமுற்றதே;
தன்னாலியன்ற மெய்வேலையுஞ் செய்யத் தகுதிபெற்றான்;
முன்னாளிலா அவனுள்வலி யெங்கு முளைத்ததுவே? (ச)

எக்காரியத்தை எடுத்திட ஓர் பொருளெய்திலதோ,
அக்காரியம் பின்னமைந்திட அப்பொருளாவதுண்டேல்,
பொய்க்காரியமன்று, தப்பாதக்காரியம் அப்பொருட்கு
மெய்க்காரணமென்று நாட்டினர் ஞாயம் விரித்தவரே. (ரு)

சூனியத்தாலொன்று வாரா தொருபண்பு தோன்றிடுமேல்,
மேனிலைப் பண்புண்டு காரணத்தே; குறை மேவிடுமோ?
ஊனியக்காநின்ற ஊக்கமு முள்ளத்திடமு முண்ணுந்
தானியத்தால் வருமென்பதற் கென்ன தடையுளதே? (௬)

என்றால் மனவலியின் காரணமுன் பெடுத்துரைத்த
அன்றுடமுண்ணும் அமுதாக, அந்த அமுதுக்குள்ளே
நின்றுளுஞ் சித்தவலியெங்கு தன்னிலை முன்பெற்றதோ.?
இன்று யதற்குண்டு நன்றுயுலகத் தெழுவதற்கே. (௭)

உண்பொருள் நோக்கிற் பலவகையாம்; அவையொவ்வொன்றுமே
மண்பொருளாக்கித், தண்ணீர் வெயில் காற்று வளமளிக்கத்,
திண்பொருளாக வளருவதால், மறைவாம் சித்சக்தி
ஒண்பொருள் எங்குண்பொரு ளுளதோ அங்கொளிர்கின்றதே.()

உடல்பெற நற்கருவிப் பொருளாகின்ற உண்பொருளே
மடல்பெறு நீண்டமரமாகும், ஊதவளை புல்லுமாம்;
இடல்பெறு வித்தினும், வித்திடலின்றியும் எய்துமிவை;
கடல்பெறு நீரினுங் கான்பெறு மண்ணினுங் காண்பதுண்டே,()

புல்லாயினு முளைக்கொண்ணு விடம் இப்புவியிலில்லை;
கல்லாயினும் பொடியாமாயின், நீரொடு காற்றிருக்க
நெல்லாதி யுண்பொருள் தோன்றவிசையும் நிலமதுவே;
எல்லாப்பொருளும் வளமாம் புல்லாதி எழுவதற்கே. (௰)

உடம்புற்று வாழுயிரெல்லாம் உடம்பின்வழி உளத்தின்
திடம்பெற்று நிற்றல் உணவாலெனின், திண்மைசேருணவும்
இடம்பெற்ற தெங்கணுமாயின், நினைவுறும் எச்சித்தமும்
கடம்பெற்ற சித்தசக்திக்கட லெங்கணுங் கண்டிடுமே. (௰௧)

பெரியதினாற் சிறிதுண்டாம்; சிறிதும் பெரியதின்றி
அரியதுவாம்; சித்தசக்திக் கடல் இவ்வகிலமெங்கும்
உரியதுவாய், உயிரெல்லாம் நிறைந்துணர்வீதல் உற்றுத்
தெரியநின்றார், மறப்பாரோ அச்சித்தின் சிறப்பினையே? (௰௨)

# நினைவாட்சி.

(அருளேயெல்லாம்)

ஒன்றென்றறி, பலவென்றறி, காணு முலகமெலாம்
சென்றென்று மொன்றென்றறி, அருளே: அதுசேர்ப்பதெல்லாம்
நன்றென்றறி: ஒன்றும் நன்றுமல்லாற் பின் நவிலுவதற்
கின்றென்றறி; அவ்விரண்டுமொன்றே, அருளென்பதுவே.

(சமயவொற்றுமை)

எண்ணுற்ற நால்வர் ஒருமலை காணுதற் கேற்படவே,
திண்ணுற்ற பாறையொருவன், மரத்தின் றிரளொருவன்,
தண்ணுற்ற ஓடையொருவன், பறவை தனித்தொருவன்
கண்ணுற்றபோல், பல்சமயத்தர் காண்பர் கடவுளையே.

சமயமெல்லாம் அடிக்கட்டில் ஒன்றே; அது சத்தியமே;
அமைவதெல்லாம் ஒருசக்தியென்றும், ஒன்றகிலமென்றும்:
உமையொருபாகனுங் கண்ணனும் வேறலர்: ஓர்பொருளை,
தமதென, வேறு மனங்களில் வேறெழும் சாயைகளே.

கோவில்மட்டோ குடிகொண்டது தெய்வம்? கொடிசெடியிற்,
பூவிலுண்டே, அகப்பூவிலுண்டே, வன் பொருப்பிலுண்டே,
காவிலுண்டே, பைங்கிளிகளின் பாட்டிற் கலந்ததுண்டே,
நாவிலுண்டே, செய்யும் பாவிலுண்டே, மெய்ந் நவில்பொழுதே.

(பதியின் மாட்சி)

தள்ளுண்ட புல்லினும் தண்ணருள் நாட்டிய தத்துவத்தை
உள்ளுண், டதிசயம்ஊறிப் பெருங்களிப் போங்குவதால்
கள்ளுண்ட வன்கிறுக்காயின், கருத் தெங்கதிபடும், மற் [னே?
றெள்ளுண்ட எண்ணெயின் எங்குநின்றான் செய்தமெதண்ணிடி

சோலையைப்பார், பகற்சோதியைப்பார், அகச்சோதியைப் பார்,
காலையைப்பார், அண்டமாலையைப்பார், புவிகாப்புடைய
வேலையைப்பார், அருள்வேலையில் வேறெதுவேனும் ஒரு
மூலையைப்பார், நின்சிறுமையும்பார், பக்தி மூண்டெழுமே.

கானகத்தே கண்டகாட்சிகள் ஆங்கருள் காட்டியதே;
வானகத்தே மிளிர்மாட்சிகள் ஆங்கருள் மாட்டியதே;
ஊனகத்தே கொண்ட ஊக்கங்கள் ஆங்கருள் ஊட்டியதே;
நானகத்தே நின்றதோற்றமும் ஆங்கருள் நாட்டியதே.

கதிர்தரும் ஞாயிற்றின் காந்தியும், ஈசன் கலையிலெழும்;
முதிர்தரும் உள்ளொளி பேசாதமோனத்தின் மூண்டவொளி;
அதிர்தரும் அச்சஇடியொலி, அம்புள் அசைக்குமொலி,
எதிர்தரு நாதமெல்லாம் அண்டநாதத் தெழுந்தனவே.

ஞானந் தெளிகின்ற போதும், மகானந்தம் நம்மிலெழக்
கானந் தெளிகின்ற போதும், பெருந்தன்மை, கற்பு, மெய்ம்மை,
தானம், தவம், உயர்வீரம் விளங்குந் தனிப்பொழுதும்,
வானந் திறந்ததுபோற் காணும் முன்னவன் மாட்சிமையே.

வல்லாரியற்றிய மாவேலையுள்ளும், மனமறிந்து
நில்லாநிலை யொன்றுளதே; அந்நன்னிலை நேரப்பெற்றார்,
சொல்லாத சொல்லும், சுகியாச் சுகமும் துலங்கவைப்பார்,
எல்லாக்கலையிலும் எம்பெருமான் நின்ற வெண்ணிலையே.

எங்கும் பரம்பொருளாகுமென்றால், அதிருக்குமிடம்
தங்கும் சதானந்தமென்றால், அவ்வானந்தத் தண்ணமுதே
பொங்குங் கடலெனப் போமாறெலாமுண்டு ; பூக்கடற்குக்
கங்குங்கரையு முண்டக் கடலுக்கவை காண்பரிதே.

முற்றாப்பெருங்கடல், மோதாப்பெருங்கடல், மொய்யனல்போல்
சுற்றாது சுற்றும் பெருங்கடல், ஸ்தூலமும் சூக்ஷ்மமும்
பற்றாதுபற்றும் பெருங்கடல், சீவர்கள்பாற் கருணை
வற்றாப்பெருங்கடல், மாண்பெனுந் தேன்கொண்டவான்கடலே.

அகத்தே நெகிழ்வும், புறத்தே இறுக்கமு மாம்புளிபோல்,
ஜகத்தே பரம்பொருள் ஆத்மாஜடம் தானென நின்றதே ;
முகத்தே புளிப்பொருள் பல்பொருளாய் உருமூண்டதுபோல்,
மகத்தாம் பரம்பொருள் பல்லுயிராய் உருமாறியதே.

வெவ்வேறு மண்ணாறு நாட்டிற் பரந்திடும் வெள்ளமொன்றே
அவ்வேறிடத்திற் கியைந்த இயல்புற் றமைவதுபோல்,
எவ்வேறுலகும் உயிரும் நிறைந்த இறை யமைந்து
செவ்வே அதிலதிலோர் பண்புகொண்டு திகைப்பித்ததே.

விண்ணாரும் அண்டக்குழுவும், அகண்டவெளியும், இந்த
மண்ணாருயிர்களும், பண்டமும் சூடுமகிமை யென்றன்
கண்ணாரக்கண்டும், கடவுளுண்டென்னக் கரியெதற்கோ ?
எண்ணாதகோடியும் சொல்லும் அவ்வுண்மை எடுத்தெடுத்தே.

ஒன்றாம் மணிதனில் உள்ளுடலூற்றம் உயிர்நிலைகள்
நின்றாள்வபோல், வரம்பெய்தா அகிலத்தில் நீக்கமிலா
நன்றாஞ் சிவத்தில், அகம்பொருளாதி நடுவியக்கும்
பொன்றாத ஆற்றலும், நன்முறைப் பாங்கும் பொருந்தியவே.

மண்ணளித்தான், புல்மர மளித்தான், நம்மனமளித்தான்,
கண்ணளித்தான், கைகளையளித்தான், கண்கள் காணுமொளி
விண்ணளித்தான், விண்ணுமண்ணுங் கொள்கோடி வியப்பளித்
தண்ணளிச்சாகரன், எண்ணருங்கோடிக்குந் தந்தையனே. [தான்,

ஒளியாரிடத்தில் மறைவாய், மறைவில் ஒளியினனாய்த்
தெளியாரிடத்தில் உறவாய்த், தெளிந்தவர் தெள்ளமுதாய்,
அளியாரிடத்தில் அமைகினும் தான் அங்கமர்பவனாய்,
எளியார்தமக் கெளியானாய் நின்றான் எம்மிறையவனே.

அறியார்க்கும், மிக்கஅறிவார்க்கும் ஈசன் அறிவிக்கின்றான் ;
சிறியார்க்கும், சீர்த்த பெரியார்க்கும் நீதிசெலுத்துகின்றான் ;
வறியார்க்கும், செல்வம் மலிந்தார்க்கும் நேயம் வழங்குகின்றான் ;
குறியா தொருவரையேனும் விடான் எண்குணத்தவனே.

(படைப்பின் பயனாராய்ச்சி)

படைக்கின்றதீசன் திருவிளையாட்டுப் ; படைத்தவையைத்
துடைக்கின்றதீசன் விளையாட்டுமாறல் ; இத்தொல் வினையால்
கிடைக்கின்றநன்மை அங்கென்னை யென்பாருளர் ; கேளிசெய்து
சடைக்கின்ற காலமுமின்றோ அச்சர்வ தயாபரற்கே ? ௨௰

நன்றே அவ்வீசன் நடத்துவதாகும் ; நலனலனாய்
என்றேனுமீசன் இருக்கின், அதீசன் இருப்பலவாம் ;
ஒன்றே நம்மீசன் உத்தேசமென்றால், அந்தஒன்று நன்மை
யன்றாயிருப்ப திலையே ; அதென்னென் றறைகுவதே ?

மற்றவர்க் கொன்றின்றித் தன்னயந்தேடல் மனிதர்க்கல்லால்
மற்றறிவோற் கில்லை ; எல்லாவுயிர்க்கும் முளைக்கும் நன்றே,
சொல்லாறிநன்றில் உயர்ந்தநன்றாம் ; அவ்வுயர் நன்றலாற்
எல்லாக்கும் குறைபட எண்ணுவனோ அத்தயாபரனே ?

எவ்வாருயிருக்கும் ஒவ்வோர் தொழில்கண்டங் கேற்படுத்திச்,
செவ்வே அதின்செயல் நோக்கிநின்றான், பெருஞ்சித்துடையான்;
வெவ்வே றடுக்குத் தொழில்கள் வெவ்வேறு விதங்கிளம்பி,
ஒவ்வாது போலிருந்தெல்லார் நலத்திற்கும் ஒவ்விடுமே.

ஒவ்வோர் பொருளினும் ஒவ்வோர் நலத்தை யுதிக்கவிட்டுச்,
செவ்வையுலகஞ் செழிக்கச் செய்தான், பெருஞ்சித்துடையான்;
அவ்வப்பொருளினுந் தானிலன்போ லிருந்தாட்டி வைத்துக்,
கவ்வைக் கடலிற் கலவா தகிலங் கலந்தனனே.

எல்லாரும் இன்பம் விரும்பல் இயற்கையின் ஏவலென்றால்,
பொல்லாங் கியற்கைக்கு மாறாட்டம்; அத்துடன் போர்செயலே
நல்லாறு சேர்ந்த இயற்கைத் தலைவன் நடபடியாம்;
வெல்லாது தீங்கதை, நன்றே இறுதியில் வென்றிடுமே.

புடைசூழ் நிகழ்ச்சிகள் தம்வாழ்வியற்குப் பொருத்தமென்று
நடைசூழ்ந்து, தன்னெறிதான் பிசகாது, நலஞ்செயற்கே
இடைசூழ்ந்து செல்பவர் செல்வழிக்கொன்றும் இயற்கைநின்று
தடைசூழ்வதில்லை, தன்னைத்தாசை செய்யும், தகைகொணர்ந்தே.

அழுக்கென்ப, மண்ணூற்று, நாளேறத் தாவரமானவைக்கும்,
புழுக்கட்கும் நல்லுணவாய் உருமாறுதல் போல், மனிதர்
இழுக்கங்கள் தாமும், உலகத்திற் கீசன் இசைக்கும் நன்மை
யொழுக்கினை ஓங்கச்செய் யூற்றாகும், ஈசன் ஒழுங்குகொண்டே.

எல்லாவுயிரும் சுகம்பெறல் ஈசன் எண்ணும் முடிவாய்ப்,
பல்லாயிரம்வழி அச்சுகம் எய்தப் பயிற்றுகின்றான்;
பொல்லாங்கினோடு பொருதுதற்காகின்ற போர்ப்படைஞர்
அல்லாதவரென்று அவன்படைப்போரில் இங்காருமின்றே.

(அருளாட்சி)

காராளலின்றிப் பயிரில்லை, அப்பயிர் காதலித்துச்
சாராகக் கொண்ட உயிரில்லை, அவ்வுயிர்த் தாகமற
நீராரும் பல்வகை யூற்றுச்சுனையில்லை ; நேயனருள்
பாராளுமுண்மை, இதாராய்ந்து பார்ப்பவர் பார்ப்பரன்றே.

கணமேனும் நாட்டின் வளநாடியன்றிக் கழியவிடான் ;
தணமேவும் வெண்குடைக்கீழ்க் குடிதங்கத், தருமநெறி
பணமேனும்,பாடுபதமேனும் பார்ப்பின்றிப்,பார்க்குமன்போல்,
குணமே கருதி உலகுந்திறன், எண்குணமன்னனே. ௩௰

இப்பாநிலத்தில் நடக்கின்ற சக்திகள், எவ்வெவையும்,
எம்மான் படைப்பு ; அவைக்கெம்மாற் றரத்தக்க தெள்ளளவும்
கைம்மாறிலை ; அதுநாம் மறந்தோம் ; நம் கவனமெல்லாம்
சும்மாட்டுக்காரன் மனம்போல், எடுத்ததிற் றாங்கிடுமே.

நெருக்குண்டு, புண்பட், டுழைப்பாற்புழுங்கி, நிலைகுலைய
இருக்கின்ற நாம் நமைப்போல்வார் செயும்பொருளேறிடவே
கருக்கென்று போவதல்லால், ஈசன் வான்செயல் காணவென்றால்
உருக்கென் றுறைகின்ற பேதைமை நாம் என்றொழிக்கின்றதே?

நம்மாலெழுந்தது தோட்டமென்பார் ; வித்து நட்டதல்லால்,
தம்மாற் படைத்த தொன்றில்லை ; தண்ணீர்விட்டுத் தம்மனையிற்
சும்மாயிருப்பார் ; எழுமு, டிலை, காய், சுவைக்கனிகள்
எம்மான்படைப்பு ; அவனின்றெனிற், கையு மெடுப்பதெங்கே ?

சுயப்படல் நீக்கிக் கவனிக்கின், தோன்றிய தோற்றமெல்லாம்
வியப்பதற்கே வகையாம் ; நம்சிறுகுறை வீசிவிட்டால்
நயப்படும் ஈசன் செயலறிவோம் ; அதை நம்பிக்கொண்டே,
செயப்படும்வேலை வியப்பொழ வோங்கித் திகழ்வுறுமே.

கடவுளில் நாமொருபங்கென எண்ணின், நம்கர்மத்திலே
திடவுளமையும், சிறுமையுறாது அகல்சித்தங் கொள்வோம் ;
கடவுளில் நாமொருபங்கே யென்றெண்ணின், நம்கர்வமெல்லாம்
விடவுள் கடவுள் செயல்நோக்கப் பக்தி விளைவுறுமே.

வேற்றுருக்கொண்டவன், வெயிடத்தால், உயர்விண்ணகத்தான்
சோற்றுருக்கொண்ட நம்மெய்யிடத் தீசன் தொடக்கமிலான்,
காற்றுருவானவன், என்றிருப்போர் செய்வர் கண்டவெலாம் ;
வீற்றிருக்கின்றனன் உள்ளத்தில் என்பவர் மேலவரே.

ஏருண்ட பாரில் எளியாருழைக்க, இருங்கடலின்
நீருண்ட காருண்ட நெல்லுண்டு, நாம் உயிர்நீள நின்றோம் ;
ஊருண்ட ஊனுக்குக் கைம்மா றுண்டோ ? நன்றி யுச்சரிக்க
ஆருண்டு ? தின்பதற் கெத்தனை பேருண் டிவ்வண்டத்திலே ?

மடங்கியகால் நிமிர்ந் திப்புவி வீழ்ந்திந்த வாழ்வறியத்
தொடங்கிய நாள்முதல், இந்நாள்வரைக்கும், தொடருமுடல்
நடங்கிவிடா தளித், தேராளமின்பம் நுகரவைத்த [னே ?
தடங்கலும் எண்ணின், அவ்வன்புக் கெம்மாற் செய்யலாவதென்

(பதியின் செயல் வியப்பு)

ஒருநாள் திருச்செயலாராய்ந், தென்னுள்ளம் உருகிநின்றால்,
திருநாளதாம் ; மற்றைநாள் வெறுநாள் ; அருள் தேடியநாள்
அருநாள் ; அறிந்தவன் தொண்டுசெய் தையன் அருள்கிடைக்க
வருநாள் பொன்னாள் ; அதற்கெந்நாளும் ஈடு வருவதின்றே.

செயல்கண்டு கொள்ளின், திருச்செயல் காண்க ; நம் சீவன்றரும்
வயல்கொண்ட நெல்முதல், வான்கொண்ட மீன்கள்வரைக்கும், [இப்பால்
கயல்கொண்ட கண்முதல் ஞானக்கண்வாய்ப்புங் கருதுக ; இம்
மயல்கொண்ட உள்ளக்கருவியும் ஈசன்றன் வான்செயலே.

சய

திண்பார்க்கும் ஈசன்றிறம் பார்க்கவேண்டில், திகழுகின்ற
விண்பார்க்க; மெய்யின் விசித்திரம்பார்க்க; நம்மெய்யொடுங்கும்
மண்பார்க்க; மண்ணின் வளம்பார்க்கப்; பார்க்குமிம்மாண்கருவிக்
கண்பார்க்கப்; பின்கருதிப்பார்க்கச் செய்த தெக்கையெனவே.

ஒவ்வொரு காட்சியும் நம்மனப் பெட்டியிலோர் படமாம்;
செவ்விய ஞாபகக்கண்ணாடி அங்கு திருப்பிவைத்தால்,
அவ்வருங் காட்சியை ஓர்கின்ற பெற்றி அநுபவமாம்:
திவ்வியஞானமு முண்டாகும் ஆய்கின்ற செம்மதிக்கே.

எண்ணம்பிறக்கவும், எண்ணிய செய்வதற் கேற்றமனத்
திண்ணம்பிறக்கவும், செய்வினைமாட்டாது சீர்குலையா
வண்ணமிருக்கவும், செய்வாய் தடையின்றி வாய்த்திடவும்
தண்ணந் திருவருள் வேண்டும், ஒவ்வோர் சிறுதட்டிலுமே.

சக்திகளெத்தனையோ சேர்ந்துதாங்கின தானையைப்போல்;
சித்திரமாங் கொலு மூளை; அவ்வான்றுறைச் சேவையிலே
எத்தனையோ துறை; மத்தியில் ஆத்மஇறை மகுடம்
வைத்தது பார்மின்! உடலொரு நாட்டினை மானுமன்றே!

அறிவாய மூளையின்றோன்றல் அரசுக் கரசிகொள்ளப்
பொறிவாயின் ஐவர்களாம் உணர்ச்சியைப் போய்நயந்து,
செறிவாய ஐவர்இசைய, வினைதுணி திட்டமெனும்
குறிவாய்ந்த தாலிபுனைந்தக் குமாரியைக் கொண்டனனே.

அகத்தாங் கரணங்கள் சிந்திக்கும் மூளைக் கருந்துறைகள்;
மகத்தாம் அறிவுக் கடுத்தவை; ஐந்துவகைப் புலனும்
ஜகத்தா முணர்வைத்தரும் கல்விச்சாலைகள்; சாதகம் பார்
முகத்தே மனிதருக் கென்னுண் டிவ்வான்ற முறையின்றியே?

மண்ணளித்தான், புல்மர மளித்தான், நம்மன மளித்தான்,
கண்ணளித்தான், கைகளையளித்தான், கண்கள் காணுமொளி
விண்ணளித்தான், விண்ணுமண்ணுங் கொள்கோடி வியப்பளித்
தண்ணளிச்சாகரன்,எண்ணருங்கோடிக்குந் தந்தையனே. [தான்,

ஒளியாரிடத்தில் மறைவாய், மறைவில் ஒளியினனாய்த்
தெளியாரிடத்தில் உறவாய்த், தெளிந்தவர் தெள்ளமுதாய்,
அளியாரிடத்தில் அமைகினும் தான் அங்கமர்பவனாய்,
எளியார்தமக் கெளியானாய் நின்றான் எம்மிறையவனே.

அறியார்க்கும், மிக்கஅறிவார்க்கும் ஈசன் அறிவிக்கின்றான் ;
சிறியார்க்கும், சீர்த்த பெரியார்க்கும் நீதிசெலுத்துகின்றான் ;
வறியார்க்கும், செல்வம் மலிந்தார்க்கும் நேயம் வழங்குகின்றான் ;
குறியா தொருவரையேனும் விடான் எண்குணத்தவனே.

(படைப்பின் பயனாராய்ச்சி)

படைக்கின்றதீசன் திருவிளையாட்டுப் ; படைத்தவையைத்
துடைக்கின்றதீசன் விளையாட்டுமாறல் ; இத்தொல் வினையால்
கிடைக்கின்றநன்மை அங்கென்னை யென்பாருளர் ; கேளிசெய்து
சடைக்கின்ற காலமுமின்றோ அச்சர்வ தயாபரற்கே ? உ௰

நன்றே அவ்வீசன் நடத்துவதாகும் ; நலனலனாய்
என்றேனுமீசன் இருக்கின், அதீசன் இருப்பலவாம் ;
ஒன்றே நம்மீசன் உத்தேசமென்றால், அந்தஒன்று நன்மை
யன்றாயிருப்ப தில்லையே ; அதென்னென் றறைகுவதே ?

மற்றவர்க் கொன்றின்றித் தன்னயந்தேடல் மனிதர்க்கல்லால்
முற்றறிவோற் கில்லை ; எல்லாவுயிர்க்கும் முளைக்கும் நன்றே,
சொல்லாறிநன்றில் உயர்ந்தநன்றாம் ; அவ்வுயர் நன்றலாற்
எல்லாக்குங் குறைபட எண்ணுவனோ அத்தயாபரனே ?

மண்ணளித்தான், புல்மர மளித்தான், நம்மன மளித்தான்,
கண்ணளித்தான், கைகளையளித்தான், கண்கள் காணுமொளி
விண்ணளித்தான், விண்ணுமண்ணுங் கொள்கோடி வியப்பளித்
தண்ணளிச்சாகரன், எண்ணருங்கோடிக்குந் தந்தையனே. [தான்,

ஒளியாரிடத்தில் மறைவாய், மறைவில் ஒளியினனாய்த்
தெளியாரிடத்தில் உறவாய்த், தெளிந்தவர் தெள்ளமுதாய்,
அளியாரிடத்தில் அமைகினும் தான் அங்கமர்பவனாய்,
எளியார்தமக் கெளியானாய் நின்றான் எம்மிறையவனே.

அறியார்க்கும், மிக்கஅறிவார்க்கும் ஈசன் அறிவிக்கின்றான்;
சிறியார்க்கும், சீர்த்த பெரியார்க்கும் நீதிசெலுத்துகின்றான்;
வறியார்க்கும், செல்வம் மலிந்தார்க்கும் நேயம் வழங்குகின்றான்;
குறியா தொருவரையேனும் விடான் எண்குணத்தவனே.

(படைப்பின் பயனாராய்ச்சி)

படைக்கின்றதீசன் திருவிளையாட்டுப்; படைத்தவையைத்
துடைக்கின்றதீசன் விளையாட்டுமாதல்; இத்தொல் வினையால்
கிடைக்கின்றநன்மை அங்கென்னையென்பாருளர்; கேளிசெய்து
சடைக்கின்ற காலமுமின்றோ அச்சர்வ தயாபரற்கே? ௨௰

நன்றே அவ்வீசன் நடத்துவதாகும்; நலனலனாய்
என்றேனுமீசன் இருக்கின், அதீசன் இருப்பலவாம்;
ஒன்றே நம்மீசன் உத்தேசமென்றால், அந்தவொன்று நன்மை
யன்றாயிருப்ப தில்லையே; அதென்னென் றறைகுவதே?

மற்றவர்க் கொன்றின்றித் தன்னயந்தேடல் மனிதர்க்கல்லால்
மற்றறிவோற் கில்லை; எல்லாவுயிர்க்கும் முளைக்கும் நன்றே,
சொல்லாறிநன்றில் உயர்ந்தநன்றாம்; அவ்வுயர் நன்றலாற்
எல்லாக்குங் குறைபட எண்ணுவனோ அத்தயாபரனே?

எவ்வாருயிருக்கும் ஒவ்வோர் தொழில்கண்டங் கேற்படுத்திச்,
செவ்வே அதின்செயல் நோக்கிநின்றான், பெருஞ்சித்துடையான்;
வெவ்வே றடுக்குந் தொழில்கள் வெவ்வேறு விதங்கிளம்பி,
ஒவ்வாது போலிருந்தெல்லார் நலத்திற்கும் ஒவ்விடுமே.

ஒவ்வோர் பொருளினும் ஒவ்வோர் நலத்தை யுதிக்கவிட்டுச்,
செவ்வேயுலகஞ் செழிக்கச் செய்தான், பெருஞ்சித்துடையான்;
அவ்வப்பொருளினுந் தானிலன்போ லிருந்தாட்டி வைத்துக்,
கவ்வைக் கடலிற் கலவா தகிலங் கலந்தனனே.

எல்லாரும் இன்பம் விரும்பல் இயற்கையின் ஏவலென்றால்,
பொல்லாங் கியற்கைக்கு மாறாட்டம்; அத்துடன் போர்செயலே
நல்லாறு சேர்ந்த இயற்கைத் தலைவன் நடபடியாம்;
வெல்லாது தீங்கதை, நன்றே இறுதியில் வென்றிடுமே.

புடைசூழ் நிகழ்ச்சிகள் தம்வாழ்வியற்குப் பொருத்தமென்று
நடைசூழ்ந்து, தன்னெறிதான் பிசகாது, நலஞ்செயற்கே
இடைசூழ்ந்து செல்பவர் செல்வழிக்கொன்றும் இயற்கைநின்று
தடைசூழ்வதில்லை, தன்னைத்தாசை செய்யும், தகைகொணர்ந்தே.

அழுக்கென்ப, மண்ணுற்று, நாளேறத் தாவரமானவைக்கும்,
புழுக்கட்கும் நல்லுணவாய் உருமாறுதல் போல், மனிதர்
இழுக்கங்கள் தாமும், உலகத்திற் கீசன் இசைக்கும் நன்மை
யொழுக்கினை ஓங்கச்செய் யூற்றாகும், ஈசன் ஒழுங்குகொண்டே.

எல்லாவுயிரும் சுகம்பெறல் ஈசன் எண்ணும் முடிவாய்ப்,
பல்லாயிரம்வழி அச்சுகம் எய்தப் பயிற்றுகின்றான்;
பொல்லாங்கினோடு பொருதுதற்காகின்ற போர்ப்படைஞர்
அல்லாதவரென்று அவன்படைப்போரில் இங்காருமின்றே.

(அருளாட்சி)

காராளனின்றிப் பயிரில்லை, அப்பயிர் காதலித்துச்
சாராகக் கொண்ட உயிரில்லை, அவ்வுயிர்த் தாகமற
நீராளும் பல்வகை யூற்றுச்சுனையில்லை ; நேயனருள்
பாராளுமுண்மை, இதாராய்ந்து பார்ப்பவர் பார்ப்பரன்றே.

கணமேனும் நாட்டின் வளநாடியன்றிக் கழியவிடான் ;
தணமேவும் வெண்குடைக்கீழ்க் குடிதங்கத், தருமநெறி
பணமேனும், பாடுபதமேனும் பார்ப்பின்றிப், பார்க்குமன்போல்,
குணமே கருதி உலகுந்திறன், எண்குணமன்னனே. ௩௰

இப்பாநிலத்தில் நடக்கின்ற சக்திகள், எவ்வெவையும்,
எம்மான் படைப்பு ; அவைக்கெம்மாற் றரத்தக்க தெள்ளளவும்
கைம்மாறிலை ; அதுநாம் மறந்தோம் ; நம் கவனமெல்லாம்
சும்மாட்டுக்காரன் மனம்போல், எடுத்ததிற் றாங்கிடுமே.

நெருக்குண்டு, புண்பட், டுழைப்பாற்புழுங்கி, நிலைகுலைய
இருக்கின்ற நாம் நமைப்போல்வார் செயும்பொருளேறிடவே
கருக்கென்று போவதல்லால், ஈசன் வான்செயல் காணவென்றால்
உருக்கென் றுறைகின்ற பேதைமை நாம் என்றொழிக்கின்றதே?

நம்மாலெழுந்தது தோட்டமென்பார் ; வித்து நட்டதல்லால்,
தம்மாற் படைத்த தொன்றில்லை ; தண்ணீர்விட்டுத் தம்மனையிற்
சும்மாயிருப்பார் ; எழுமு, டிலை, காய், சுவைக்கனிகள்
எம்மான்படைப்பு ; அவனின்றெனிற், கையு மெடுப்பதெங்கே ?

சுயப்படல் நீக்கிக் கவனிக்கின், தோன்றிய தோற்றமெல்லாம்
வியப்பதற்கே வகையாம் ; நம்சிறுகுறை வீசிவிட்டால்
நயப்படும் ஈசன் செயலறிவோம் ; அதை நம்பிக்கொண்டே,
செயப்படும்வேலை வியப்பொடு வோங்கித் திகழ்வுறுமே.

கடவுளில் நாமொருபங்கென எண்ணின், நம்கர்மத்திலே
திடவுளமையும், சிறுமையுறாது அகல்சித்தங் கொள்வோம் ;
கடவுளில் நாமொருபங்கே யென்றெண்ணின், நம்கர்வமெல்லாம்
விடவுள் கடவுள் செயல்நோக்கப் பக்தி விளைவுறுமே.

வேற்றுருக்கொண்டவன், வெளியிடத்தான், உயர்விண்ணகத்தான்
சோற்றுருக்கொண்ட நம்மெய்யிடத் தீசன் தொடக்கமிலான்,
காற்றுருவானவன், என்றிருப்போர் செய்வர் கண்டவெலாம் ;
வீற்றிருக்கின்றனன் உள்ளத்தில் என்பவர் மேலவரே.

ஏருண்ட பாரில் எளியாருழைக்க, இருங்கடலின்
நீருண்ட காருண்ட நெல்லுண்டு, நாம் உயிர்நீள நின்றோம் ;
ஊருண்ட ஊனுக்குக் கைம்மா றுண்டோ? நன்றி யுச்சரிக்க
ஆருண்டு? தின்பதற் கெத்தனை பேருண் டிவ்வண்டத்திலே?

மடங்கியகால் நிமிர்ந் திப்புவி வீழ்ந்திந்த வாழ்வறியத்
தொடங்கிய நாள்முதல், இந்நாள்வரைக்கும், தொடருமுடல்
நடங்கிவிடா தளித், தேராளமின்பம் நுகரவைத்த [னே ?
தடங்கலும் எண்ணின், அவ்வன்புக் கெம்மாற் செய்யலாவதென்

(பதியின் செயல் வியப்பு)

ஒருநாள் திருச்செயலாராய்ந், தென்னுள்ளம் உருகிநின்றால்,
திருநாளதாம் ; மற்றைநாள் வெறுநாள் ; அருள் தேடியநாள்
அருநாள் ; அறிந்தவன் தொண்டுசெய் தையன் அருள்கிடைக்க
வருநாள் பொன்னாள் ; அதற்கெந்நாளும் ஈடு வருவதின்றே.

செயல்கண்டு கொள்ளின், திருச்செயல் காண்க ; நம் சீவன்றரும்
வயல்கொண்ட நெல்முதல், வான்கொண்ட மீன்கள்வரைக்கும், [இப்பால்
கயல்கொண்ட கண்முதல் ஞானக்கண்வாய்ப்புங் கருதுக ; இம்
மயல்கொண்ட உள்ளக்கருவியும் ஈசன்றன் வான்செயலே.

சம

திண்பார்க்கும் ஈசன்றிறம் பார்க்கவேண்டில், திகழுகின்ற
விண்பார்க்க; மெய்யின் விசித்திரம்பார்க்க; நம்மெய்யொடுங்கும்
மண்பார்க்க; மண்ணின் வளம்பார்க்கப்; பார்க்குமிம்மாண்கருவிக்
கண்பார்க்கப்; பின்கருதிப்பார்க்கச் செய்த தெக்கையெனவே.

ஒவ்வொரு காட்சியும் நம்மனப் பெட்டியிலோர் படமாம்;
செவ்விய ஞாபகக்கண்ணாடி அங்கு திருப்பிவைத்தால்,
அவ்வருங் காட்சியை ஓர்கின்ற பெற்றி அநுபவமாம்:
திவ்வியஞானமு முண்டாகும் ஆய்கின்ற செம்மதிக்கே.

எண்ணம்பிறக்கவும், எண்ணிய செய்வதற் கேற்றமனத்
திண்ணம்பிறக்கவும், செய்வினைமாட்டது சீர்குலையா
வண்ணமிருக்கவும், செய்வாய் தடையின்றி வாய்த்திடவும்
தண்ணந் திருவருள் வேண்டும், ஒவ்வோர் சிறுதட்டினுமே.

சக்திகளெத்தனையோ சேர்ந்துதாங்கின தானையைப்போல்;
சித்திரமாங் கொலு மூளை; அவ்வான்றுறைச் சேவையிலே
எத்தனையோ துறை; மத்தியில் ஆத்மஇறை மகுடம்
வைத்தது பார்மின்! உடலொரு நாட்டினை மானுமன்றே!

அறிவாய மூளையின்றோன்றல் அரசுக் கரசிகொள்ளப்
பொறிவாயின் ஐவர்களாம் உணர்ச்சியைப் போய்நயந்து,
செறிவாய ஐவர்இசைய, வினைதுணி திட்டமெனும்
குறிவாய்ந்த தாலிபுனைந்தக் குமாரியைக் கொண்டனனே.

அகத்தாங் கரணங்கள் சிந்திக்கும் மூளைக் கருந்துறைகள்;
மகத்தாம் அறிவுக் கடுத்தவை; ஐந்துவகைப் புலனும்
ஜகத்தா முணர்வைத்தரும் கல்விச்சாலைகள்; சாதகம் பார்
முகத்தே மனிதருக் கென்னுண் டிவ்வான்ற முறையின்றியே?

சிந்தனைச்சாலைக்கு முந்திய மந்திரி சிரறிவாம் ;
மந்திரச்சாலைக்கு நாணயச்சோரியை வார்த்தடிக்கும்
எந்திரச்சாலை வயிறும் ; விதிக்கின்ற ஏவல்செய்ய
முந்துறுங் கால்கை ; உள் நாவெனும்பேரி முழக்கிடுமே.

கரலே திரவியச்சாலை ; சிவப்புக் கறுப்புதிரம்,
விரலேதொடங்கி உயர் உச்சிகாறும், விரிகுழல்வாய்த்
தரலே அதின் தொழில் ; சோரியின் மாசுதவிர்த்து, நந்தம்
குரலே ஒலிப்பிக்கும் காற்றுசயமெனுங் கோட்டைகளே.

பிரம்பால் வளைந்த பெருங்கூடைபோல், இந்தப் பீடெம்பை
நரம்பாம் உயர்தந்தி வேய்ந்து நிரம்பிற்று ; நாட்டிலெங்கும்
உரம்பாலித் துள்ளும்புறம்பு முணரும் உணர்வெழுப்பும் ;
வரம்பாம் அறிவினுக்கு ; இத்துறையின்றி இவ்வாழ்வில்லையே.

துப்புரவாக்கத் துறையுற்றதே, உடற் றோல்புறத்தும்,
கொப்புறு மாங்கனிஈரல், குழாய்க்குடற் கோட்டத்திலும்,
செப்புறு வாயிலும், கண்ணொடு மூக்குச் செவியிலும் ; இவ்
வொப்பரு நாட்டினைப் பின்பற்று நாடின்ப மோங்குவதே. ௫௰

சோராதுடம்புக் குணவளித்தால், தொழில் செய்யவலி
நேராயிருக்கும் ; அதின்றேல், இன்றே ; அங்கம்நின்று தம்முட்
சீராயொழுகின், செயலுளது ; அன்றிச் செயலுமில்லை ;
நீராவியந்திரம் போலாம் நம்மாக்கை நிலையதுவே.

மன்னோர் சவுக்கியமென்ப துறுப்புகள் வாய்ந்ததொழில்
நன்னடியோடு புரிதல் ; அந்நாடி நரம்பின் வலி ;
என்னே நரம்பின்வலி ? ஏறப், பாஸ்கரம் ; எய்து வினை
தன்னயம் அப்பொருள் சேர்ந்த செழிப்பின் றரத்ததன்றே.

(அழகினியல்)

என்னே அழகென்பது? எம்மனம் அத்தைக் கண்டேங்குவதேன்?
முன்னே அழகெம்மகத் திருந்தாலன்றி மோகமுறேம் ;
பின்னேர மெம்மைப் பிரிந்ததுபோலும் ; பிரிவறியா
தென்னேர மஃதெமைச் சேரவன்றோ மனம் ஏங்குவதே?

உருவமன், நாற்றநிறமன், ஒளியன், றுடன்கலந்த
பருவமன், றெம்மைக்கவர்ந்தது ; உள்ளானந்தப் பக்குவமே ;
புருவமும், நெற்றியும், கண்ணும், வடிவமும், பொன்னிறமும்
மருவிய மேன்மைக் குணங்களன்றோ உள்மயக்கியவே?

ஆனந்தம் ஈவ தருங்குணம், அன்பின ; ஆனந்தத்தைத்
தானந்து மேனிக்குறிப்பிடம் நம்முளம் சாட்டுவதால்,
ஈனந்தரு முடல்மேனின்ற தாசை, இனிமையுற்ற
கானந்தரு மரக்கட்டை நம்முள்ளங் கவர்ந்தெனவே.

பேணழ காண்பெண் உருவத்திலாகின்ற பெற்றியொன்றோ?
காணழகா மிவை ; காணுவழகு கருதிலுண்டாம் ;
நாணழகாம், உண்ணடை யழகாம், சொன்னடை யழகாம்,
மாணழகாம்செயல், வானழகாம் நன்மதியழகே.

(காதலுங் காமமும்)

கண்ணாரழ குண்டெனிற் காதன்மையுண்டு ; காதல் அழ
கெண்ணா தியற்றுவதாமோ இயற்கை? இரண்டினையும்
உண்ணாடி நோக்கின், ஒருத்தமநோக்கம் உருத்தெழும்பும்:—
மண்ணாருமாக்கள் பிறந்தன்பு மாந்தும் வகையவையே.

மருக்கொண்ட கூந்தற் பிறைநுதல் வேல்விழி மங்கையர்தம்
திருக்கொண்ட சாயலைச்செய்தது, காதலிற் சீவர்கள்தாம்
கருக்கொண் டுலகம்செழித் தின்புறவென்னில், காதலன்பே
யுருக்கொண்ட மாற்றம், அளவறிந்தாளல் உயர்வுடைத்தே.

சென்றுபடர்வது காமம், நற்காதல் சித்தம்பொருந்தி,
ஒன்றினுறையும் ; உடன்விடுங்காமம், ஒருமையுற்று
நின்றுநிலவிடுங் காதல் ; மெய்யன்பும், நெறியுயர்வும்
கொன்றிடுங் காமம், அவை காதல்கொள்ளக் குளிர்ந்தெழுமே.

உடல்பற்றுங் காமம், உளம்பற்றுங் காதல் ; உரையுறுபாற்
கடல்பற்றுந் தேவ அமுதெனக் காதல் கருத்தினிக்க
அடல்பற்றும், காமம் அழிந்திற்றுப்போகும் அறிவுகெட்டே ;
விடல்பற்று நன்று, விடாவிடிற் காதலை மேவல்நன்றே. ௬௰

ஈரங்கொடுப்பது, எளியாரைப்பேண எழுவதற்கு
வீரங்கொடுப்பது, உண்மைக்குரம், மன்னுயிர்மேல்வளரும்
வாரங்கொடுப்பது, மற்றின்பந்தேற இவ்வாழ்வுக்குப்புக்
காரங்கொடுப்பது பெண்மீ தியல்கின்ற காதலொன்றே.

பெண்ணென்பவளுக்குப் பெட்பேதகுதி ; பெடையனந்தன்
ஒண்ணன் சிறையினத்தோ டாடல்போல், தன்உளம்விழைந்த
வண்ணந்தன் காதலனைக்கொண்டு, அவனைத்தன் வாழ்வினுக்குக்
கண்ணென்று கற்பினொழுகுவள், பெண்ணிற்*கமலமன்றே.

(படைப்பிற் குறிப்பறிதல்)

தனத்தினைத் தேடிப்பயனில்லை, சார்ந்து தமைவளர்த்த
இனத்தினை நம்பியிருப்பதுவீண், பெரிதென் றிருக்கும்
கனத்தினைக் கூடியுங் காரியமில்லை, கருணைநிலை
மனத்தினையூன்றி இயற்கையிற்காண்டல் மகிழ்தருமே.

முடித்தபன் னூற்பொருள்மேலும், பொற்கோயில் முயன்றடுத்
பிடித்தபக்திப் பற்றின்மேலும், குருவிற் பெறுவதிலும், [துப்
தடித்தகண் பார்ப்பதின்மேலும், தெய்வீகத் தடங்கருணை
படித்தபடி இயற்கைப்பொருள் காட்டும் பலமுகத்தே.

விலகுதல் வேண்டும் பொருட்களில், ஈசன் வெறுப்புவைத்தான் ;
இலகிட நல்லுயிர்பல்க, வனப்பில் இணக்கம்வைத்தான் ;
கலகமுண்டா மிடங்காட்டித், தற்காப்புக் கருதிவைத்தான் ;
உலகில், இவ்வுண்மை, விலங்கியல் பார்த்தவர் ஓதுவரே.

பாம்பால் உலகத்திற் கென்னலமென்பர் பகுத்தறியார் ;
சாம்பாடுறும் பலநோயூட்டுங் காற்றினிற் சூழ்விடத்தைத்
தீம்பாலென உண்டுலகுய்ய வைத்தல் தெரிந்தவர்க்குப்,
பூம்பாரில் வீண்படைப் பில்லை யென்னுண்மை புலப்படுமே.

மெலிவே யிலைப்புழுவின் காப்பதின்றிறம் ; மேற்கொண்டெதிர்
வலியேயிலாத் தசைஆமைக்குக் காப்பு வன்றோடு ; மறக்
கலியே கொளாத கலைமானைக் காப்பதுகால் ; கலுழும்
ஒலியே குழவிக்குக் காப்பாம் ; இவை அருள்ஓதுமன்றே.

தாவரமோங்கத் தருநிலமாக்குந் தரைப்புழுக்கள் ;
மேவரும் ஆழிக்கரை வளைத் தாய்த்துறை வேயும் சிறு
சீவர்கள்கோடி ; மனிதர்பின் வாழ் பல தீவெழும்பக்
காவரம்பாக்கிக் கடலினைத் தூற்றும் கடற்புழுவே.

புடைசூழ்ந்திருக்கும் இயற்சங்கதிக்குப் பொருந்துகின்ற
நடைசூழ்ந்திருக்கின்ற நாளுஉயிர்கள் நலமடைய
இடைசூழ்ந்திருக்கும் இயற்கைக்கிறை ; அதற் கெள்ளளவும்
தடைசூழ்தலின்றித், தகவேஉழைத்தல் நம்தர்மமன்றே.

மெய்வந்த சாகைச் சடப்பொருளுண்மை விளக்குவதில்,
கைவந்தவர் சடம்பற்றி, இருபொருட் காரணமாம்
தெய்வந்தனை மறக்கின்றார், முற்றுண்மை தெளிகிலரால் ;
பொய்வந்த நூல்படிப்பார்போல், உளநிறை பூப்பிலரே.

எம

எல்லாப் பொருளிலுந் தெய்வீகம் காண்டல் இயல்பறிந்த
நல்லார் அறிவின் பயனும்; அவ்வானலம் நாடுகில்லார்
சொல்லாத சொல்லியும், தோன்றாத தோற்றியும் தூயகலை
கல்லார்தமக்குச் சமமாவர்; நூல்பல கற்றுமென்னே?

(வாழ்க்கை மதிப்பு)

பல்வாழ்க்கை யுள்ளும் இம்மானிட வாழ்க்கை, பகுத்தறிவாற்
செல்வாழ்க்கை யாதலின், நல்வாழ்க்கை யென்பர் சிலர்; நினைப்புச்
சொல்வாழ்க்கை யென்னல் தகுமே; அதுவன்றிச், சோதனைமட்
டில்வாழ்க்கை இங்குநம் மில்வாழ்க்கை; மற்றொடிது சமமே.

அருமையென்போம்இந்தவாழ்க்கை; மற்றுதல் அருமையன்றோ?
பெருமையென்றோஇதில், நம்மனத்தே அப்பெருமைஇன்றேல்?
பொருமத மொன்றில், புலியனையோம்; உட்பொருத்த மிலோம்;
எருமையின் கூட்டத் தொருமையுண்டே நம்மில் எண்மடங்கே.

அருத்திக்கொளுவதற் காகமட்டோ இவ்வழுமுடலில்
இருத்தப்படு மிந்த ஆருயிர்? ஓங்கறி வில்லையென்றால்,
எருத்துக்கும் மானிடர்க்கும் பேதமேது? எழுந் தேறலுன்னக்
கருத்துச்ச மற்றதோர் வாழ்க்கை சுக்கானற்ற கப்பலன்றோ?

வாழுலென்பார் மக்கள்வாழ்வினை; மாயையின் வஞ்சவலை
வீழுலென்பார்; உயரானந்தம் விட்டு வினைத்துயரத்
தாழுலென்பார்; கலிசூழுலென்பார்; உள்ளறியின், மிக்க
ஊழுலென்பார்; அன்றி, நல்லதென்பார் இங்கொருவரின்றே.

வானேயுலகம், மதியினொடன்பு வகித்தவர்க்குத்;
தானே அவர்க்குத் தரும் எண்ணிலானந்தம்; தண்மதுரத்
தேனேபெறினும், சுவையறியார்க் கது தித்திக்குமோ?
ஏனே இயற்கை படியார் உலகை இகழுவதே?

களியார் குழந்தைகள், மோசமென்னாது, கைக்கத்தி கொண் [டால்,
அளியார் அவர் தந்தைதாயர் அதைப்பறித் தாள்வதுபோல்,
ஒளியார் கடவுளும், மானிடர்தங்கட் குறுமிடும்பை [றே.
தெளியாது கொள்ளும்பொருள் பறித்தாண் டுய்யச் செய்யுமன்

வருத்தப்படுகின்ற நோயாளிக் கேற்ற மருந்தளிக்க,
மருத்துச்செடியும், வகைதெரிவாரும் வகுத்தவண்மை,
கருத்துப்பொருளிலும் கற்றவர் நெஞ்சிலும் காணுங்குற்றம் [தே.
திருத்தும், செழும்பொருள் செம்பாகச் சொல்லுடன் சேரவைத்

(அகநிலை)

நெஞ்சே நமக்கு வழிகாட்டியென்று நினைத்து, அதன்பால்
மிஞ்சாதொடுங்கி, நலம்பேணி, மாண்செயல்மேவி, எதிர்
அஞ்சாது, நீதி அகலாது நிற்கும் அருந்தகையைத்
துஞ்சாது சூழ்வ தொருதலை தெய்வம் துணைப்பதற்கே.

(செயல் தோன்றவிடல்)

எல்லாச் செயலும் இழைத்தான், இழைத்த தெடுத்துரைக்க
நில்லாது, தன்னுருத் தான்மறைத்தான்; அந்நிலைமை கொண்டு
நல்லாறுடைய வல்லார் உலகோங்க நலமியற்றிச்
சொல்லாதிருப்பர், அவர்செயலால் அது தோன்றவிட்டே. அல்

(பதியின் ஆற்றல்)

பலக்கப் பலவணிப் போர்வீரர் சென்றும், படர்கடலைக்
கலக்கத் திறமுடையாரோ? உலகிற் கடவுளெண்ணும்
இலக்குச் சிறுமதி மானிடர், எத்தனைபேர் எண்ணினும்,
விலக்கத் திறமுடையாரோ? விதித்தது மேனிற்குமே.

ஆற்றலென்னே, அதிகாரமென்னே, அருளாண்டவனைப்
போற்றலில்லாது? பொருப்பெதிர் தோளரும், பொட்டெனவே,
கூற்றனுக்கே யிரையானார்; இறைவன் குவலயத்தை
மாற்றவல்லாரையும் மாற்றவல்லான் ஒருமாத்திரத்தே.

(தத்துவ ஆராய்ச்சி)

சித்துரு வாகின்ற தெய்வமல்லால், தெய்வம் செய்யுலகில்
நித்தியமில்லை, நிகழ்வன, நிற்பன; நீளுலகப்
பத்தியிலேறக் கவன்று நம்காலம் பறக்கவிட்டால்,
தத்துவங் கண்டு சுகிப்பதெந்நாள் அச்சம் தாழ்ந்திடவே?

பனாளுழைத்துப், பல பாடுபட்டுப், பரதவித்து
மன்னாள் புவியில் இம்மண்ணாளும் ஆக்கையை வாழவைப்பீர்!
பின்னாள் வருவதை யுன்னாதிருக்கும் பிழைதவிர்ப்ப [கே?
தெந்நாள்? உழைப்பதிங் கெந்நாள் நம்ஆத்ம மெய்யின்பத்திற்

நிலையானவை ஒன்றுமின்றென்ற ஞானம் நிலைப்பதற்கோ,
அலையால்நிறைந்த கடல்போலும் வாழ்வின், அகலிடத்தே,
கலையானவை கற்றுக், கண்டறிந் தாயுள் கழித்திடுவோம்?
தலையான காரியம்வேறில்லையோ இங்கு சார்வதற்கே?

அன்னம் பயில்கின்ற ஆக்கையி லாசை அதிகரித்தோம்;
தன்னந்தனித் துடல் சாகின்றகாலம் தவிர்ப்பதுண்டோ?
முன்னங் குடிகொண்ட முன்னவன் சந்நிதி முந்துவதற்,
கின்னம் பிறப்பெடுத்தாலு முண்டோ மனம் எண்ணுவதே?

நிந்திக்கவோ இந்த நாவளித்தார்? நித்யம் நேயமுடன்
வந்திக்கவே; உயர்வானாளும் ஈசன் மகிமை கண்டா
னந்திக்கவே இவ்வகிலந் தந்தார்; அங்கருள் தெரியச்
சிந்திக்கவே இந்தச்சென்னி தந்தார்; என்று சிந்திக்கவே.

ஊனந்தமண் ; உயிர்காற்று ; ஐம்புலன்கள் உணர்த்துவதே
ஞானந் தனித்தது ; உயிர்கள் இழுப்பது நட்புத் ; துன்பம்
ஆனந்தம் மூளையறிவது ; மூளை அணுக்கள் என்றால்,
நான் எந்த மூலையிற் றொளிந்தேன் இந்த நாடகத்தே ?

தற்பிறப் பிங்கு தரித்துக் கண்டாரன்றித், தாம்பிறந்த
முற்பிறப் பின்னதென்றார் அறிவார் ? இதின்முன் விரும்பி
இப்பிறப் பெய்தினரோ மக்கள் ? கன்மத்தின் எய்தினரோ ?
எப்பிறப்பாளர்க்கும் இன்பமொன்றே செய்தல் எம்கடனே.

கன்மத்தினால் வந்த தாக்கை யென்றால், முதற் கன்மமென்ன ?
உன்மத்தினால் கெட்டகன்மஞ் செய்தால், அது உடற்றல், செய்த
ஜன்மத்திலே தெரிந்தாலல்லவோ தண்டிப்பாகும் ? சிறு
வன்மத்தினால் எதிர்செய்தல் நந்தெய்வத்தின் மாண்பலவே. ௯௰

இம்மாபிறவிக் கடல்நீந்தி ஈசனிடங் கலத்தல்
நம்மா லடைவுறும் மோக்ஷமென்பார் ; அதைநண்ணில், அதிற்
சும்மாவிருத்தல் சதமோ ? ஒழுகுந் துளிப்பெருக்கம்
அம்மாகடலிடஞ் சேரின், அப்பால் அங் கவைசதமோ ?

ஏனோ இடர்க்கு நடுங்குகின்றேன் ? மெய்யெடுத்த திங்கு
நானோ ? அறிவுடன்றானோ ? நலிந்திங்கு நைவதெல்லாம்
ஊனோ, அலது, எனதாருயிரோ ? அவ்வுயிர் படைத்த
வானோன் எனைத் தள்ளுவானோ, தள்ளாத வருத்தத்திலே ?

நம்பிக்கை யற்ற நரர்வாழ்வு, இருளுற்ற ஞாலத்திலே
தும்பிக்கை யற்ற ஒருயானை வாழ்வதுபோல், தொலையா
வம்புக்கும், வாசிக்கும், மல்லுக்கும், வேதைக்கும், வஞ்சனைகூர்
அம்புக்கும் ஓர் இலக்காவதல்லால், இன்படைவிலதே.

காராளும் செல்லின் கதியாளவல்ல கடவுளுக்குப்
பாராளு மன்னர் பதமாளுதற் கொரு பஞ்சமின்றே;
நேராளு மானிடர் நெஞ்சில் நின்றோன் நம் நிலைதிருப்ப
ஏராளம் வல்லமை யுள்ளான்; என்னே மனம் ஏங்குவதே?

சாவினுக் கப்புறம் என்வருமோ என்று தட்டுக்கெடேல்;
கோவெனும் ஈசன் குணமுடையான்; மென் குழந்தைகட்கும்
ஏவினன் அவ்விதி; எத்தனையோ உயிர் ஏகினவே;
ஆவிக்குச் சாவில்லை, மற்றொருயாக்கை அடைவுளதே.

எல்லா உயிரும் இறையிடந் தோன்றி, இறையிடமே
செல்லாவது; ஒன்றுந் திறம்புவதில்லை, திடமதுவே;
பல்லாயிரம் பிறப் பெய்தியும் பட்டும் நற்பக்குவத்தைப்
பொல்லாஉயிரும் அடைந்துய்யும் பாழொன்றும் போவதின்றே.

நினைப்பாற் கொடியது சாக்காடு; தம்பொருள் நீங்குமென்று
நனைப்பார் சில்லோர்கண்; உறவோரை நீங்கற்கு நைவர் சில்லோர்;
வினைப்பால் நிறைவு பற்றாததும், சிற்சிலர்,” மேற்பதவி
மனப்பால் குடித்தது உறாததும், எண்ணி வருந்துவரே.

நகமிற்றுப் போயின், விரலுக்கென்னும்? தன்னை நண்ணும் உடல்
இகமிற்றுப் போயின், உள்ளாவிக் கென்னும்? பிறப்பெய்திய ஞா
பகமிற்றுப் போயினும் பண்பிறுமோ, அதின் பண்பிறினும்,
சுகமிற்றுப் போகுதலுண்டோ? அவ்வாவிக்குச் சொந்தம்அதே.

மேவி இடங்கொள் உடம்புக்குள்ளே கண்ணில் மேவலதாய்
ஆவியுடம் பொன்றுளது; அதன்மேல் நம் அனுபவங்கள்
தாவிஇடங்கொளும்; பின்நாம் எடுக்கும் சடத்தினுக்குச்
சாவியுடம் பதுவாமால், உட்டேய்மை தழுவல்நன்றே.

அங்கம் பிறப்பிக்கும் ஆற்றல் அவ்வாவியுடம்பி லுண்டாம்;
பங்கம் பழுததன்மேற் பதியாமற், பராமரித்தல்
நங்கண்ணதனிலு மேல்வேண்டும்; நாம் இனிநைவகையும்
துங்கம்பெறுவகையும் காணலாம் நம் துணிவினின்றே. ௱

பூமிக்குத் தேகம்; நம் ஆத்மா புவனம் பொறித்தவர்க்காம்;
நாமம் உலகிற்கு; நல்லறம் செய்நலம் உற்றவர்க்காம்;
தீமைக்குச் சித்தங்கொடாது, அருளீசனைச் சிந்தித்திடின்,
ஏமனுக் கென்னபங்குண்டோ நம்மைவிட் டெடுப்பதற்கே?

இத்தனை நேரத்தில், எத்தனையாயிர[illegible]ண்ணம் உயிர்
செத்தன; வேறுபிறந்தன; தீமைசெய்யாது, அன்புசேர்
சுத்தமனத்தினராகி, நம்அத்தன் துணைபெறின், நாம்
ஒத்த மனத்தின ராவோம், மைக்காலன் ஒறுக்கினுமே.

இளம்போதில் இன்புற்ற வான்போலும், இன்பவெழில் பிரிந்த
வளம்போதில் வேலைக்கொருசாலைபோலும், வளங்குறைந்தால்
களம்போலும், துன்புறிற் கானகம்போலும், கருதுகின்ற
உளம்போல் உலகம் உடைமாறுங்கூத்தனை யொத்ததுவே.

போவதெல்லாம், திரும்பும்; திரும்பும்பொருள், போவதுமாம்;
சாவதெல்லாம், பிறக்கும்: பிறக்கின்றவை சாவவையே:
ஈவதெல்லாம் எடுக்கும்முறை ஈசனுக் கென்றுமுண்டே:
ஆவதெல்லாம் அருட்கட்டளை யென்றுள் ளடங்குகவே.

குறைமதி யாளக், குவலயம்வாழ் மக்கட் கூட்டத்திலே,
கறைமதிபோல், இன்பதுன்பம் உண்ணுடிக் கலந்தனவே;
நிறைமதிபோல் இன்பம், நள்ளிருள் போல் துன்பம், நிற்கும் சில்
பிறைமதி தேய்ந்து மிகுந்ததுபோலும், பிறவின்பமே. [கால்:

துன்பம் தொலைவதில், ஓரின்பமாம்; மற்றது தொலைந்தால்,
இன்பம் தொடர்வதில், ஓரின்பமாம்: இன்பம் எட்டிவிட்டால்,
பின்புந் தொடர்வதற் கோரின்ப மின்றிப் பின் இன்பமில்லை;
தன்பற்றினா லன்று, பின்பற்றினால், இன்பம் சாருவதே.

பன்னூறு காலம் உடம்பால் அளந் திந்தப் பார்நடந்தால்,
என்னூறு மூதியம்? கண்டதிற், கேட்டதில், எண்ணியதில்,
தொன்னூல் அறிந்ததில், இன்பந் தொடர்ந்ததில், தூத்ததில்,இங்
கைந்நூறும், ஐம்பதும், ஐந்தும் ஒன்றே அறிவாளருக்கே.

பெருக்காறுபோற் பொருள் சேர்ந்தாலும், மெய்ப்பொருள் [பெற்றுமனம்
பருக்காது, கல்விப்பயிற்சி யிலாது; பருக்கும் அவாச்
சுருக்காது, அருங்கௌவைதான் சுருங்காது; நற்றாய இன்பம்
இருக்காது இருப்பவை போதுமென்னுள்ளம் இலாதவர்க்கே.

தூரம் சிறுத்தனக், கிட்டப் பெருத்தனத், தூரம்பின்னும்
பாரம் சிறுத்தன, பார்வைப் பொருள்கள், பயணத்திலே;
நேரம் செலச்,செய்ய நேர்வன,செய்ய நெருங்குவன,
தீரமுடித்தன, தாம் கொளும் ஊற்றம் திரிபடுமே.

எச்சிலுங் குப்பையும் தாவர மோங்குதற் கேற்றவளம்;
நச்சுறுங் காஞ்சிரத் தாகும் அமிர்தமும் நாண்மருந்து;
குச்சிலில் வாழ்ந்து, குறை மிகுந்தார்க்கும், குலக்குடியார் [ராய்
மெச்சுங் குணம் பலவுண்டாம்; துன்பத் தின்பம் வேர்கொளுமே.

என்னே உலகம்? மற்றெண்ணத்தில் ஆழ்ந்திருந்தால், அதுதான்
இன்னே மறைந்தது; அதுகனவோ? நினைவே பிரித்தால்,
பன்னுடை அட்டபடியாம்; உணர்வைப் பகுத்தெடுத்தால்,
பின் நானுமில்லை, உலகமுமில்லை, சொற் பேசுதற்கே.

விழிப்பிற்கனாவும் கனாவில்விழிப்பும் இம்மேதினிவாழ்வு
[தென்னேன்;
எழுப்புமென்றால், அதையென்ன வென்பேன், அதை என்ன
செழிப்பிற் றிரைபொங்கும் தெய்வீககாலச் செழுங்கடலின்
சுழிப்பில் அகப்பட் டமிழும் குமிழியின் தோற்றரவே.

உலகமெல்லாம் ஒருநாடகசாலை யென்றோர்பெரிய
புலவர்சொன்னார்; அதிற்பொய்யிலை; காதல் பொருந்துவதும்,
கலக முண்டாவதும், கைப்பொருள் போவதும், கைவரண்டார்
இலகி எழுவதும் 'அந்நாடகம் நடந்தேறுதற்கே.

நானென்ற வேடம் உலகத்தில் நன்மை நடத்துவதற் [தேல்,
காநின்ற தொத்தென்றுணர்ந் தாள்வினை கொள்வது, அஃதல
தானென்ற தோற்றம் பரம்பொருள்தன் அயற்சார்பதென்று
மேனின் றறிந்தகம் தாழ்வது, ஞானிதன் மெய்ந்நிலையே.

மழையிற்பிறந்த நெற்றானியந் தின்று வளருமுடல்
நுழையிற்றெறி ஐம்பொறிவாய்ப் பரந்து நுகர்ந்தவெல்லாம்,
இழையிற் றிரிபடுநூல்போல, எண்ண மியற்றும்மனம்;
பிழையிற் பெரும்பிழையே இதையானெனப் பேசுவதே.

கழிகின்ற இவ்வுடல் என்னதென்பேன், அதின் கட்டறியேன்;
மொழிகின்ற மூச்சின் முளைப்பறியேன்; உயர்மூளையின்பால்
வழிகின்ற எண்ணத்தின் வாய்ப்பறியாது, என்மனமென்பனான்;
பொழிகின்ற நின்னருளால், நானும் என்னதும் போந்ததுவே.

என்னதென்பேன் இங்கு நான் செய்த நல்வினை; ஏனைய நான்
சொன்னதும், கேட்டதும், செய்ததும் தோன்றித் துரிதம்விடும்
[பேன்,
மின்னலென்பேன், விளையாடலென்பேன், வெளிவேடமென்
[பனே.
புன்னிய பொய்க்கதைக் கோர்வையென்பேன், சொப்பனமென்

சட்டத்திலே வரும்நீதி சற்றே ; மக்கள் சாதிக்கின்ற
திட்டத்திலும் முழுத்திட்ட மின்றே ; செயல் தெய்வஅருள்
வட்டத்திலே நின்றவெல்லாம் நடக்கும் ; வயங்கும் அன்பு
வெட்டத்திலே வைத்துச் செய்வதெல்லாம் அருள் மேவுமன்றே.

வானென்ப தோரிடம் அன்றே ; நரகம் வகுத்திருந்தாற்
றானும் அஃதோரிட மாகாது ; அனுபவம் தங்குநிலை
ஈனமென்றால், அதுவே நரகாம் ; உயர்வென்னில், அந்த
ஆனந்தமே உயர்வானும் ; இரண்டும் இங்காவனவே.

(பக்தி)

எல்லாரும் ஞானம் தொடரார் ; வன் யோகம் இயற்றியிட
வல்லாரும், சிற்சிலர் ; இவ்விரு பெற்றியும் வாய்க்கவல்லா
ரல்லார் பலருளர் ; அன்னவர் ஈசன் அருள் பெறற்குச் [ஙஉம
சொல்லாகும் மார்க்கமொன்று ; உள்ளார்ந்த பக்திதொடருவதே.

வேதங்க ளோதுதல் வேண்டுவதில்லை ; விரித்தரிய
வாதங்கள் செய்ய அகத்தியமில்லை ; வருந்திப்பல
காதங்கள் செல்லவும் கட்டாயமில்லை ; கடவுள்மலர்ப்
பாதங்க ளெண்ணி உளங்காத்தல் போதும், பதம்பெறவே.

நன்னேர் விரும்பிய நெஞ்சமும், வஞ்சநடை யின்மையும்,
[றியே
சொன்னேரும், அன்பின்செயலு முள்ளார்க்குத்; தொழலின்
தன்னேரிலா அருட்டெய்வம் துணையெனில், அத்தகைகொண்
[வதே ?
டெந்நேரம் பக்தி கொள்வார்க்கு முண்டோ, மலைப்பெய்து

கற்றார் ஒருகரை கண்டார் ; நற் கல்வியொடு குணமும்
உற்றார், நிலைக்கரை யுற்றார் ; இரண்டுமுற் றுண்மையுடன்
பற்றே யிலானடி பற்றிக்கொண்டார், சொல் பதவியெல்லாம்
பெற்றார் ; அவர்தம் பெருமை எம்மட்டென்று பேசரிதே.

பெற்றாள், பிதா, நம்முடன்பிறந்தாரொடு பிள்ளைகளும்,
உற்றாரும், நம்மிடம் சேர்ந்தாலும், நே பொன்றுறுமிடத்தே,
சற்றாயினுந் துணையாவார்களோ? தனித்தே சகிப்போம்;
கற்றாவென நின்று காத்தாள்வ தீசன் கருணையொன்றே.

முற்கோலிக் கொள்ளுதலால், வருந்தீங்கதன் மும்முரத்தைத்
தற்காலம் குன்றச்செயலாம்; அத்தீங்கைத் தவிர்ப்பரிதே:
பிற்காலத்திற்குப் பெருக்கம் பிறப்பிக்கும் பேரருளைப், [வரே.
பொற்கோலிக் கொள்ளுதல்போற், கொள்ளுவார் துயர்போக்கு

தாழிடம் பாய்கின்ற நீர்போல், இறையருள் தாழ்மையுள்ளோர்
வாழிடஞ்சேரும்; நினையாது முன்செய்த வல்வினையால்,
ஊழிடம் நாம் அகப்பட்டால், இறையருள் உண்டெனில், நாம்
வீழிடம்நீங்கி யடைவோம் வரங்கள் விளைவிடமே.

இருள் சேர்ந்திடிற், குற்றமெல்லா முளைக்கும்; இருள்கலந்த
பொருள்சேர்ந்திடிற், பொய்யும், வீம்பும், செருக்கும் புடைத்
[தெழும்பும்;
தெருள் சேர்ந்திடில்,ஒட்பம் தோன்றித் திகழும்; தெருள்கலந்த
[யுமே.
அருள்சேர்ந்திடிற், செம்மையெல்லா முண்டாம் இம்மை அம்மை

அல்வந்தணையின், அறும்; அடைநோவறும்; ஆழ்ந் தகன்ற
கல்வி செருக்கறும்; துன்பம் வருத்துங் கடுமையறும்;
நல்வந்தனை கொள்ளும் நெஞ்சம்; அஞ்சாது, நமனையுமே
வெல்வம், தனிப்பெருஞ் செல்வன் றுணைப்பதம் மேவிடினே.

(துறவு வேண்டாமை)

அனைவருமே துறவாவோ மெனிற், படைப் பாவதெங்கே?
மனைவியெங்கே? பெறு மக்களெங்கே? நன்மணமுமெங்கே?
வினை விளைவாத லெங்கே? அன்பெங்கே? வெல்லும் வெற்றியெ
நினைவரு மீசனைப்போற்ற லெங்கே, இந்த நீணிலத்தே? [ங்கே?

தவமேசெய வெண்ணித், தண்முகில்தாழும் தடவரையில்
அவமேதிரிந் துழல்வாரினும், சூழும் அகிலமெங்கும்
சிவமேயெனத் திடங்கொள்வார், அகஞ்செயல் சீர்த்திபண்ணிப்
பவமேயறும் புணையேறிக்கொள்வார், துயர்ப் பாடறுத்தே. ௱௬௰

மயலற்றிருக்கக் கருதி, நற்கால மகிழ்வறியும்
இயலற்றிருத்தலும், துன்பம் கவலையெனும் ஒறுக்கும்
புயலற்றிருக்கக் கருதி, உலகிற் பொருட்படுமோர்
செயலற் றிருத்தலும், உள்வீரமற்ற சிறுமதியே.

துறந்தால், கெடும் அகங்காரம் துறக்க; ஓர் சொல்லுக்குவாய்
திறந்தால், அஃதுண்மைக் காகத்திறக்கச்; சிதைவில் புகழ்
சிறந்தால், அது நன்மை செய்து சிறக்கத்; திரியுலகிற்
பிறந்தால், உபகரிக்கப் பிறக்கப் பெரும் பேறுறவே.

(அகந்தையறல்)

நாடுமட்டே நம்மகங்காரம்; மானிடர் நண்ணும் சுடு
காடுதொட் டாக்கையின் கட்டழிந்தாற், பின்கதி யெதுவாம்?
பூடுபுல்லாதிக் கதுவுளமாம்; வளம் பூண்ட இம்மண்
கூடுதொட் டாருயிர் நிற்குமட்டே நங் குலவுயர்வே.

நாட்டுக்குள்ளே சிறியோர் பெரியோரென நாட்டுகின்றோம்;
காட்டுக்குள்ளே செல்லின், அத்தரமில்லை; அக்காட்டில் மரக்
கூட்டத்தைச் செய்ததை நம்மையும் செய்த குறிப்பறிவோம்;
சாட்டத்திற் கேது வகையுண்டு? எல்லாம் நம் சகோதரமே.

கறுப்புக்கும், கள்ளுக்கும் காணப்பிறக்குங் கடுங்கிறுக்கம்;
ஒறுப்புக்குதவும் பதவிக்கும் உள்ளதொரு கிறுக்கம்;
உறுப்புக்கரிய உரம், கல்வி, செல்வம், உயர்சமயப்
பொறுப்புக்குத் தோன்றுங் கிறுக்கம், சிறியர் புணையுமட்டே.

எல்லாவுயிரும் நமைப்போ லிருக்குமென் றெண்ணுகிலாப்
பொல்லாங்கினால், அன்பு பாராட்டும் வேலையைப் போகவிட்டு
வல்லாவழக்கும் மதங்காட்டும் வேலையும் வாங்கிக்கொண்டால்,
சொல்லாத் துயரங்க ளெல்லாம் அவ்வேலையில் தோன்றுமன்றே.

காலங் கெடுத்தது, கன்மங் கெடுத்தது, கட்டுக்கொண்ட
கோலங் கெடுத்தது, தெய்வங் கெடுத்தது, கோதுடைய
ஞாலங் கெடுத்தது என்றேனோ நொந்தோம்? நன்மையற்றநந்தம்
சீலங் கெடுத்ததுவே நாமடைகின்ற தீமைகளே.

(நடுநிலை)

கெடுநிலை மாற்றிவிடலாம்; பொருள் கிடைத்தோரும் எண்ண
மிடுநிலை எய்துதலாம்; கல்வி எய்துதலாம்; விரும்பப்
படுநிலைக் கீர்த்தி யுறலாம்; ஒருபட்சம் பற்றுகிலா
நடுநிலை எய்தல் அரிதரிதே இந்த ஞாலத்திலே.

இன்பங்கள் நாடிய மானிடர் தம்முள் இடறுவதால்,
துன்பங்கள் மேவும் இம்மண்ணிடை; இன்பந் தொடரொருவன்
தன்பங்கில் ஏனையர் தம் பங்கெடாமற் றடுப்பதற்கே
அன்பங்கு வேண்டும்; பொதுவின்பம் நாடற் கறிவொடுமே.

வட்டமிட்டோடிய வாழ்க்கையில், ஆண்டிக்கும் மன்னனுக்கும்
திட்டமிட் டொவ்வொரு பாட்டினைச் சேர்க்கினும், தெய்வமொரு
மட்டமிட்டார்; பிறரைப்பற்றி வாழுதல்; ஓர் மரணச்
சட்டமிட்டார்; அங்கு கண்ணியபேதமென் சாற்றுதற்கே? ஈசய

வேண்டாமை வேண்டுதலில்லானைப் போற்றி விசனமொன்றும்
தீண்டாமை வேண்டுகின்றோர், மன்னுயிர் நலம்சேர் நெறியைத்
தாண்டாமை வேண்டவேண்டாமோ? தனிப்பெருந் தாரணியை
ஆண்டா னொருவர் பங்கன்றென் றறிந்தன்படைதல் நன்றே.

(அருள்மாட்சி)

கார்போற் கடலிற் பிறக்கும், சமம்நிற்கும், காவகித்துப்
பார்மீது தூய அமுதாக்கித் தாவரம் பச்சைபெற
வேரூடும் மீதும் விரிகுவதாம் விண்ணின் வீழ்ந்தொழுகும்
நீர்போ லிருக்கும் அருள், தாழிடம் புகும் நீர்மையதே.

தனக்கென்று வாழ்கின்ற தன்மை மனிதர்தமக்கு மட்டோ?
வனக்குன்றில் வாழும் விலங்குக்கு முண்டு; மனிதர்தங்கள்
மனக்கிளர்வால் வரும் மாட்சி யென்னோ? தம்மதி செலுத்தி
இனக்குழுவோருக் கியலின்பம் நாடி இருக்கின்றதே.

மன்னுயிர்ப் பேணி உழைக்கின்ற மேன்மை மனிதனுக்குத்
தன்னுயிர்ப் பேணி உழைக்கக் கடனில்லை; தாம்பிறக்கு
முன்னுயிர்யாவும் ஒன்றென்றறிந் துய்க்கின்ற மூதறிவோ
ரின்னுயிர்ப் பேணல் தம்மேற்கடனா யிறை ஏற்குமன்றே.

(அன்பு)

நாடாளி னென்ன, நகராளி னென்ன, நரர்க்குச் செல்வம்
கோடானு கோடி யிருந்தென்ன, மேனியிற் கோட்டழகு
வாடாதிருந் தென்ன, வாயாத்திறம் பலவாய்த்து மென்ன,
ஈடாகுமோ உள்ளன் பில்லாக் குறைக்கவை, எண்ணிடினே?

துன்பில்லை யென்றல்லவோ விழைவார் சுவர்க்கப் பதவி?
வன்பில்லையாகில், வரும் இந்தவாழ்க்கையில் வான்மகிழ்ச்சி;
இன்பல்ல இந்திரன் மாட்சியும் உள்ளத்தெழுச்சி யின்றேல்;
அன்பில்லையேல், விண்ணும்வேண்டேன், அமரர் அழைக்கினுமே

மெய்யான அன்பின்றித், தன்னயம், பேர் இவை மேவவெண்ணி
ஐயாயிரங்கொடை யீந்தென்னே? மீண்டொன் றடையவெண்ணி
பெய்யாது, மாகடல் மொண் டுலகுய்யப் பெய்யும்மழைபோல்,
செய்யாது செய்த உதவியன்றோ மெய்ச் சிறப்புடைத்தே?

சாயாத நேயமுடையார், உறுதடை சங்கையின்றி,
ஆயாச மின்றி யுழைப்பார் அந்நேயம் அணைந்தவர்க்காய் ;
சேயாது செய்யினும், தாயார்பொறுத்ததன் சீர்நினைதல்
நேயாதிகாரநிலை ; அதன்மேல் நன்னிலை யில்லையே.

தாழ்வார் முறையிற் பணிகுவரென்னிற் ; றனமுடைத்தாய்
வாழ்வார், இவர்நம் கடவுள் படைப்பென்று, மற்றவர்மேல்
சூழ்வார் அன்பாம்நெறி யெண்ணில், கலங்கித் துன்பக்குழியில்
வீழ்வார் குறைந்து, உலகின்ப முள்ளோங்கி விளங்குவதே.

மின்,பேய்மழை, புகை, காந்தம், விரியும் வெளிச்சம், என்றும்
தன்போற் பொருளையல்லாது கலந்து தழுவலில்லை ;
அன்பே யுருக்கொண்ட ஆராவமுதை, அடியவர்கள்,
அன்பாம் உயர்பண்பினாலன்றி, என்றும் அடைவதின்றே. ௱௫௰

(மெய்ம்மை)

பொய் யாதரவிலும், போராட்டம் நன்று ; புகன்றபடி
செய்யாதவரினும், சேய் நன்று ; கோணும் சிமிட்டுடைய
ஒய்யார மாதினும், ஊமைப்பெண் நன்று ; உபசாரமற்ற
நெய்யா ரமுதினும், கூழ்நன்று, மானம் நிலைத்தவர்க்கே.

கார்கெட்ட மென்பயிர் சோர்வுறும்போலக் கருத்தினுள்ளே
நேர்கெட்டவர் உண்ணிலைகெட் டறிவின் நிறைவொருவிக்,
கூர்கெட்ட புந்தியும், ஏர்கெட்ட சீலமும் கொண்டுசென்று,
சீர்கெட்ட வாழ்வு நிறைப்பார், படைப்புச் சிதைவுறவே.

பொய் யுறுவார் புன்மையே யுறுவார் ; கெடும்பொய் யகற்றி
மெய் யுறுவார் உயர்வே யுறுவார் ; தம்மெய்வேலை செய்யக்
கையுறுவார் கனத்தை யுறுவார் ; நம்பிக்கை யெடுக்க
ஐயுறுவார் உறுவாரோ அருள்தரும் ஆனந்தமே?

(உயர்வு தாழ்வு)

சாதி யுயர்ந்த தென் றெக்களிப்பார் சிலர் ; சாஸ்திரங்கள்
ஓதி யுணர்ந்ததினாலே, அவ் வோதுதலுக் கிணங்க,
நீதியும் அன்பு முயர்ந்தால், உயர்வு ; அந்நெறி யிலதேல்,
ஆதி யுயர்ந்த பிறப்பால் உலகத்திற் காவதென்னே ?

இனத்தாழ்வினால், இழிவெய்தாது ; இப்பாரின்பம் எய்தவொண்
தனத்தாழ் வொருகுறை யாகாது ; நுண்மதி சார்ந்திலதேல் [ணாக்
கனத்தாழ் வதனினும் வாராது ; மற்றையர் காரியத்தே,
வினைத்தாழ் விசைக்கும் குணத்தாழ் விழிபு விளைப்பதுவே.

குலஞ்சிறி தாயினென், பேர் சிறி தாயினென், தாங்குடிகொள்
இலஞ் சிறிதாயினென், எண்ணு உலகத்தில் ஏற்றும் பொருள்
வலஞ் சிறிதாயினென் ? உண்மையும், அன்பும் வகித்தவர்சேர்
நலம் சிறிதன்று ; எண்ணிப்பாரீர், அருள்பெற்ற நந்தனையே.

எத்துறை யாயினும், ஓர் பழிப்பின்று ; உண்மை யெய்தி மனம்
ஒத்துழைப்பாருக்குப் பீடுள்ளதே ; உல குய்யுவதோ, [தோ
சொத்துடையார் அதை வைத்துநின்றால்? உண்ணும் சோறுள
வித்திறைத் தேரின் உழுவோர்தம் நெற்றி வியர்ப்பின்றியே ?

சின்னப் பொருளென் றொதுக்கிவிடேல் ; குற்றம் செய்துவிட்
தன்னந்தனித் தொருதாம்பின் கயிறும் நம் சத்துருவாம் ; [டால்
நன்னெறி நின்ற மனச்சாட்சிபோதம் நமக்குண்டெனில்,
மன்னர் எதிர்க்கினும் வெல்லும்படை நம் மருங்கிலுண்டே.

சேற்றில் வளர்ந்தது செந்தாமரை ; கடற் சேற்றினுள்ளே,
தோற்றும் விலைபெற்ற முத்தே ; துதிபெறுஞ் சோதிமணி
சீற்ற அரவின் றலை மீதிருக்கும் ; தெளிந்துலகம் [டுமே.
போற்றும் பொருள் பொருள்செய்யாப் பொருளினும் போந்தி

(உள்ளிடுக்கம்)

உள்ளளவே நம் உரையளவாம்; நம்முளம் உறுதி
கொள்ளளவே நம் செயலளவாம்; அன்பு கொள்ளுகிலார்
குள்ளளவான செயலுடையார்; குறும் எண்ணமுள்ளார்;
எள்ளளவேனும் அவரால் உலகத்திற் கின்பமின்றே. ௱௬௰

தண்ணம் பெருங்கடலிற் சிறுமீன்கள், சதமெனினும்,
வண்ணம் பெருகுஞ் சுறா ஒன்றினுக் கிரை வாய்ப்பதுபோல்,
திண்ணம் குறைந்தவர் சீரர்க்கும், தன்னயந் தேடுவராய்
எண்ணங் குறுகியவர் பொதுநோக்கர்க்கும், ஏவலரே.

(கேடுசூழாமை)

ஒருவர்க்குங் கேடு நினையேல்; உன்கேடு ஒருவன் நினைத்தால்,
இருவர்க்கும் மேற் பொதுநிற்கின்ற ஈசனையெண்ணி மற்றோன்
நிருவிக்குங் கேடு தடுப்பதற்கேற்ற நெறி அருளால்
வருவிக்க லாகும்; எதிர்கேடு தேடல் மதிகேடலே.

இடுங்கிய உள்ளுடன் நோயேற்கும் போது, எமன் எய்தல்எண்ணி
நடுங்கிடும் போது, நமக்குள்ள யாவும் நழுவவிட்டே
ஒடுங்கிடும் போது, உற்றநோய், எமன், ஏக்கம் ஒறுத்தலுடன்,
பிடுங்கிட ஓர் மனச்சாட்சியும் வேண்டுங்கொல், பித்தறவே?

ஈரா இடும்பை, வறுமை, பிணி, இவை சேர்ந்துழுந்தும்,
பேரார் மனிதர் கெடுவினைதுன்னிய பேய்மதிதான்;
ஏரார் உயிர்க்குயிர் மேலெழத்துன்பம் இடுதுருசாய்
ஆராவமுதனையான் வைத்த சூழ்வென் றறிதல்நன்றே.

சிறியவெல்லாம் பெரிதாய்த் தோன்றும் சின்னப் பருவமுதல்,
பொறிய வெல்லாம் விட்டு மெய்ஞ்ஞான முள்ளம் பொருந்தும்
நெறியவை காட்ட மனச்சாட்சி யொன்று நிறுவியதை [வரை,
அறியமின்றார், பிறர்கே டாவலிப்பதற் கஞ்சுவரே.

மற்காட்சி கண்டும், மனிதர் மனிதரை மாய்த்திடும் போர்ப்
புற்காட்சி கண்டும் அகம்புளகிக்கும் புலைத்தொழிலீர்,
பொற்காட்சியிற் செங்கதிரோன் எவர்க்கும் பொதுப்பொலிந்த
நற்காட்சி நித்தியங்கண்டும், நலமுற்று நாணிலீரே.

நிறம்பற்றிச், சாதி மதம்பற்றிச், செல்வநிலை, பகைசேர்
மறம்பற்றி, நீதிதிறம்பி, மனிதரை வாட்டுகின்றோர் ;
அறம்பற்றி எவ்வுயிர்மாட்டும் இயங்குபவ னருளின்
திறம்பற்றி உய்வதுதா னெங்ஙனே, உட்டெளிகிலனே.

தனத்தினைச் சேர்ப்பவர் தாளாண்மையெய்துவர் ; தாழ்தலிலாக்
கனத்தினை வேண்டுபவர் மெய்ம்மைநாடிக் கடைப்பிடிப்பார் ;
இனத்தினைத் தாங்குபவர் ஒருக்காலும் இடர்க்கழியார் ;
மனத்தினிற் றீங்குநினையார்க்கு வாழ்க்கை மகிழ்தருமே.

நாட்போகு மென்பதுந் திண்ணம் ; கொடியநமன் வருங்கால்
ஆட்போகு மென்பதுந் திண்ணம் ; சகோதரம் போன்றவரை
வாட்போரில் வீணில் மடித்தால், வதைக்க வதைக்க நமைக்
கேட்போன் அணுகுவன் ; மீட்போரும் அன்று கிடைப்பதின்றே.

(ஜீவகாருண்ய உழைப்பு)

பண்டுண்ட பேர்பலர் வாழ்நாள் பாழ்நாளெனப் பார்த்ததைநாம்
கண்டுண்டு காலத்தை நல்வேலையின்றிக் கழிப்புடையோம் ;
தொண்டுண்டு வாழிகள், கீழ்ஜீவராசிகள், துன்பு கொலை [ளவு
யுண்டுண் டழிவதைக் கண்டோம் ; தவிர்க்க உழைத்திலமே.

பொய்க்குன்ற மீட்டிப், புலாலுண்டு,போர்செய்து, பொன்னினை
மைக்குன்றமாக்கி, மனிதர் அன்பாய மறந்தனரே ; [ஞ்சை
வைக்குன்றந் தீப்பொரி முன்போலும் ஈங்கவர் மாந்துமின்பம் ;
மெய்க்குன்றமே, அவர்வாழ் வெதற்காக விரிப்பதுவே?

பன்னாள் படித்துப் பலபாடுபட்டுப், பலர்க்குழைத்துச்
சின்னாள் நலந்துய்க்கும் வாழ்க்கையில், வாயறாஜீவர்கட்காய்க்,
தன்னுடல் விட்டவை நோவின்றி வாழத் தகவுழைக்கும்
நன்னாள் அருளிய தெத்தனை நீ இந்த ஞாலத்திலே.

கண்கொண்ட பல்லுயிர்க்கண்ணும் கடவுட் கலப்பறிந்து,
தண்கொண்ட பேரருள் மானிடர் ஆளத்தலைப்படில், அவ்
விண்கொண்ட இன்பப்பெருக்க மனைத்தும் விரைவுடனே
மண்கொண் டிலங்கும்; நம்மானிடர் தேவரை மானுவரே.

கதையேனு மாங்கு கொலைபொறுக்காத கருத்துடையான், [னே;
வதையாதுண்பான், உண்ணத் தூண்டுவன் தேவரின் மாண்பின
[மேற்
புதையாத செல்வம்,மெய்ப்புண்ணியச் செல்வம்,புகழ்ச்செல்வம்,
சிதையாத செல்வம், செழுஞ் சீவகாருண்யச் செல்வமொன்றே.

அடரும் பரம்பொருள் ஞானத்துயர்ந்தவர் அப்பொருளின்
சுடருண் டெழுமுயிர்த் தோற்றத்தில் நேயந் துலங்குவரால்,
இடருண் டுழல்கின்ற ஜீவர்கள்பால் அன்பிலா மனத்தார்
படரும் பரம்பொருள் ஞானமுந் தம்முட் பதிவிலரே.

எல்லா வறத்திற்குந் தாயாய், இறைவன் இயற்கையில்வாழ்
பல்லாருயிர் அமர்பான்மையைப் பார்த்த பயனதுவாய்க்,
கல்லா உளத்திலும் கற்பகமாய், அருட்கார்பயந்த
கொல்லாமை யோங்குவிப்பார்க்கே கண்டீர் எங்கை கூப்புவதே.

(அவா)

முன்னிலதாம் இச்சை மேவிக்கொண்டால், அது முற்றுப்பெற
இன்னலும் முன்னில வேண்டும்; விழைந்தன எய்துதலும்
பின்னிலும் இச்சைக்கு வித்தாம்; விளையும் இப்பெற்றி யெல்லாம்
உன்னிடுவார் நலமல்லாத ஆசை ஒழிப்பரன்றே.

பொல்லாத ஆசை பொருளாசை : ஒத்த பொருள்கிடைத்தும்,
நில்லா தொருநிலே, நேர்பிறழச்செயும், நேயமுக்கும் ;
சொல்லா லளப்பருந் துன்பந் தொடர்கினும், தாயசுடர்
வல்லாது வண்டிழுக்கும்போல் இழுத்து வதைக்குமன்றே.

திறத்தால் உருக்கொண்ட மந்திரத்தால் உள் நெகிழவைத்துப்,
புறத்தால், அணிகலன், ஆடையினல் புந்தி போர்த்துக்கொண்
அறத்தால் வரும் அழிவில்லாத நன்மையை ஆதரிக்கும் |டால்,
திறத்தால் திகழ்கின்ற நாள் எந்தநாள் இந்தச் சீவிதத்தே ?

இப்பாருடைமையில் எல்லையில்லா இச்சைபெற்றுகின்றோர்
தப்பாதியமன் வருநாள் தயங்குவர் ; தாரணியில்
எப்பாலுடைமையும் தன்னீங்கற்பால தெனநினைப்பார்
ஒப்பார்மலையை அவன்வலி அங்குற் றுடைவதற்கே. ஈஅய

(விளைமாட்சி)

திரை யெழுந்தாடும் கடல்போல் அலேகின்ற சீவிதத்தில்,
நுரை யெழுந்தாலென்னத் தோன்றிமறை அற்ப நோக்கம்விட்டு,
வரையெழுந்தாலென்ன,மாண்பொருள்சாதித்துவைத்திருந்தால்,
நரையெழிந் தோய்வுறும் நாளிலும் ஆனந்தம் நல்குமதே.

அலேபெறு வாழ்க்கைக்கடல் நீர்க்குமிழிக ளாயுதித்துத்.
தொலேவுறும் புன்மைச்செயல் தொடராமல், துலங்குகின்ற
விலேபெறு முத்துக் குளித்தெடுத்தென்ன விழுச்செயலே
நிலேபெற, இன்பம் உலகோங்க, நின்று நிகழ்த்துவமே.

(உள்ளப்பயிற்சி)

உள்ளெனுங் கோளத்தி லுண்டாம் சுரங்கத் துழைப்பவரே,
தெள்ளெனச் சோதி திகழ்கின்ற தத்துவச் சீர்மணிகள்
அள்ளுவர், ஈவர் ; அவைவாங்கி மாந்தர் அணிந்தபின்வில்
வள்ளலராய், மதிமேன்பாடுள்ளாருள் வயங்குவரே.

செயலுக்குத் தாய் எண்ணம்; எண்ணத்தின் றாய் கல்வி, சித்தவிர்
அயல், கூட்டுறவு, புடைபொருள், முன்னம் அமைந்திருந்த[த்தி,
இயல், முதலாயின; எண்ணங்கள் நல்வழி யேற்றிவிட
முயலுவதால், செயல் நன்றாய்ச் சதா இன்பம் மூண்டெழுமே.

மண்பொருள் சற்றுக் குறையினென், மிக்க மலியினென்? நாம்
உண்பொருள் பாலமு தாயினென், கூழினெ டுப்பெனிலென்?
நுண்பொருள் நூல்வழியோ டல்வழிக்கண் நுகர்ந்தவர்க்குக்,
கண்பொருளாய்க், கல்வி நல்லுணவாய், உட்களிகொளுமே.

வெள்ளியிலில்லை, தங்கத்திலுமில்லை நம் மேலெழுச்சி;
உள்ளிய உள்ளத்திலாமே; அதனை ஒழுங்குபெற,
ஒள்ளியதாக்கி உபகரித்தால் நம்மை ஒள்ளியராய்த்
தெள்ளியர் கொள்ளுவர்; அன்றேல், பதரெனச் செப்புவரே.

பல்வாயிடுக்கண் பரந்த இஞ்ஞாலத்தில் பைந்தொடியாள்
இல்வாழ்வுக்கோர் அடியாளோ, இதந்தரும் இன்றுணையோ?
செல்வாயெலாம் கல்விசெல்விக்கின், நாம்அவள் செய்நலத்தால்
நல்வாழ்வு செல்வுறுவோம், நாடும்பீடுறும் நம்புமினே.

(நிகழ்காலத்தேற்றம்)

புகழ்கின்ற பண்டையக் காலம் பொற்காலம், புவியினிடை
நிகழ்கின்ற காலம் கொடுங்காலம் என்று நினைத், ததனை
இகழ்கின்றதே தொழிலாய்த், தொழில்யாவும் இழக்கவிட்டார்
திகழ்கின்ற தெங்ஙனம்? எக்காலமுங் கண்ட தெய்வமொன்றே.

அன்றே எழுந்த வெய்யல், நிலவின்றும் அடைகின்றதே;
நன்றேசெயின், இன்றும் நன்றே விளைவுண்டு; நண்ணுமதி [றே;
யொன்றே; பிறப்பிறப் பொன்றே; உணரும் உணர்ச்சியொன்
றொன்றே நிலவும் இயற்கை யொன்றே; என்னே சோருவதே?

(நேரமதிப்பு)

நேரமன்றோ பொருள்? நேரத்தை நாம் நிறுத்தாற்றும் உப
காரமன்றோ உயர்வுந் தாழ்வும் ஈவது? கர்த்தன் தந்த
வாரமன்றோ இந்தவாழ்வு? இதில் நன்மையை மன்னுவித்தல்
பாரமன்றோ? நமக் கேனையவாழ்விற் பயனென்னவே? ௬௯

துன்பங் கொணர்வதும், துன்பந்துடைக்கத் துணைப்பதுவும்,
இன்பங் கொணர்வதும், இன்பம்பெருக்க இயலுவதும்,
முன்பிப் பொழுது பின்பாய, ஆம், ஆகும்முதலதுவாய்
நின்பங் கிருப்பதும் நேரம், நெஞ்சே, இந்த நீணிலத்தே.

மெய்கடன் வாங்கிய மானிடர் கைதனில் வெண்ணெய்கொண்டு
நெய்கடன் கேட்கின்றவாறு, தம்நேரத்தை நீதியிலே
செய்கடன் செய்துசுகியா தயற்சுகம் தேடிநின்றால்,
உய்கடனில்லை, உறுசுகமேயில்லை, உண்மையிதே.

எந்நேரமும் இறைதந்ததனால், அதெல்லாம் நமக்குப் [இங்கு
பொன்னேரமேயென்றறிந்து, பொன்போல் அதைப்போற்றி,
மன்னோர் உயிர்கட்கு நம்மாற்செயத்தகும் மாண்செயலால்
நன்னேர மாக்குதல் நங்கடனுமென்று நம்புவமே.

நாளென்ற வாழ்முதல், வாளாக் கழித்திடின், நம்முயிர்க்கு
வாளென்று மாறி, அறுத்தழிக்கும்; தெய்வ வண்கொடையின்
கோளென் றறிந்தறம் செய்யின், உயிருணுங் கூற்றனுக்கே
கேளென்றிருந்து, பின்வாளென்று மாறுங் கிடையுடைத்தே.

(புகழ்)

பிறந்தார், உண்டார், இருந்தார், தூங்கினார், இப்பிறப்பொழிய
இறந்தார் அவரென எள்ளப்படா, திவ்வெழிலுலகில்
அறந்தாணியற்றி, அருஞ்செயல் நாடி, அருளணிந்து
சிறந்தாரெனப் புகழேந்தலன்றோ மெய்ச் சிறப்புடைத்தே?

பூவென் றலர்ந்த நற்புந்தியுள்ளார் பலர் பூவுலகில்
தீவெந்து போயினரேனும், அப்பூமணம் தெள்ளியசாற்
றேவந்துறைய இறத்தெனத் தம்செயல் தேர்மனத்தர்
காவந்தராகப் புகழ் படைத்தார் இக்கடலிடத்தே.

(உழைப்பு)

பண்டே பெரிய குலத்தோம், முன்னால் ஒன்று பாடுபட்டுக்
கண்டேயிலை என்பர் ஓர்சிலர்; சொத்தினைக் கள்ளர்கொண்டால்,
கொண்டேது வேலை தொடுப்பார்? இரக்கக் கைகொள்ளுவரோ?
தொண்டே புரிகினும், சோம்பலில் மேன்மை தொழில்செயலே.

பண்டுண் டிருந்தபடியே, இப்பாரிற் பலதடவை
உண்டுண் டிருத்தல் உயர்நோக்கமோ? மற்றுறங்குதற்குத்
திண்டுண்டு, பாயுண்டது சிறப்போ? பசுந் தேன்தெளித்து
வண்டுண்ட பூவுக்கு மேலில்லையோ உயிர்வாழ்வெமக்கே?

அரும்பெருஞ் செய்கை யுணர்ந்தூக்கியாற்றி, அற்பப்பிறப்போர்
விரும்பரும் பேரையும், சீரையுமேவி விளங்குகின்றார்;
வரும்பெருஞ் செல்வந் தலைக்கூடினோருள் மடிபுகுந்து,
துரும்பிரும்பைத் தின்றவா றவர்சீரைத் தொலைத்ததுவே.

சீமான் பதவி யடைந்தோம்; செழுங்கல்வி சேகரித்தோம்;
கோமான் இதயத்தைக் கொண்டோம்; இங்கின்பம் குறிப்ப
நாமாந்தினோம்; என்பதிற் பெரிதே உற்ற நங்கடனை [தெல்லாம்
ஆமாறு செய்தனம் என்ற எண்ணத்தெழும் ஆனந்தமே. உா

ஊன்று மனதிற் பதியாதுபாடம்; உளைதலின்றித்
தோன்றுது கைப்பொருள், சீர்மையுமில்; உளந்தூய்மை, உயர்
சான்றாண்மை தற்செறல் மீதேமுகிழ்க்கும்; தகும் சுகத்திற்
[னே?
கின்றாள் உழைப்பு; இதை யெண்ணாமற் சோம்பி யிருப்பதென்

நினைத்தால், உயர்ந்த நெறிகாணலாம் ; உள்நெகிழ்ச்சியின்றி
முனைத்தால், முயன்றப் படியேறலாம் ; முகிழ் முனைவலி
எனைத்தானுமல்ல, உழைப்பால் வளரும் ; இறையறிவு
தனைத்தானறிய முயல்வார்க் கல்லால் இல்லை சாதிப்பதே.

மதிபோற் பொலியுமுகமும் மதியொளி வாழ்மனமும்,
நதிபோற் பெருகும் இயற்கைநலங்களும் நல்கப்பெற்றார்,
ஒதிபோலிருக்கத் தலைவிதியோ ? உயர் வொப்பரிய
நிதிபோற் பொலிவர், உழைப்பாளராகில் நெடுநிலத்தே.

நேராய் நலத்துக் குழைத்த துண்டேல் ; சர்வேசன் செயல்
ஆராய்ந் தறிந்துள்ள நேரமுண்டேல் ; இங்கோரா ருயிரைப்
பூராயம் நேசித்த நேரமுண்டேல் ; அப்பொன் னேரமெல்லாம்,
பாராய், பழுதல்ல, நாம் வாழ்வுகொண்ட பயனடைவே.

நம்மாலியன்றதில் உத்தமம் செய்தல் நம்மேற்கடனும் ;
கைம்மாறு வேண்டுதல் வேண்டாம் ; தரும்கடன் கர்த்தனுக்கே ;
இம்மாநிலத்தில் அனுபவம் விதித்தல் ஈசனியல் ;
எம்மானிடர்க்கும் தகுபா றளித்தல் எளிதவற்கே.

உண்மையினோ டுழைப்பானன்றி, உத்தமம் உற்றிடுவான்
திண்மையினுங் கடனில்லை ; பயன்றரல் தெய்வவருள்
வண்மையதாம் ; பயனெண்ணா துழைக்கின், மகிழ்விக்கவே[ளே.
ஒண்மையுளான் இருக்கின்றான் என்றெண்ணி யுழைத்துக்கொள்

திண்ணம், பொறுமை இரண்டின்றி மாணும் செயலிலதாம் ;
எண்ணமும், சொல்லும், செயலும் இம்மாண்புகள் எய்திநின்ற
வண்ணமட்டாகும் நம்வாழ்வின் பயன் ; அவை வாய்த்தவரே,
கண்ணியராகிப் பொலிவார் உலகுறுங் காரியத்தே.

உண்பாயென்றால், இங்குழைப்பா யென்றாதியில் ஓர் சட்டமே
திண்பாய் ஒருதெய்வம் தீட்டினதே; தத்தம் செய்தொழில்கள்
பண்பாய்ச் செய்வார்க்குப் பயமில்லை; சோம்பற் படுவர் துயர்க்
கண்பாய நிற்பர், உயிர் பொறுத்தாரிற் கடையரென்றே.

பாடுபடாது சுணங்கினும், ஈசன் படியளப்பான்,
கூடுபடா துயிர்கொண்டு செல்வோமெனச் சோம்புகின்றோர்,
தேடுபடாத பொருளிலதென்று தெரிவதில்லார்;
ஈடுபடா தவர்வாழ்வுக்கு மானிட யாக்கையுமே.

அயர்ச்சியினால் அழிவாகின்ற தாக்கம்; அடுத்துழன்ற
முயற்சியினால் அழிவானது மாகும்; நம்முன்னிலைமேல்
உயர்ச்சியை எய்துவமென்றால், உழைப்புடன் ஓங்குகல்விப்
பயிற்சியும் வேண்டும்; பின் எய்தாததில்லை இப்பாரிடத்தே. உாய்

கீழ்மையிலா மனத்தாழ்மை நன்றே: கல்வி கேள்வியுற்ற
ஆழ்மதியோ டுள்ளகல்மனம் நன்று; அற்பமாங் குடியில்
வாழ் மனமேனும், மடியில் மனம் நன்று; வாழ்க்கையுள்ளே
ஊழ்முறை கண்டும், உழைப்புவிடா மனம் உத்தமமே.

ஞாலத்திலே நமக்காய் விதிக்கப்பெற்ற நற்கடனைக்
காலத்திலே, உள்ளறி வொத்தவாறு, கருத்திருத்திச்,
சீலத்திலே, ஒழுங்கேறச் செய்தால், உறுந் தீங்கனைத்தும்
நாலத்திலே யொருபங்காம், மிகும்சுகம் நான்மடங்கே.

செயப்படும் வேலை ஒழுங்குடன் செய்யின், திடம் பொழுது
நயப்படும்; பாழ்பொருள் போகாது; கோள் நடவாதெனினும்
பயப்பட வேதுவிலை; அவ்வொழுங்கு பழகிவிட்டால்,
வியப்பெழக் கூடும் வினைமாட்சி, வெற்றி விளைவுறுமே.

நாளையென் றோர்நலம் நீக்கிவைவையேல் ; நற்செயல் புரிய
வேளை நன்றே யிது ; செய்யா ததை இன்று விட்டுவிட்டால்,
மீள அவ்வெண்ணம் வருமோ? வந்தாற் செய்ய வேளையுண்டோ?
ஊளைநரிக் குடல் போமோ? எவ்வா றுண்மை ஊகிப்பதே?

(பெருந்தன்மை)

விருப்பால் உலகத்தவர் சூறையாடி, விழைவொடிந்த
நெருப்பால் வெதும்பினும், வாழ்வால் மகிழ்ந்து நெளிந்திடினும்,
ஒருப்போல் நிலைபிசகா தொளிகாட்டும் உயர் உடுப்போல்,
இருப்பார் பெரியர் உலகெண்ணிடாமல், இலங்கிக்கொண்டே.

ஒழுக்காறு பாய்வழிச் சாக்கடை நீர்சென் றுடைவதுபோல்,
அழுக்காறு பாயும் தகைசேரிடத்தில் ; அவ் வாற்றுவெள்ளம்
வழுக்காதனையும் இழுப்பதுபோல், தகை மாண்புடையோர்
இழுக்காளர் சொல்லுக்குங் காயாதடங்கி யிருப்பரன்றே.

(பொருள்)

மணம் வேண்டுமாகிற், பணம்வேண்டும்; வெம்பசிவாட்ட அன்னம்
உணவேண்டுமாகிற், பணம்வேண்டும் ; அன்றி, உயிர் துறந்தால்,
பிணம் போகவேண்டிற் பணம்வேண்டும் ; வாழ்வில் எப்பேறுங்கிட்டும்
பணம் வேண்டுமாகிலும், கைப்பணம் வேண்டும் இப்பாரிடத்தே.

எல்லாப்பொழுதும் பொருளுக்குக் கேண்மையர் எய்திடுவார் ;
அல்லா தொருபொழுது ஈகைவிட்டால், அன்றவரும் விட்டார் ;
பொல்லாதவ னென்றும் வைவார் ; நெருங்கப் பொருள்கொடுத்தால்,
சொல்லாகும் காற்றையும் விற்பார், முகமன் றுடைகட்டியே.

இறுக்கும் பெருங்கடனுக் கில்லை எல்லை ; எடுக்குந் தொல்லை
வெறுக்கும் அளவினுக் கோருரை யில்லை ; வெறுங் கணக்கர்
ஒறுக்குங் கொடுமைக் கொருதரமில்லை ; உறவதெல்லாம்
பொறுக்குந் திறமை கணக்கின்றி வேண்டும் இப்பூதலத்தே.

பொருப்புறு நல்லதுறவோ ரலாதிந்தப் பூவிடத்தே,
இருப்புறு மற்றைத் துறவிகள், இல்லவர் ஈபணத்தை
விருப்புறுவா ரெனில், அங்கவர் வேடமென்? வீண்துறவி
யுருப் பெறுவாரினும் மேலவர் இல்லத் துறைபவரே. ௨௨௰

(இயற்கைக் காட்சிநலம்)

நூற்படுங் கல்விக்கு மேலாம், இயற்கையை நோக்குவதால்
ஏற்படுங் கல்வி ; இயல் ஈசன் செய்கை எழில்பரந்து
நாற்புறஞ் சூழ்ந்தது நம்மை ; உற்றாயின், நலம்பெருகும் ;
மேற்படுந் தெய்வவணக்கம் ; உள்ளானந்தம் மேவிடுமே.

உலக வியற்கைப் பொருளும், இயற்கை யொழுங்கும், உள்ள
மிலகக்கண் டாய்ந்து வியப்புறல், ஈசனை ஏத்துவதற்
கலகிலதாம் வழி ; அவ்வழி செல்பவர், அன்பருக்குள்
திலகமதாய், அருள் எஞ்ஞான்றும் ஓங்கித் திகழுவரே.

தன்னையுந், தன்வலி, தன்செயல் தன்னையுந், தான்குவித்த
பொன்னையும், பூமியையும் பற்றிஎண்ணிப் புளகிக்கின்றேன்,
மின்னையும், மீனையும், மேகக்குழாத்தையும், மேகம்பெற்ற
அன்னையும் பார்க்கின், அறப்போம் அவன்றன் அகங்கரிப்பே.

பொங்கிய குன்றமும், சாரலும், பள்ளமும், பூநிலவு
தங்கிய தாமரைப் பொய்கையும், புள்ளினம் தண்குரலால்
இங்கிதம் பாடச், செவிசாய்க்கும் சோலையும் இங்கிலையேல்,
மங்கும் இவ்வாழ்வு மகிழ்வற்று, மீனற்ற வானென்னவே.

பட்டாடை, பொன்னகை, பாற்சோறு, வாழப் பரிந்தொருவர்
கொட்டாரம் ஈயினும் கொள்ளேன், இயற்கையில் கொள்ளைகொ
மொட்டாய், மணக்குமலராய், வரிவண்டு மொய்க்க இனக் [ண்டு
கட்டாய் வளர்செடி காட்டா தென்காலம் கவர்ந்திடினே.

நீலப்பளிங்கு பரந்தெனத் தோன்றிய நீள்கடல் என்
மேலைப்புறமும், தலைக்குயரே விண் விரிகடலும்,
கோலப்புளினம் கிழக்குங் கண்டேன், வெண்மணற் குந்தினேன்;
மாலைப்பொழு தென்னைத் தன்வசமாக்கி மகிழ்வித்ததே.

மகிழ்வித்ததே என்னை அற்புதமூட்டி ; மதிமலரைத்
திகழ்வித்ததே ; கண்கள் ஆனந்தவாழித் தென்னீர் முழுக,
அகழ்வித்ததே நெஞ்சை ; அவ் வுயர்காட்சி என் னாருயிரை
நெகிழ்வித்ததே ; உள்ளம் ஈசன் விலாசத்தில் நீந்தியதே.

மனமறந்தேன் ; நித்தியநிலை அவ்விடம் வாய்த்ததுபோல்,
தினமறந்தேன் ; மனையோடிந்தவாழ்விற் றெரிவுடைய
சனமறந்தேன் ; சற்றுநேரம் தயாநிதி சந்நிதியின்
கனமுற, நேயம்பெருக, என்னுள்ளங் கனிந்தனனே.

செங்கதிர் தோன்றுவதற்கு முன்னே, ஒண்சிறந்த வெள்ளி
திங்களைநோக்கிச் சிரிக்கின்ற வேளை தெளிந் தெழுந்தேன் ;
எங்கும் நிரம்பிய மௌனத்தி லாழ்ந்த தென் னேழைநெஞ்சம் ;
பொங்கிய தானந்தம் ; நான் மறந்தேன் இந்தப் பூமியுமே.

எல்லா வுயிருந் துயின்றன ; அந்த எழில் நிறைந்த
சொல்லா மகிமையைச் சூடிய காட்சியைத் தோற்றுவித்த[உதய
தொல்லாதி, என்றுங் கண்தூங்காத சோதி துலங்கியதைக்[டே.
கல்லாய நெஞ்சங் கரையக் கண்டேன், மெய்க் களிப்புக்கொண்

(இசைமாட்சி)

இயங்கிய ஓசைக்கும் உள்ளு றுணர்ச்சிக்கும், என்பொருத்தம்?
நயங்கிளர் இன்பமும், தன்னயமற்றிடு நற்பரிவும்
சுபங்கொளும் இன்னிசை ஈசற்கிசையும் சொருபம் ; அவன்
மயங்கொளும் பான்மையினால், அஃதெம்மை வயங்கொளுமே.

(தன்னிலை சூழ்ந்து பரவல்)

வானாகி, வானினுடுவாகி, வானின் வயங்கொளியாய்த்,
தேனாகித், தேனின் சுவையாய்த், தெவிட்டற்ற தெள்ளமுதாய்,
ஊனாகி, ஊனினுறவாய், உயிரின் ஒளிநிலையாய்,
நானாகி, நானல்லவனாகி நிற்கின்ற நாயகனே.

விண்ணவனே, விறல்வித்தகனே, ஒளி மேவிய நம்
கண்ணவனே, நங்கருத்தவனே, அருட்கார்பொழியும்
தண்ணவனே, எங்கள் தாரகமே, உன்னைச் சாருமனப்
பண்ணவனே, எங்கள் உள்ளமெல்லாம் உற்றுப் பார்த்தவனே.

எங்கென்று தேடியுனைத் தொழுவேன்? என் இதயத்திலோ
செங்குன்றிலோ, அடர் கானத்திலோ, படர் தேசத்திலோ,
பொங்குங் கடல்தனிலோ, விண்ணிலோ பல்பொருள்களிலோ,
தங்குங்கருணை எதிலுங்கண்டேன், மெய்த் தனிமுதலே.

நெருங் கண்டகோளம் நிருமித்த நின்றிருக் கையலவோ,
சுருங்கண்ட மாமிதில் என்னையும் செய்தது, தோன்றுயிர்கள்
ஒருங்குண்டு வாழல் திருவுளத்தோர்ந்துயர் வானொழுங்கால்,
கருங்கொண்ட லீந்த பெருங்கொண்டலா மெய்க் கருணையனே?

வானேயுடையவர் தாமறியாத மகிமையுள்ளாய்,
தேனேயருள் வகித்தாள்கின்ற மேலவர் சேவையின்றித்,
தானே யுனையறியப் புகுந்தேன் ஓர் சழக்கனன்றோ;
ஏனே எழும் இவ்வவா ஒன்றலா இவ்வெளியனுக்கே?

எல்லா முனது செயலாயிருக்க, எனது செய
லல்லா தெனைப்பற்ற வொன்றில்லை யென்ப, தகத்திருக்க
நல்லா யுனைமறந்தன்றோ? எனதென்றும் நானென்றுமே
சொல்லாவ, துன்னில் வரு மொரு சின்னத் துளிகுறித்தே.

உன்னால் விளைந்தன நல்லதெல்லாம் இவ்வுலகத்திலே;
என்னால் விளைந்தன தீங்கில் ஒருபங்; கெடுத்தினும் நான்
சொன்னால், அவையும் நினதே; அத்தீயவை தூயவையே,
கன்னோர் என்னெஞ்சினைப் பொன்னேரதாக்குங் கருவிகளே.

உருப்படுமோ உல, கென்னுடல் அன்னை யுதரத்திலே
கருப்படுமோ, நின்கருணை யின்றேல்? கதிதான் கருத
ஒருப்படுமோ மனம்? ஒவ்வொரு தீங்கும் உறுமிடத்தே
வெருப்படுமே, புகல் என்றுமின்றென் றகம் வெம்பிடுமே.

மண்ணால் வனைந்த சிறுவீட்டிலே யென் மனமிருத்திக்,
கண்ணாதியான கதவமைத், தீடில் கணி பரப்பி, [உசய
எண்ணாத கோடி யெண்ணங்களை என்னுள் எழுப்பிவிட்டு
நண்ணாதபோல் நண்ணி நீயிருந்தாய்; இதின் நன்மையென்னே?

இருபொருள் இவ்வகிலம் படுமென்றது, இருபொருளும்
ஒருபொருளாய துணரப்பறந்தது; அவ்வுண்மைகண்டால்,
வருபொருளேது, வராததொன்றேது? இம்மதியிலிமேற்
றிருவருள்தானும் ஒரு காற் றிரும்புதல் திண்ணமன்றே.

நினையான் நினைக்கவும்; நன்றே நினைந்திந்த நீளுலகில்
வினையான் இயல்வ தியற்றவும்; நீதந்த வேற்றுயிர்க்குத்
தினையேனுந் தீங்கு நினையா திருக்கவும்; சேர்கின்ற என்
சினை யாதரிக்கவு மல்லால், உண்டோ இங்கு செய்கடனே?

உனக்கா யுழைக்கத் தலைப்படின், நான் இங் குணவுக்கல்லால்
எனக்கா யுழைப்பதெதற்கோ? துணைக்கொண் டிணையில் அருள்
மனக்காதலைக் கொடுத்துச், சோகம்மாற்றி மகிழ்விக்கும்; என்
றனக்காய் வருபொருள் வேறிலை, நின்னருள் சாதிப்பதே.

எனக்கென்று நான் அவ்வருட்கொண்டல்பால் ஒன்றிரப்பதென்
வனக்குன்றில் வாழு மரக்கொம்பில் ஓரிலை வான்பொழியத்[னோ?
தனக்கென்று கேட்டல் தகுமோ? தனக்குறு தாரகமில்
மனக்குன்று தாழ்த்தி வணக்கஞ்செய்வேன் அருள்வள்ளலுக்கே.

சொன்னால், வறுமையும் செல்வமுந் துன்பம், சுடு பசியால்,
பொன்னால் விளையும் பொறாமையினால்; அப்பொறாமை பின்னர்
ஒன்னார்தங் கூட்டம் விளக்கும்; அத்துன்ப மொழிப்பதெங்ஙன்?
என்னாவி காப்பதற்கித்தனை வேண்டுங்கொல் இன்னல்களே?

முன்னேறிச் செல்ல முயன்றால், பெரியர் முனிகுவர்; நான்
பின்னே நடக்கப் பொறுத்தால், சிறியர் பிடித்துந்துவார்;
இன்னே யிருக்கு நிலையில் உற்றாரும் இருக்கவிடார்;
என்னே இனிச்செய்வ தெங்கென்று போவ திறையவனே?

முனியார் முனிகினும், நின்னருள் முன்னிட முந்துவதே
இனியான் செயுங்கடன் என்றெடுத் தாய்ந்துன் எழிற்பதத்தை
நனி யான் பிடித்துக் கரையேற வெண்ணில், அந்நற்பிடியைச்
சனிபோல் இளக்க வருவார் நிரீசுரர், தர்க்கங்கொண்டே.

பொருத்தமிகுவ கடைத்தேறு மென்ற பொதுவிதியை
இருத்தினை யெங்கும்; பொருத்தம் வலியன்று; எளியவரை
வருத்த வலியவர்க் கோர்குறிப்போ? அவ்வலியவரின்
கருத்த நியாயம் புகின், நீதி எங்குறுங் காவலனே?

சுரந்துண்ட பால் முலையைத் துண்டித்தாங்கு, நின் சோறெடுத்
கரந்துண்டு, நின்னை மறுப்பாருடன் கலந்தாடுவனோ? [துக்
இரந்துண்டு வாழச்செயினும், வெங்கானத்திருத்தினும், என்
சிரந் துண்டமாக்கினும், செல்லவையேல் அந்தத் தீவழிக்கே.

களித்தண்டி அற்பக்கலை சேரலால் நின்கருணையொளிக் [உறும்
கொளித்தென்று மொன்று மறியாரை நம்பி யுழல்பவனைத்,
தெளித்தன்பும் மெய்யறிவும் சூட்டி, நின்பொற் றிருவடிப்போ
தளித்தின்பம் எய்திடச் செய்தலென்றோ, மெய்யருட்குருவே ?

கற்றதனாலும், கருமத்தினாலும், கருமமெல்லாம்
அற்றதனாலும், உனை யறியோம் ; பெரும் அன்பகத்தே
உற்றதுவாகில், உனையறிவோம் ; அன் புறுவிடத்தே,
மற்றெதனாலும் அறிவதுண்டோ நின்பொன் மாட்சிமையே ?

அண்டமெல்லாம் உன் அமைப்பாகும் ; அண்டத் தமர்ந்துநின்ற
பண்டமெல்லாம் உன் படைப்பாகும் ; என்று பகுத்தறிவாற்
கண்டவெல்லாவற்றி னுள்ளும் உன்கற்பனை காணுகில்,நான் [னே.
கொண்டதெல்லாம் உன்னதென்று கொள்வேன், அன்பு கூடுவ

எல்லாப் பொழுதும்,அவ்வுண்மை கண்டே, அன்பகத்திருந்தால்,
வல்லாத தாழ்வு வருகினும், உன்னதம் வாய்க்கினும் கே
டில்லா நடுநிலை தோன்றிச், சுகநிலை எய்துவதே ;
பொல்லாத மாயையெனும் பேய் பிழைப்பற்றுப் போய்விடுமே.

மகத்தாமுன் மெய்யுருக் கண்டிலனேனும், உன்வான்விசித்ர
ஜெகத்தால் பெருகும் வியப்பாங் கடலில் தினமுழுகி,
முகத்தாம் அறிவினு மேலறிவுற், றருள் மூண்டுவரும்
அகத்தாம் சுகத்திற்கு மேற்சுகம்யா தெனதாருயிர்க்கே ?

நெய்கலந் துண்டுடல் ஆற்றலளாவல், நிறை கலவாப்
பொய் கலந் தாடுவதற்கோ, உள் புண்ணியம் பூப்பதற்கோ ?
மெய்கலந் துன்னருள் வெள்ளங்கலந்து, உன் மெய்யன்பருடன்
கைகலந் தாடுவ தெந்நாள், கருத்திற் கலந்தவனே ?

உலகங் கண்டாய், உயிர் வாழ்க்கை கண்டாய், அதி னூற்றவிடங்,
கலகங் கண்டாய் தன்னயத்தைக் கண்டாய்,இங்கு கண்டவெலாம்
விலகுங்கண்டா யென்னும் வார்த்தையைக் கேட்டும், விரியுலகத்
திலகங் கண்டாயிலையே, மனமே, என்ன செய்தனையே ?

கூர்க்கின்ற வேதனையாலே, உயிர்கள் கொதித்த தெல்லாம்,
ஓர்க்கின்ற போதும், ஒருவர் எடுத்துரைக்கும் பொழுதும்,
வேர்க்கின்றதே, மெய்விதிர்க்கின்றதே, மனம் மெய்யனருள்
பார்க்கின்றதே, நெஞ்சம் வேற்பட்டவாறு பதைக்கின்றதே.

ஓடியநாளும் திரும்புவதில்லை ; உழைத் தொருகாற்
றேடியதில்லை அருட்பொருள் ; சேர்ந்தது பொய்ப்பொருளே ;
பாடியதில்லை யுன் பொற்பதம் , உள்ளம் பழுத்துருகக்
கூடியதில்லை என்கை ; அம்ம, நான்கொண்ட கோலமென்னே ?

கல்லாத நெஞ்சம், கயவாளி நெஞ்சம், கருமவழி
நில்லாத நெஞ்சம், நிலையாத நெஞ்சம், நெறி யென்பதே
இல்லாத நெஞ்சம், இறைஞ்சாத நெஞ்சம், இரக்கமில்லாப்
பொல்லாத நெஞ்சம், இதெங்கே யிருந்து புறப்பட்டதே ?

அளவற்ற தோற்றக் கடலிடத் தாழ்ந்துள் ளலைப்படுவேன்,
களவற்ற நன் மனத்தேனாகி ஆர்வங்கசிந்து நிற்க
உளவற்ற பாவி எளியனைப்போல் இங்கொருவருண்டோ,
பிளவற்ற பேரணுவாய், அண்டமாய் நின்ற பேரொளியே ? ௨௯௰

மருளும் பொருள் கனவிற் கண்டபோதும், மதிமயங்கி
அருளுந் தலைப்பிரிந் தோடுகின்றேனை அமிழ்த்தி நின்ற
இருளுந் தவிர்த்தருங் கேதக்குழிவிட் டெடுப்பவர் இவ்
வுருளும் புவியிலிலர் ; இருந்தேன் இங் குனைநினைத்தே.

வழுவுறு மேழைமன முடையேன் ; நின் மகிமையெண்ணுப்
புழுவிலுங் கேவலப் புந்தியுள்ளேன் ; என்பொய் புன்மையெ
[ல்லாம்
கழுவிடும் பாங்குங் கருதுகில்லேன் ; நின் கண்ணோக்கி னொளி
தழுவுதற்கென்ன தகையுடையேன், இந்தத் தாழ்ந்தவனே ?

மெய்யா ரகிலத்துளமாய் விரிந்த விழுப்பொருளே,
பொய்யா ருலகத்தழுந்திப் புழுங்கிய புன்மனத்தேன்,
ஐயாருனது மனதினற் கொள்கை அறிவதில்லேன் ;
செய்யாத செய்து நான் சீர்மாய்தலோ நின்றிருவுளமே ?

வலைப்படு மானென ழுற்படு மாசையின் வாயிற்பட்டே
அலைப்படுவேன், உனக் காட்படுவே னல்லன் ; அற்பருக்கே
விலைப்படுவேன் ; நல மேற்பட நான் என்ன வேலைசெய்யத்
தலைப்படுவேன் ? உன்னருட்டுணை யின்றித் தயங்கினனே.

அருக்க னுதித்திட்ட நாட்களெல்லாம் பசி யாற்றுகின்ற
ஒருக்கமதிற் பொழு தோட்டிவிட்டேன் ; அதற்கோய்வுளதேல்
தருக்க மியற்றிச் செருக்கடைந்தேன் : நின் செந்தாமரைத்தாள்
உருக்கமெழத் தொழு தேத்திலன்; எங்ஙனம் உய்குவனே ?

பழுதாக இவ்வருவாழ்வைக் கழித்தல் பயிர்வளர
உழுதாக வேண்டு நிலத்தில் முள்வைத்தலை யொக்குமன்றே ;
அழுதாலும் சென்ற அமயம் வராதென் றறிந்திருந்தும்,
பொழுதாள வல்லவ னல்லேன் ; என் பிள்ளைமை போக்கிதே.

ஊண்பொழுதும், கண்ணுறங்கும் பொழுதும், உலாப்பொழுதும்,
வீண்பொழுதாகக் கழிக்கின்றயான், இங்கு மீதிநின்று
காண்பொழுதாகிலும், அற்றவர் தக்கவர் காரியத்தில்
மாண்பொழு தாக்கிய நல்வினை வாழ்வில் எம்மாத்திரமே ?

நாபத்து வாய்த்தென கூவவல்லால், உள்நலம் பெருகிக்
கோபத்தை காக்குந்திற மறியேன்; குணங்கொள் ளறிவாம்
தீபத்தை யென்னிற் றெளிய வைப்பாய்; நன்மைசேர வைப்பாய்;
ஆபத்திற் காத்தருள் செய்தவனே, என்னை யாண்டவனே.

தகையூட்டுகின்ற தலைத்தன்மையாகிய தாழ்மை விட்டுப்,
பகை யூட்டுகின்ற பெருமிதங்கொண்டு, படிற்றொழுக்கம்
மிகையூட்டுகின்ற குறும்பரைக் கூடினன்; மெய்ந்நிலைசேர்
வகையூட்டுகின்ற கடனுன்னதே, என் வரபதியே.

அன்பே யெலாமென் றறிந்தும், என்னன்பில் அழுக்கடைதல்
என்போலியர் தம் எளிமையன்றோ? இதுவே புதுமை!
தன்போற் பிறவுயி ராமென எண்ணத் தடையெதுவோ,
நின் பேரருளில் உயிர்களெல்லாம் நின்ற நேரறிந்தே? ௨௭௰

வெள்ளறி வென்னுங் களைபடர்ந்தோங்கி, விளைவெடுக்கும்
உள்ளறிவைத் துன்பி லுய்த்ததந்தோ; நின்றனைப்பணிந்து
கொள்ளறிவும், பிற இன்னுயிர்மேல் அன்பு கொண்டொழுகும்
தெள்ளறிவுந் தால் வேண்டுகின்றேன், அருட்டேசிகனே.

புந்திக்குத் திண்மை யிலாததெத்தால்? புன் பொருள்வலியால்
பந்திக்கலாகும் பதத்தால், நிலைப்பொருள் பார்த்துணர்ந்து
சிந்திக்கலாத மயக்கத்தினால், திண்மை சேரடியை
வந்திக்கலாத மதத்தால்; அவை இனி மாற்றுகவே.

பேராசை யென்றொரு பித்துப்பிடிக்கப், பிறர்க்குரிய
ஓரா தெனக்கென்று நானிருந்தேன்; அதை யோட்டிவிட்டுன்
னாரா வமுத அருள்நினைத் தாங்கென் னசட்டையெல்லாம்
நீரா யுகுந்தென் கண்ணீரா யரும்ப நிகழ்த்துகவே.

அலைபோற் செறியுங் கவலைப்புன் வாழ்வெனும் ஆழியிலே
தொலைபோயபின்னும், அற்பச் சுகமாகிய தோற்றத்திற்கே
விலைபோய்த் தெருள்வழி கண்ணிற்படாது, மிதப்புநெஞ்சம்
இலைபோற் சுழல்வது கண்டும், எந்தாயெற் கிரங்கிலையே.

காத்தாண்ட நன்றி கருதிக்கொள்ளாதக் கடனைஎன்னால்
தீர்த்தாகுமோ எனச்சிந்திக்கலாது திமிர்ப்பிடித்த
போத்தாகி ஈனப் புலையனுமாய்ப் புன்பொருள் கிடைக்கக்
கூத்தாடுவேனை அரசே எவ்வாறு குறிக்கொள்வையே?

உன்னைமறக்கச் செயுங்கொடுங் காமனை யோட்டுதற்குப்
பின்னையொருத்தர் துணையாவதில்லை ; நின்பேர்வலியே
என்னைவிலக்கி மதியூட்ட வேண்டும் ; எறும்பிழுத்துப்
புன்னைமரத்தை யசைப்பதுண்டோ இந்தப் பூதலத்தே?

வாட்கொண்ட கட்பிறமாதர் மயக்கிலே, வார்த்தையிலே,
கோட்கொண்ட அங்கக் குலுக்கத்திலே, மதன் கொள்ளையெனுந்
தேட்கொண்டு கொட்டத் தெளிவற்றியங்கித் தியங்கிடுமுன்
ஆட்கொண்டு நீதெளிப்பாய், அளிப்பாயெனை ஆண்டவனே.

பொல்லா மயக்கெனும் பேயால் என்னுள்ளம் புரளவையா
தெல்லாப்பொழுதும் எனையாண் டபாயத்தை எச்சரித்து,
நல்லாறலா தொன்றிற் செல்லாதிருக்க, நலம்படைக்க
வல்லாய், கனிந்து வலியூட்டுவாய் என் மனத்தினுக்கே.

முள்ளினுங் கூரிய என் மனச்சாட்சி முறிமுனைதான்
கொள்ளினுங், குற்றந் திருந்தறியாத கொடுமைவளர்
உள்ளிடம், ஆணவப் பேயாடுகின்ற, துளைத்துளைத்துத்
தள்ளினும் போவதில்லை ; என் செய்வேன் நின் நயமின்றியே?

செல்லா தென் மந்திரம் ; பொல்லாவப் பேயை என் சித்தவலி
வெல்லா ; தனையினி எப்படியாயினும் வென்றுவிட்டா [உஅம
லல்லா,தென் பாழ்மனம் நின்சேவை தன்னில் அமர்ந்தொருநாள்
நில்லா ; தென் மெய்யின்ப மில்லாதுபோம், அந்நிலையின்றியே.

இருட்சியெனும் கொடும்பேய்க்குப் பிறந்த இரட்டையராம்
மருட்சியும் பேதைமையுங் கொண்டுதாவும் மனக்குரங்கைத்
தெருட்சியின் பாலுற்றுலவா அமைதிசிறக்க, என்னுள்
வெருட்சிஇரிய, நின்றாளிணைக்கே கட்டவேண்டுவனே.

(அருள் வேண்டுதல்)

கண்டா ரிரங்குவர் என்ற பொய்யெண்ணங் கருத்தெழும்ப,
அண்டாத பேரை யடுத்துநின்றேன் ; அவரால் நலமொன்
றுண்டாவதில்லை, யுன் பொன்னுள மின்றி ; இவ்வுண்மை கற்றுக்
கொண்டாலும், பட்டுக் குழைந்தாலும், உள்ளங் குறித்திலதே.

சின்னஞ்சிறிய பருவத்திலே, இடர் சேர்ந்த வெல்லாம்,
பொன்னந் திருவருளாலே துரத்திப் புரந்தனையே ;
முன்னந் தழைத்த வருள், என்னைத் துன்பம் முடுக்கில், இனித்
தன்னந்தனித்து விடுமோ, நின்பால் வந்து தாங்கியுமே ?

ஞாயம் பல சொல்ல நானறியேன் ; உன்னை நாடிவந்தேன் ;
காயம்பெறச் செய்வித்தாய் ; என்னைக் காக்குங் கடனுன்னதே ;
சேயின் குணங் கொடிதேனும், பெற்றோர் அன்பு செய்கிலரோ,
தாயும் பெருந் தந்தையாயுந் திகழ்கின்ற தற்பரனே ?

பொங்கார் கருணைக்கும், கோடாதநீதிக்கும் புள்ளியில்லை,
தங்கா விடமில்லை, தாழ்வுயர்வில்லை ; தனிமனிதர்—
மங்காத பேருடையார்— பிழைத்தார்க்கு மனமிரங்கின்,
பங்காயிருந் தெனைக் காத்தாளல் என்ன வன்பாமுனக்கே ?

அல்ஆதவனெழப் போமாறு, இலங்கும் அருளெழவே,
சொல்லாத துன்பமும் பாறிடும்; சொல்லத் துணையொன்றுமே
யில்லாத என்றுயர் போக்கிலை; நீ எற் கிரங்கிலையேல்,
பொல்லாதவனுக்கும் நல்லாயெனும் பெயர் பொய்ப்படுமே.

நீயே யெனக்குத் தனித்துணை யென்று நினைத்திருக்கத்,
தாயே பிறர்துணை தான்விட்டதே; நின் றயவெழுந்து,
சேயே இவனெனச் சேர்த்துக் கொள்ளாது தெருவில்விட்டால்,
நாயேன் கொடுவிதி யார்க்கென்று சென்று நவிலுவனே?

உன்னால் என்றுன்பங் குறையாதெனில், உன்னை யுள்ளுவதால்
என்னாம் எனக்கு? வணக்கத்தினால் என்? எனைப்புரக்கப்
பின்னா ரிருக்கின்றனர்? பிறர்பால் ஒன்று பேசுவதேன்?
மன்னாயவர் முறை கேட்டிலரேல், குடிவாழ்தலென்னே?

பண்டாய தீவினைப் பாழ்ங்குழி வீழ்தல், பரம்பொருளே,
கண்டாயெனிற், கரையேற்றாதிருக்கக் கருத்துறுமோ?
தொண்டாயிருக்கக் கொதிக்கின்ற ஏழையைத் தூக்கிவிட்டால்,
அண்டா, அதிற்பழியுண்டா, சொல்வாய், நின் அருள்தனக்கே?

தாயே என்நாத் தவிக்கின்றது, பால் எற்குத் தந்திரட்சிப்
பாயே யெனப் பரவுஞ் சேய்க்குப் பாலைப்பதுக்கி, யெட்டிக்
காயே தரத் துணிவாளோ பெற்றாள்? என் கடமைசெய்து
நாயேன் பரவின், நலமன்றித் தெய்வமும் நல்குவதே? ௨௯௰

பன்முகம் பார்த்துப் பலவா றலற்படும் பாவியற்குன்
பொன்முகம் பார்த்தல் தகுமோ? கடைப்படும் பொய்யியற்றித்
துன்முகங் காட்டித் துனிசெயும் புல்லரின் சூழ்ச்சிகெட
நின்முகங் காட்டலன்றோ, ஐய, நான்கொண்ட நீணினைப்பே?

விண்ணீர் பொழியும் பெருமிதம் போல, நின் மெய்யருளாந்
தெண்ணீர் பொழிகின்ற செங்கொண்டலே, வளர் சீவர்களுக்
குண்ணீர் கொடுத்துப் பசிக்கூட்டும் உத்தமனே, உடையும்
கண்ணீர் துடைத்தெனைக்காப்பாற்றுந் தெய்வக் கடனுனதே.

மதிகாண் வழிச்செல வேலாச் சிறுவர் மயங்கிடுங்கால்,
கதிகாண் பெரியர், அவர்செல நன்மதிக் கண்கொடுப்பார் ;
அது காண்புடையர்க் கழகாதல்போல், அடியேனைப் பெற்ற
பதிகாண்,உனக் கெனக் குய்வழி காண்பித்தல் பாங்குடைத்தே.

பிள்ளைக் குருவிக்குத் தாயிரை யூட்டிய பெற்றியைப்போல்,
வெள்ளைக் கருத்தினெனைக் களித்தாய் சற்றுவித்தை ; இனிக்
கள்ளக் கசடற நல் மருந்தாக்கிக், கதிபெறுமா
றுள்ளத் தமரப் புகட்டவு முண்டுனக் கோர்கடனே.

இடும்பையும், உள்ளத் தெழுச்சியும் எங்களியற்கை யென்றே,
தொடும்பணி முன்னிட்டுச் சோராது செய்யின், நின் றாயவருள்
நெடும்பயன் மேவிட லாமென்று நம்பிய நெஞ்சனைக், கை
விடும்படி நின் மனந்தான் வருமோ, அருள் வித்தகனே ?

இப்பாரில் நான்படுந் துன்பமெல்லாம் முன் இயற்றுவினை
தப்பாது தந்த பயனாயின், அவ்வினை தந்தகருத்
தொப்பா ரிலாதநின் பொன்னடி நீழலில் ஒப்புவித்து
வைப்பேன் ; அதனைத் திருத்திடல் வேண்டும், வரபதியே.

பொய்யாமையும், அருள்யாதினுங் காண்கின்ற புந்தியையும்,
நையாமையும், பொதுநன்மைக்கல்லால் இடர்நாடி யொன்று
செய்யாமையும், மனச்சாட்சியி னெல்கிச் சிறுமைசெய்து
கையாமையும், சுகம் எய்யாமையும் பெறக் காமுற்றனே.

முட்டாது கூறையும், சோறுந் தந்தாய் ; நன் முயற்சியெல்லாம்
தட்டாது தம்பயனீயத் தந்தாய் ; இடர்தான் விழுங்க
வொட்டா திரட்சையுந் தந்தாய் ; உயர்பதம் ஓர் அறிவுக்
கெட்டாது வைத்தல், எது நினைந்தோ, எம்மிறையவனே ?

வந்தனம் ஈந்த இவ்வாழ்க்கைக்கு; வாழ்க்கையில் வாய்ந்தவைக்கு
வந்தனம் ; நின்படைப்புக் காணவைத்த நின் வள்ளன்மைக்கு
வந்தனம் ; நின்னை வணங்க நல்வேளை வகுத்ததற்கு
வந்தனம் ; நின் அருளாட்சிக்கு வந்தனம், வந்தனமே.

தேனீ புதுமலர் தோறுந் திரிந்துண்டு தேறுதல்போல்,
நாளுய்ந் துனது செயல்கண்டு, தேறுநலம் பருகித்,
தானே தெளிந்து, தரணி யுள்ளார்க்குத் தகவுரைக்க,
வானோ டுல குடையானே, கனிந்து வழிசெய்கவே. ௩௰

## இந்நூலின்கணுள்ள திசைச்சொற்கள்.

கரல்—ஹிர்தயம், நெஞ்சாங்குலை
பாஸ்கரம்—'Phosphorus' என்னும் ஜடப்பொருள்
ஆயம்—வலி, ஆற்றல்
அட்ட—கெட்டுப்போன
கொட்டாரம்—அரண்மனை
கணி—காட்சி
ஓர்க்கின்ற—நினைக்கின்ற
ஒருக்கம்—ஆயத்தம்செய்தல்
போத்து—எருமை
புள்ளி—ஆள்

# கடல்

கடலே—பறி—கடலே—அலை
கடலே—விரி—கடலே,

திரை யெறிந்து
நிரையின் வந்து
நுரைமறிந்த-வெள்ளமே

உரை யிறந்து
கரை யிறந்து
தரைவளைந்த-வெள்ளமே.

நீல முற்று
ஞால மிட்ட
சீலையொத்த-வெள்ளமே.

நாலு திக்கு
மூலைகட்டும்
ஓலமிட்ட-வெள்ளமே.

கலை நிரம்ப
மலைகளென்ப
அலைகிளம்பு-வெள்ளமே.

நிலையில் கொண்டல்
தொலையில் மண்ட
அலைதிரண்ட-வெள்ளமே.

வலையர் விட்ட
பல மிதப்பும்
உலைய வெற்றும்-வெள்ளமே.

அலை மடக்கில்
விழு மனுக்கள்
தலை மடக்கும்-வெள்ளமே.

சூறை சுற்ற
வீறியுற்ற
பாறை யெற்று-வெள்ளமே.

நூறிடத்தை
மாறிவிட்டு
வேறெடுக்கும்-வெள்ளமே.

விண் ணுலாவும்
வெண்ணிலாவின்
றண் ணுலாவும்-வெள்ளமே.

விண்ணிலாது
மண்ணிலாரும்
உண்ணலாத-வெள்ளமே.

பால் நிறத்த
வாலுகத்தின்
சூல் நனைக்கும்-வெள்ளமே.

சிறுவர் தங்கள்
குறுபதங்கள்
உறுதரங்க-வெள்ளமே.

கால் நனைக்க
ஏல் மனுக்கள்
மேல் நனைக்கும்-வெள்ளமே.

பொறி கலங்க
நெறியில் வங்க
மறிதரங்க-வெள்ளமே.

தாய்போன்றனை தாரணி யுன்னுடைய
சேய்போன்றது, தெள்ளுண ஊட்டுவைபோல்
நீயே மழையாக நிலம் பொழிவாய்,
தாயே யுனக்கார் சொலவிது செய்தாய்?

சந்தோஷமடைந்தனை போல்தென்றல்
வந்தேக மலர்ந்திடுவாய், கலனைப்
பந்தாட விசைந்தெழுவாய் கடலே,
எந்தாயுனக்கார் சொலவிது செய்தாய்?

கார்சேர இருண்டுடன் மாலுமியோர்
சீர்கெடென வஞ்சியுள் சோர்தர நின்
நீர் போகிற மக்களை முக்கிடுவாய்;
யாரே யுனை இப்படி ஏவிநின்றார்?

பூவாரி யிறைத்தது போலிரவில்
மேவாயிர மாயிரமாம் உடுக்கள்
போவாது விண்போவது பார்த்திருப்பாய்;
நோவாதவை நோக்கப் பணித்தவர் யார்?

வல்லாரென எண்ணி மருண் மனிதர்
சொல்லாத நின்பேர்வலி சூழுவரேல்,
நில்லாதவர் வீறு நினைப்புலகில்,
நல்லாரென நாமம் விளங்குவரே.

ஒன்றான பரம்பொருள் தன்னுடைய
பொன்றாத பெருங்கருணைப் புகழை
நின்றாழி முழங்கிடுவாய், நெடுநீர்
குன்றாதலை யென்று மெழுங்கடலே.

வரைமீதுலாவி, இருள்சேரமேவி, மழைசோரவாவி மலர்தா
மரைமீதுலாவி, யளிதேனவாவி இசைபாட, நாளுமலர்கள்
விரைமீதுலாவ, விளர்பூவொழு, முகிலீனு மாதியனையே,
தரைமீது நீடு நுரைமாலையாடு திரைமாலை சூடுகடலே.

நிறையாத கோடுபிறை சேராதாது நிலைபோல மாறுவலியோ
டறை கூவியாடி யலைமோதுமாறு, தெளியாத மானிடவர் தாம்
பொறையேயிலாது செயுநோவினையுமதுபோல சோகமடையும்
மறையோதலாத குறையாத நீதி முறையோது மாதிகடலே.

புரையேதுமின்றியுளமோரிரண்டு புதிதாயிணைந் துணிடம்வந்
[மேல்
துரையாடி, அன்பு பிரிபேமெனுஞ் சொலெழவே, கனிந்தவவர்
[போல்,
நுரையாடு தென்றல் மயல்வீச, விண்டவுரை கேள்வியுண்டகரி
நிரையாக நண்டு, கரையோரம் வந்து, திரையாடுகின்ற கடலே.

[டையாய்,
தொலைபோகு மண்டநிரை நீடொளிர்ந்து தொடர்மாவிசும்புகு
நிலைமாறு கொண்டல் படையாய், வளைந்த புவிசூழநின்றவரணாய்,
[மேல்
உலைமாருதங்கள் உழைசேரவென்று மாசாள்வை, பொங்குதகரை
அலைபோயெழுந்து,சிலைபோல்வளைந்து,மலைபோல்மறிந்தகடலே.

வெருவாதமர்ந்து குறையாதடங்கலுயிர் வாழுநின்றபொருளாய்,
பெருவாதியன்ற நாராலளந்து முடியாதனந்த முகமாய்,
திருவா, யொப்பங்கலரிதாய், சுதந்தரமதாய், இடங்கொளிடமாய்,
அருவாய், நிறைந்த உருவாயவன்ற னருள்போலிருந்த கடலே.

# அந்திப்பொழுது

கிழக்கே மலைகள் அடுக்கடுக்காய்க் கிளர்ந்
தொன்றின் மேலொன் றுயர்ந்து திரண்டு,
நித்தியப் பொருளின் நீங்காத் தியானத்
தொக்கொரு மித்த முனிக் கூட்டம்போல்
அமர்ந்தன ; வடபால், தென்னஞ் சோலை
செறிந்தவளைப்பும், திகழ்தரு மேடும்,
பரிதியின் கதிர்கள் காணாப் பள்ளமும்
தென்படும் ; ஊடே, அமிர்தம் நிறைந்து
சென்றது போலத் தெளிந்து மதுரித்
தன்பாய்த் தாங்கும் அழகிய தரையீ
தானந்தங் கொண்டாடிச் செலும்போல்,
நேரே செல்ல நேரா தவன் போல்,
வளைந்தும், சுழித்தும், மறிந்தும், தங்கியும்,
நீலமும் அல்லியும் நீங்கா தலர,
மணந்தரு நீர்மலி யாறு மறைந்து
போந்தது ; தெற்கே பொலிந்தெழும் வயல்கள்
காலத்தோடு கதிர்நெல் சுமந்து
ஞாலத்தோர்க்கு நல்லுண வளித்தன.
மேற்கே, சிலவிடம் விதம் விதம் பூத்துக்
காய்த்துக் கனிந்த கவின் உடை மரங்கள்
படர்ந்த பந்திகள் பற்பல கண்படும்.
அப்பால் தோன்றும் அணிமணற் குன்றுக்
கப்பால் தோன்றும் அலையெறி கடலே.

மேலே வீசிய விண்ணவர் திரைபோல்,
சீர்பெறு நீலம் திகழ்தரத் தோன்றும்
வானப்பரப்பு ; அதன் நெற்றிமேல் வாய்ந்த
திலகம் போலும் செவ்விய கதிரோன்,
வான நாட்டின் வயங்கிய கோமான்,
பல்நிற மேகப் பரிசாரகருடன்
செல்வன் அம்மேலைச் செழுங்கடல் பாய.
அன்ன வேளையில், தன்னிறம் மாறிச்
செக்கர் சிவந்து திரைகடல் மேனியும்,
மலையும், மரமும், மாநிலப் பரப்பும்,
தொலையும் அடுப்பமும் துலங்குமா றெங்கும்
செங்கதிர் பரப்புவான், செந்நிற மாக்குவான்.
மன்னன் எப்படியோ, மன்பதை அப்படி
என்பது போல், அவன் ஏகும் வழியெலாம்
புடைசூழ் கொண்டலும் பொன்னிறம் பெறவே,
தெண்ணீர் முழுகும் பெண்முகத்தைப்போல்,
ஆனந்தக் கடல் ஆடுமாதவர் போல்,
ஓடியே இளைத்த ஒப்பிலாப் பரிபோல்,
தேடின செல்வம் தெரியா தொழிவபோல்,
உலகத்தவர்க்காய் உண்மையாய்த் திண்மையாய்
உழைத்தவர் உழைப்பெலாம் ஒப ஒதுங்கி,
ஈடும் பீடும் ஏற்றுச் செலும் போல்,
அழகிய சூரியன் ஆழிபாய்ந்தனனே.

## நடையறைக் காயல்

நல்லதொரு மாலையிலே, ஞாயிறெழில் வேலையிலே,
செல்லுகின்ற வேளையிலே, செல்லுகின்ற நாங்களொரு
சுந்தரஞ்சேர் பொய்கையிலே, சுகந்தரும் ஓடத்திலே,
சந்தித்த கண்காட்சி தங்குமின்னும் கண்களிலே.
கண்டஅருங் காட்சிஎழில் கையெழுத மாட்டுவதோ,
உண்டஅமிர்தச் சுவையை உரைக்கவுந்தான் வருமோ?
தானே சுகமெடுக்கத் தன்னிணையில்லா இயற்கை
காணுங் கடலும் விட்டுக் காயலை அடைந்ததுபோல்,
எல்லையில் பேரழகும், எட்டரிய பெருமது
சொல்லள வெல்லாங் கடந்து சூடித் தெருட்டியதே.
வானுடர் காணுதற்கும் வாய்க்குமோ, மற்றிதன்மேல்
ஊனுடை உள்ளியக்கும் ஒப்பரிய காட்சிநலம்?
ஒப்பனை முன் செய்ததுபோல், ஒழுங்கின் நிரைத்த குன்றம்
பொற்புடன் முப்புறமும் பொங்கிப் பொலிந்ததங்கே.
ஓங்கி உயர்ந்த தெங்கும் ஒய்யார வான்கமுகும்
தாங்குங் குலை சுமந்து தலைசாய்ந்து நின்றனவே.
காயல் வெள்ளத்தில் அதன் கரை கொள் வனப்பனைத்தும்,
சாயல் பிடித்தது போல் தங்கு நிழல் கொண்டதுவே.
அவ்வழிசேர் மரங்கள், ஆழிகடந்து தென்றல்
செவ்வழி பாடிவரச், சிரங்கள் அசைத்தனவே.
செஞ்சொற் கிளிகளங்கே, சேரினங்களோடிருந்து,
கொஞ்சிக் குலவுகின்ற கோலாகலம் பெரிதே.
வெற்றுத்தரை யதன்மேல், விழியெறி செல்லுமட்டும்,
பற்றையும் பச்சைப்புல்லும் படர்ந்தன கம்பளம்போல்.

மேலைக்கடல் முழுங்கி வானத்தின்று முத்தும் ;
கோலப்பெண் பொய்கையுடன் கூடிக்குலாவவரும்.
மங்களவெயிலெறித்து வான்பதியும் பள்ளிகொண்டான் ;
திங்களுந்தன் தெய்வமுகம் திகழ எழுந்துவந்தான்.
ஆகாயப் பேர்விரிவில் அடர்ந்தெழுங் கார்மேகம்
போகாமற் செய்யவென்றோ போர்த்தது திங்கள்முகம்?
இன்பக்கிளர்ச்சிவர, இளந்தென்றல் வீசிவரத்
துன்பொடு கார்மேகந் தொலைந்தது காணாமல்.
ஒழிந்தபின் கண்ணெதிரே எழுந்த பெருஞ்சோதி
பொழிந்த நிலவுகொண்டு பொலிந்தது பொய்கை வெள்ளம்.
வெள்ளப்பெருக்கின்மீதே விரிந்த வெளிச்சமதால்
உள்ளங்களித்துத் துள்ளி உன்னிக் குதித்ததுமீன்.
நுண்ணிய இலைச்செறிவில் நுழைந்த நிலாவெளிச்சம்
எண்ணிய நெஞ்சங்களுள்ளும் ஏறிநுழைந்ததுவே.
ஒப்பிலாக் காட்சி கண்டெம் முள்ளம் குளிர்ந்ததுபோல்,
வெப்பிலா வெய்யல்வீசி மெய்யுங் குளிர்ந்ததன்றே.
வான்வழியூருந்திங்கள் வாண்முகம்போல எங்கள்
ஆன்மவழியினூடே ஆனந்த மூர்ந்ததுவே.

---

## வாழ்க்கைமாலை

---

வாழ்வு பொய்யென்றும் சொப்பனமென்றுமென்
கேள்விகேட்டுத் துயருறச் சொல்லிடேல்:
வாழ்வு தூக்கமெனில், ஆவி செத்ததே ;
சூழக்காணும் பொருள் வெறுஞ் சூன்யமே.

---

* Translation of Longfellow's Psalm of Life.

வாழ்வு சொப்பனமன்று, மெய்யானதே ;
வாழ்வினும் பயன் சாவென்ப தன்றுகாண் ;
தாழ்வதும், தாழுமண்ணோடு சேர்வதும்,
ஆவியல்ல, அநித்திய தேகமே.

சுழலு சக்கர மென்னும் சுகதுக்கம்
வழியுமன்று, பயனன்று வாழ்வுக்கே ;
கழியு மின்றினு நாளைக்குமேலென்ன,
உழைக்குந் தன்மை அவையிரண் டாவதே.

கல்வி பற்பல, கற்பவர் நாள் சில,
சொல்லக்கேட்கும் ; துணைக்கொளு நெஞ்சமும்
வல்லதாயினும், தோல்மறைப் பம்பைபோல்,
செல்வதாம் பறைகொட்டிச் சுடலைக்கே.

உலகமென்னு மோர் யுத்தகளத்திலே,
கலகமாடு மனிதர் கணத்திலே,
விலகு கால்நடைபோல் மெலியாமலே,
இலகு வீரரெனும் புகழேறகவே.

மேற்சுகம் பெறலாமென் றிராமலே,
போச்சுதென்றும் புழுங்கி நையாமலே,
ஆச்சு நெஞ்சகம், ஆச்சுயர் தேவென்றே,
ஏச்சிலாச்செயல் இன்றைக்குச் செய்கவே.

பெரியர் வாழ்க்கைச் சரிதமெலா நமக்
குரிய வாழ்வில் உயர்வெய்தலா மென்றே
தெரியச் சொல்லும் ; முன் சென்றவர் காற்றடம்
இரியுங்கால மணல்வழி எஞ்சுமே.

காற்றடங்கண்டு வாழ்வெனும் வெங்கடல்
யாத்திரைக்கண், கலங்கவிழ்ந்தேறிப் பின்
தேற்றமற்றுத் திகைக்கும் சகோதரர்க்
கேற்ற நல்வழி காட்டினர் ஏகினர்.

ஆகையால் எழுவோம், பணிசெய்குவோம்,
ஆகும் எவ்விதி யாகினும், செய்வினை
ஆகுமாறு துணிந்து தொடர்ந்திட
லாகுவோம், நினைப்பெய்திட லாகுமே.

---

## செய்கடன்

---

தன்சுகம் பாராது செய்கடன் செய்கவே,
தானே சுகம்வரும், செய்கடன் செய்கவே;
வன்சிறை தோன்றாது, செய்கடன் செய்கவே;
வந்தது வருக, நீ செய்கடன் செய்கவே.

இயல்கின்ற மட்டிலும் செய்கடன் செய்கவே;
ஈசனுங் குறை சொலார், செய்கடன் செய்கவே;
இயலாததும் பெறும், செய்கடன் செய்கவே;
ஈசன் இரங்குவார், செய்கடன் செய்கவே.

இயற்கை துணைசெயும், செய்கடன் செய்கவே;
என்பய னெனாது நீ செய்கடன் செய்கவே;
செயற்கையின் குறியது, செய்கடன் செய்கவே;
இயற்கையின் கடனிது, செய்கடன் செய்கவே.

இயற்கையிற் பங்கு நாம், செய்கடன் செய்கவே ;
யாருனை வருத்துவார், செய்கடன் செய்கவே ;
இயற்கை தரும் உடல், செய்கடன் செய்கவே,
இயற்கையே யூட்டும், நீ செய்கடன் செய்கவே.

கைகா லமைத்ததும் செய்கடன் செய்யவே,
கால மமைத்ததும் செய்கடன் செய்யவே,
மெய்வா யமைத்ததும் செய்கடன் செய்யவே,
மெய்யுயிர்க் கெல்லாம் சுகம் வந்தணையவே.

---

## விதி

விதிவிதி யென்றுநாள் வீணாய்க் கழிக்கே
ஒதிபோலிருக்கும் உணர்வற்ற மாந்தர்காள் !
விதியென்ப தென்ன, மதியென்ப தென்ன,
மதியால் மதித்திரோ இதுகாறும் ஐயோ !

மன்னும் இம் மண்ணிலே, மானிடர் வாழ்விலே,
தொன்மை நாள் தொட்டினும் தோன்றும் வழியிரண்
டன்னவை விதிமதி யென்ப ; இரண்டுமே
பின்னிடுங் கயிறுபோல் வாழ்வினைப் பின்னுமே.

இவ்விரு வழியிலே, அவ்விதி முன்னடி,
நவ்விமுன் முதுமை பின் வருவது போலவே,
வவ்வியே வந்தது ; பின்மதி சேர்ந்திடச்
செவ்வியும், செல்வமும், சீரும் பிறந்தவே.

மதியது பெருகவே, விதியது விலகுமே,
மதியது தெரியவே, இருளது விலகுமே;
கதிமதி, கலைமதி, பொருள்மதி, புகழ்மதி,
விதியெனும் இருளது விலகவே, விலகவே!

---

## உண்மைநட்பு

---

நின்னைப்புகழ்பவன் றன்னை இடர்க்குற்ற
நேசனென் றெண்ணாதே—அவன்
பன்னுமொழியென்ன காற்றல்லவோ, உண்மைப்
பாங்கனென வெண்ணாதே.

கையிற் பொருளுள்ள மட்டும் எவரும் நின்
கண்ணுக்குக் கண் அடுப்பார்—நின்றன்
பையிற் பணமில்லையாகில், அவர் அந்தப்
பாராட்டெல்லாம் விடுப்பார்.

கொடுத்துக் கெட்டவன்றன்னைக் கண்டால் மெய்க்
குமணன் நீயாவை யென்பார்—பின்னுந்
தொடுத்துச் சூட்டுவர் சொல்லணி, நீ யன்றோ
தோன்றிய தெய்வமென்பார்.

உள்ளநிலையை நொடியி லுணர்ந்ததற்
கொத்துநடந்துகொள்வார்—கெடுங்
கள்ளருங் காரிகையென்னில், அதற்கவர்
கங்கணங் கட்டிக்கொளவார்.

---

* From Shakespeare.

ஆனால், திருமகள் நோக்கிழந்தால், அவன்
ஆக்கமெல்லாம் பறக்கும்—முன்னே
போனால் அவனடிக்கீழ் விழுந்தோரும் பின்
போகார் அவன் வழிக்கே.

உற்றவிடத்தில் உதவுகின்றோன் உனக்
குற்றவன், அன்புடையான்—நீதான்
சற்று வருந்திடில், முற்றும் வருந்துவான்;
தன்னைப்போல் உன்னைக்கொள்வான்;

எப்படி யுன்னெஞ்சில், அப்படித் தன்னெஞ்சில்
எண்ணி இதப்படியே—செய்வன்;
மெய்ப்படி நண்பற்கும் செப்படி நண்பற்கும்
வேற்றுமை இப்படியே.

---

## வைக்கத்தப்பனிடம்

### ஓர் மாதின் விண்ணப்பம்.

---

அறிவிலாமையினால், அகங்கரித்தலினால்,
அறிவினையடக்கி மேல் மீறும்
பொறிபுலன் வலியால், புண்ணியத் தேய்வால்,
பொன்னரு ளென்னிடம் பொருந்தும்
குறிகொளுங் குணத்தின் குறைவினால், கொடியேன்
இயற்றிய குற்றங்கள் பொறுப்பாய்,
பிறிதிணையில்லாப் பேரெழில் பிறங்கும்
பெருந்துறைக் கோயிலுள்ளானே.

இருமையு மெனக்கு நின்னருளல்லால்
எனையோர் துணையிலை யெனவே,
திருமன மறியும்; இந்தநாள் வரைக்கும்
சிறியனே னுயிரது தானும்
அருமைசேர் அருளால் நின்றதால், இன்னும்
அவ்வருள் நோக்கியே நின்றேன்,
பெருமைசேர் வளைவான் பிறையணிந் திலங்கும்
பெருந்துறைக் கோயிலுள்ளானே.

வண்டு பல் மலர்தோறுந் திரிவது போல்,
வம்பெனும் வனத்திடை யலைந்த
மிண்டனேன் துன்பக் கொடுங்கடல் மிதந்தேன்,
வெம்பசி பிணி துயரென்னும்
சண்டமாருதத்தால் இளைத்தனன், என்னைத்
தண்ணருட் டோணியி லெடுப்பாய்,
பிண்டமோ டண்டப் பெருநிரை பிறங்கும்
பெருந்துறைக் கோயிலுள்ளானே.

அத்தனே, அருளாரையனே, அன்ப
ரிதயத்தே அமைதிசே ரரசே,
நித்தனே, பொருளா நிமலனே, என்னல்
நேயனே, தூயனே, யென்னை
மத்தனே னெனினும் வழியடியார்தம்
அடியனுக் கடியனாய்க் கொள்வாய்,
பித்தனே யென்றும் பேரருள் புரிந்த
பெருந்துறைக் கோயிலுள்ளானே.

ஆருயிரமர்ந்த அன்பனே, நின்றன்
அளவிலா வியப்புறும் அமைப்பைச்
சீருயர் ஞான மொன்றினால் சற்றே
யுணரலா மாதலிற், சிறியேன்

நேருறு ஞானம் பெற அருள் புரிவாய்,
நின்னெழிற் பதம் நினைவதற்கே,
பேரொளி யிலங்கும் அருட் பெருந் தகையே,
பெருந்துறைக்கோயி லுள்ளானே.

பொய்யம ருலகப் புன்மையிற் கிடந்து
புழுங்கிய மனத்தொடு மிளைத்து,
வெய்துயிர்த் தேமாந் திருக்கின்றே னெனினும்,
மெய்யரு ளமுதம் நான் விழைந்தேன்;
ஐய நின்னருளில் ஒருதுளியேனும்
அடியனுக் கில்லை யென்பாயோ,
பெய்ம்மழையினு மெய்யருள்மழை பொழியும்
பெருந்துறைக் கோயிலுள்ளானே?

ஆறணிசடை யெம்மண்ணலே, அடியேன்
அன்னையின் வயிற்றுதித் திதுநாள்
காறும்பல் லிடையூ றடுத்தவை யகற்றி,
அகங் களிப்பித்தனை; அதற்குக்
கூறநான் நன்றியெனில், அது மண்ணும்
விண்ணுமே கொள்ளுமோ? குணமாம்
பேறெலாந் தந்து பேணலுன் கடனே,
பெருந்துறைக் கோயிலுள்ளானே.

கள்ளமே கருதுங் கருத்தனே னெனினும்,
கழலிணை காதலித் தென்றன்
உள்ளமே வைக்கத் தவிக்கின்றேன்; உள்ளத்
துற்றது முற்று நீ அறிவாய்;
வெள்ளமே யனைய கருணையுள்ளானே,
வெறுங்கையாய் வந்த என்கையில்
பிள்ளைகளெடுத்துத் தொழவருள் புரிவாய்,
பெருந்துறைக் கோயிலுள்ளானே.

கற்றதா லறியேன், கருத்தினு லறியேன்,
கருமத்தால் நின்னருள்வலியை
முற்று நன்கறியே னுயினும், இதய
மேவைக்கத் தரும்பதி முன்னே
நிற்றலால் அறிவேன் என்று நேயத்தால்
நின்முனம் வந்தனன்; விருப்பம்
பெற்று நின்மகிமைப் பெயர்சொல அருள்வாய்,
பெருந்துறைக் கோயிலுள்ளானே.

மேடையூட்டிடத்து வேண்டியோர்க் கமுது
விரும்பியவா றளித் தென்றும்
ஈடிலா வுனது தரிசன மருளி
இன்பளிக்கின்ற வான்முகிலே,
ஓடைநீர் முல்லைவாடை வாழ் உதய
னுபுரத்தப்பனுக் கப்பா,
பிடைதீர்த்துனது பேரருள் புரிவாய்,
பெருந்துறைக் கோயிலுள்ளானே.

(இதுவுமது)

## ஏற்றுமானூர்த் தேவரிடம்.

விடையனே, வேந்தர்வேந்தனே, மெய்சேர்
விமலனே, வேதநாயகனே,
சடையனே, எவர்க்குந் தாயனே, கருணைத்
தலைவனே, தணிந்தவர்க்கருளாங்
கொடையனே, பச்சைக் கொடியெலாம் படருஞ்
சோலைசூழ் ஏற்றுமானூரன்
புடையனே, உள்ளக் குறையெலாந் தவிர்க்க
உள்ளுவாய், உள்ளெலாமுணர்ந்தோய்.

மழையெதிர் கூந்தல் வாட்கண்ணி யுமையாள்
வயத்தனே மாசிலாமணியே,
பிழையெலாம் பொறுத்துப் பேதையேற்கிரங்கல்
பெரியதோ நின் பெருமருட்கே?
கழை செறிந்தோங்குங் கரும்பொழிற்சோலைக்
கள்கவர் ஏற்றுமானூரில்
பழைய பொற்கோயி லிருக்கனே, காமம்
பறக்கநின் கடைக்கணாற் பாரே.

கற்றவர் புகழுங் கருத்தனே, கருத்திற்
கரும்பினும் இனிப்புறு கனியே,
கொற்றவர் மகிழுங் குருகனே, கோலக்
குலைக்குழி கடந்த பெய்ங் குன்றே,
பற்றையும் பச்சைக் கொடியுடன் மருவு
பார்வைசேர் ஏற்றுமானூரில்
நற்றவர் பணியு நலத்தனே, கேட்கும்
நல்வரமெனக்கு நல்குவையே.

ஈறிலாப் புகழுடைய மிறைவனே, ஒன்று
மிணையிலா அருளிருப்பிடமே,
மாறிலா மாண்பு வயங்கு பெட்டகமே,
வரம்பிலா ஆனந்த மயமே,
பேறிலா மரங்கள் காண்கிலாச் சோலை
பெருகிய ஏற்றுமானூரில்
தேறிலா மனமுந் தேற நிற்கின்றாய்,
மகவை நீ தெளிந்து நல்குகவே.

கரையிலா தோங்குங் கருணையங்கடலே,
கருத்திலா ரொளிதரும் விளக்கே,
உரையிலா துயர்ந்த தனிமுதற் பொருளே,
உருவிலா துருவிலாருயிரே,

தரையிலோர் செடியுங் கொடியுங் கண்ணைதிரும்
தன்னைரு ஏற்றுமானூரில்
புரையிலா மணியே, போற்றி நிற்கின்றேன்,
குறிப்பருள் புரிதலுன் பொறுப்பே.

விண்வளர் கங்கைக் கொடிசடை யுடையாய்,
மின்னுமை சேரு மேனியனாய்,
பண்வளர் நால்வர் பதிக மாலையினாய்,
பையுறு பாம்பணி யுடையாய்,
தண்வளர் பொழிலிற் பக்ஷிகள் குயிலும்
தனிப்பதி யேற்றுமானூரில்
கண்வளர் காட்சிக் கண்ணுதற் பதியே,
கருத்தறிந் தருளிசெய் கனிந்தே.

திருந்திய வடியார் சித்தபாரமுதே,
தெளிந்தவ ருளமார் தெளிவே,
வருந்திய மனதுக் கரும்பெருந் துணையே,
வானமே, ஞானமாமலையே,
குருந்தெழு மரங்கள் செறிந்த பூஞ்சோலை
குளிர்ந்தெழு மேற்றுமானூரில்
பொருந்திய மருந்தே, புகலிலா எனக்கோர்
அடைபுகல் தருவதுன் பொறுப்பே.

அளிநிறை வெளியே, வெளியுறு மமுதே,
அமுதுறு சுவைபெறு சுகமே,
களிநிறை யுளமே, உளமுறு கனிவே,
கனிவுறு நிலையருள் கலையே,
துளிநிறை மதுவே நிறைவுறு மலரே
சொரிவுறு மேற்றுமானூரில்
ஒளிநிறைமணியே, எனதுளநிறைவே
உதவுத லிதுவுமுன் கடனே.

## ஆணவம்.

வேகடை—ரூபகச்சாப்பு.

நானென்ற ஆணவம் நீகொண்டதாற் பயன்
யாதுண்டு, பாழ்நெஞ்சமே?

தானந்த மாதியிலான் இந்தப்பார்முதல்
வானந்த மாளக்கண் டானந்தமாகியும், நானென்ற

பல்லாயிரங்கோடி அண்டங்களோட்டவும்,
பரிதி முதலிய தீபங்கள் காட்டவும்,
எல்லாவுயிரும் படைத் துணவூட்டவும்,
ஈசனுண்டென்று வல்லோர் சொல்லி நாட்டவும், நானென்ற

கேடுநினைத்தவர் பாடு கெடுக்கவும்,
கேதமுடையவர்க் கீடு கொடுக்கவும்,
தேடுமடியவர் துன்பந் தடுக்கவும்,
தெய்வ முண்டென்ற சொல் காதுமடுக்கவும், நானென்ற

ஏழை யெளியவர்க் கின்பம் பெருக்கவும்,
ஈரமில்லா நெஞ்சைச் சூடிட்டுருக்கவும்,
தாழாதவரைக் குனிய நெருக்கவும்,
சாமியுண்டிங் கிதெல்லாங் கண்டிருக்கவும், நானென்ற

செல்வம் வளரச் சிகரங் கிளர்த்தனை,
செல்வத்திலே மறந்தாய் ஒருகர்த்தனை;
வல்லமை செல்லின் மதத்துத் தகர்த்தனை,
வண்ணமோய்ந்தால் களி மண்ணை நிகர்த்தனை, நானென்ற

ஓடிமறைகின்ற மின்னலைப் போலவும்,
ஆடியொடுங்கிடும் பாவையைப் போலவும்,
சாடிற் கறங்கிடும் பம்பரம் போலவும்,
தானிருந் திதழி யாதவர் போலவும், நானென்ற

கண்டுமறையுங் கனவினைப்போலவும்,
காருறும்போதுறும் வில்லினைப்போலவும்,
உண்டில்லை யென்னுங் குமிழியைப்போலவும்,
உற்றதுவாழ்வென் றுணராதார் போலவும், நானென்ற

## பெண்ணென்பாள்.

---

பெண்ணென்பாள் அவள் கண்ணெனப் பேணுவாள்
பித்தனேனும் தன் கணவன் தன்னை ;
விண்ணின் தேவரும் வேம்பெனக் காணுவாள்
பெண்ணவள், பெண்கள் தெய்வமெனத் தெண்ணுமே.

ஜயஸ்ரீ.

---

பெருமையுடையோர் முன் பெற்ற பேறெல்லாம்
அருமையே பெண்மையரே கொண்டார் — ஒருமையுடன்
நாடு கொடுமிடியர், நாடு திக நாடுமே ;
பாடுபட்டார் பீடுபெற்றார் பார்.

அம்பிகா மாணிக்கம்.

---

ஏழுபொருள் கொடுத்தாலும், இடம்பெரிது
கொடுத்தாலும், இருப்பதற்குக்
கூறுடைய வீடுபல கொடுத்தாலும்,
பரிமளநீர் குளிப்பித்தாலும்,
வேறுபட்ட உடைசிறக்க அணிந்தாலும்,
பணிஇயலை மிடியுற்றார்க்குச்
சோறு கொடுப்பதுபோல நூறு கொடுத்தாலு
முண்டோ சுகம் நாக்கே ?

## உத்யோக ஒறுப்பு.

---

அலிவிறைக்க நெஞ்சார்க் கம்பால் அடிக்கநாம்
விறைப்பதற்காய் அவர்கால்பற்றிப்
பொலிவிறைத்த முகத்தொடவர் பிதற்றுவ
தெல்லாம் பொறுக்குதோ, பொங்குங்கோபக்
கலிவிறைத்த ஆகமுடன் உயிர்கலங்கச்
செயல்கண்டு, புன்மையில்
எலிவிறைந்தவா றிதயம் நடுங்கவிடல்
ஏதன் பொருட்டாம், என்னிறைவ?

உலகில் விறையில்லாதார் உத்யோக
மேற்றி அதிகாரமுற்றுங்
கிளைகவெனால், இயற்கையிலே அமைதியுற்ற
ரிடைச்சென்று தாம்நின்றேவிக்
கலகமுறச்செய்வார், உண்மை கருணை நீ
திலையாமெனுங் கதிலையவிட்டு
விலகி நெருங்கும் வழியென்னாலன்றி
வேறெதுவாய், விளக்கிறைவ?

இராமச்சந்திர பாகவதர்மேல்.

---

கடியகல்லையுங் கரைத்திடும் இன்னிசைக் கடலில்,
நெடிய பாய்மர முயர்த்தி நித்தியங் கப்பலோட்டி,
கொடியி லின்சுகம் நுகர்துறை நூறு சென்றடையும்
படிநிகழ்த்த, இராமச்சந்திரனுண் டிப்பதியே.

கோளாம்பமலியகோயில் தம்பிரான்மேல்.

தொல்லிசைப்படும் வடமொழியினுந், தமிழ்த்தோன்றும்
மெல்லிசைப்படு பலவளர் மொழியினும் விளங்கும்
நல்லிசைப் புலவோர் கடுநாயக மிழந்தார் :
சொல்லிசைப்படுமோ தென்பலை நாடுறுந் துயரம் ?

வடவரைக் கடந்தோங்கிய மொழிக்கடல் மதித்துக்
குடவரைத் தவழ் குழவியின் குறைதொடக் கொடுத்துத்
திடமளித்தநற் கவிகுலதிலக மாமுகிலே,
வடமொழிக் கொழியப் புகழுடல் புகுந்தனையே.

விண்ணிழந்தது விண்பதியென்னவும், விழையும்
பண்ணிழந்தது பாட்டியலென்னவும், பார்க்கும்
கண்ணிழந்தது வடமொழிக் கவித்துவம் ; கனலும்
மண்ணிழந்ததோ கோளவர்மர் நல்வாழ்வே ?

நல்லையூர் முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள்மேல்.

கட்டுக்கடந்த கலையெனுமீன் கடலைக்கடந்து,
மட்டுக்கடந்த மதிப்பும் வியப்பும் வகித்துநின்றாய்:
எட்டுக்கடந்த கலையினி இங்கிலை யென்றறிந்தோ,
விட்டுக்கடந்தனை யண்ணா விண்ணோடர் வியப்பதற்கே ?

---

பு. ஞானி கிருஷ்ணையங்கார் அவர்கள்மேல்.

---

கல்லாமற் போனதில்லை, கற்றவர்தங்
    கருத்துணரின்றி; காணிடத்தே
நில்லாமற் போனதில்லை, நேயனுடை
    விடுவதில்லை; நிமலன் சேவை
யில்லாமற் போனதில்லை; இன்றமிழ்க்கும்
    எங்களுக்கும் இளைப்புத்தோன்றச்,
சொல்லாமற் போனதுண்டு; சொல்வன்மைக்
    கழகதுவோ, சொல்லுவீரே.

மகா பாலைத மலைமேல்.

---

அறியனுர மதலைமொழி யுருகிவரு மதலைமதி
    அருள்பரவு கலைவழுதியே,
அகமகிழ முகமலர அருகில்வரு துணைவர்புகழ்
    அழகொழுகு விமலமலரே,
மதிநிகழ மதிமறதி வரினும் உனதுளமுறுவல்
    மதிமகிழ உதவுமதியே,
மனமுருக எனதருமை மகவெனவு நரவுடல்
    மருவியவிண் மகிழுமணியே,
நிதியெனவும், அரியநவ மணியெனவும், எனதிருகண்
    மணியெனவும் நினைவுடையவென்
நிலைதவற, உறுதியெனு மலைசரிய, நினைவிடுதல்
    நிகழ்வதொரு சிறிதுமறியேன்:
விதிபெரிது, மதிசிறிது; வினைவலிது, மனமெளிது;
    விசனமிரு கரைபுரளவே,
விழியருவி பெருகவுனை நினைவதல, தொருகளைகண்
    விழைவதிலை யினியுலகிலே.

## விதி

---

கீர்த்தனம். வேகடைராகம்.

தாளம். ரூபகச்சாப்பு.

பல்லவி.

வாழ்வென்ப தென்னவோ மாயமென்றெண்ணி
மதியிழந்தாய் நெஞ்சமே—நீஉய்யுமோர்
கதியிழந்தாய் நெஞ்சமே—சும்மாநின்றன்
விதியை நொந்தாய் நெஞ்சமே.

அநுபல்லவி.

வாழ்வென்ப தீசன்செய் மாவிந்த்ர ஜாலமோ,
ஏழைக்கூத்துப் பார்க்க அவர்க்கென்ன லீலையோ ? வாழ்

சரணங்கள்.

வாழ்வென்பது நமக் கீந்த பெருயாஸ்தி ;
வம்பாயிழந்தால் அஃதியும் பலன் நாஸ்தி ;
ஆழும்பொருள் சொப்பனமென்று தள்ளாதே,
சோம்பலும் டம்பமும் தோழமைகொள்ளாதே. வாழ்

வாழ்வென்பது நமக்கீந்த ஓர் வெள்ளேடு ;
வம்பாய்க் கிறுக்கினால் வந்ததுனக்குக் கேடு ;
ஆழித்துரும்புபோல் அவலமாய்த் திரியாதே,
அறநெறி நிலை ; என்றும் அதைவிட்டுப் பிரியாதே. வாழ்

வாழ்வென்பது பல நாள்கொண்ட பாத்திரம் ;
மண்ணளந்தால் மண் கிடைக்கும் அம்மாத்திரம் ;
நாழி அளந்த தொன்று, தாழிகொண்டதொன்றாமோ,
நன்றல்லாதது செய்யின், என்றும் அதுநன்றாமோ ? வாழ்

வாழ்வென்பது நமக்கிரவல் கிடைத்தநிலம் ;
வருந்தி யுழுதாலன்றிக் கொடுக்குமோ அதுபலம் ?
ஊழ்வினையை நொந்து தாழ்மதி நண்ணாதே,
உள்ளங்கைக் கிளியைவிட் டொளிந்தகிளி எண்ணாதே. வாழ்

## ஆணவம்

வேகடை—ரூபகச்சாப்பு.

நானென்ற ஆணவம் நீகொண்டதாற் பயன்
யாதுண்டு, பாழ்நெஞ்சமே?

தானந்த மாதியிலான் இந்தப்பார்முதல்
வானந்த மாளக்கண் டானந்தமாகியும், நானென்ற

பல்லாயிரங்கோடி அண்டங்களோட்டவும்,
பரிதி முதலிய தீபங்கள் காட்டவும்,
எல்லாவுயிரும் படைத் துணவூட்டவும்,
ஈசனுண்டென்று வல்லோர் சொல்லி நாட்டவும், நானென்ற

கேடுநினைத்தவர் பாடு கெடுக்கவும்,
கேதமுடையவர்க் கீடு கொடுக்கவும்,
தேடுமடியவர் துன்பந் தடுக்கவும்,
தெய்வ முண்டென்ற சொல் காதுமடுக்கவும், நானென்ற

ஏழை எளியவர்க் கின்பம் பெருக்கவும்,
ஈரமில்லா நெஞ்சைச் சூடிட்டுருக்கவும்,
தாழாதவரைக் குனிய நெருக்கவும்,
சாமியுண்டிங் கிதெல்லாங் கண்டிருக்கவும், நானென்ற

செல்வம் வளரச் சிகரங் கிளர்த்தனை,
செல்வத்திலே மறந்தாய் ஒருகர்த்தனை;
வல்லமை செல்லின் மதத்துத் தகர்த்தனை,
வண்ணமோய்ந்தால் களி மண்ணை நிகர்த்தனை, நானென்ற

ஓடிமறைகின்ற மின்னலைப் போலவும்,
ஆடியொடுங்கிடும் பாவையைப் போலவும்,
சாடிற் கறங்கிடும் பம்பரம் போலவும்,
தானிருந் திதறி யாதவர் போலவும், நானென்ற

கண்டுமறையுங் கனவினைப்போலவும்,
காருறும்போதுறும் வில்லினைப்போலவும்,
உண்டில்லை யென்னுங் குமிழியைப்போலவும்,
உற்றதுவாழ்வென் றுணராதார் போலவும், நானென்ற

## துறவு வேண்டாமை

நாதநாமக்கிரியை—ரூபகச்சாப்பு.

துறவற மேதுக்கு மனமே—இல்
லற நல்லறமென்பது பெரியோர் வசனமே.

தந்தை தாய் தமருக்கு நேத்ரம்—இந்தத்
தாரணிதன்னில் ஓர்நாடகசூத்ரம்—ந
டந்திட நாமொருபாத்ரம்—அதை
நடத்தாமலோடிட ஏனிந்த ஆத்ரம்? துறவற

நேயப்பெண் பிள்ளைக்காதாரம்—இந்த
நேமிக்கு நாம் செய்யவுண் டுபகாரம்;
காயம் நமக்களித்த சாரம்—அந்தக்
கடமை தொடுப்பதோ விடுவதோ வீரம்? துறவற

முந்திய பாத்ரத்திலொன்று—அந்த
முற்றுந் துறந்த துறவிகள் நின்று,
ஒன்றும் நிலையில்லை யென்று—நமக்
குணர்த்துவர்; அன்றி, வனம் நமக்கன்று. துறவற

மாதரைப் பழிக்கச் சிறந்தோம்—நம்தாய்
வயிற்றிற் பிறந்த வகையை மறந்தோம்;
காதை மயக்கிற் பிறந்தோம்—அந்தச்
சார்புணரா தென்ன துறவு துறந்தோம்? துறவற

நிகழ்வதெல்லாம் ஈசன் செயலே—யென்று
நினைத்துச் செய்கடன் செய்வோர்க் கில்லை ஓர்மயலே;
புகழ்வதெல்லாம் ஈசன் இயலே—கர்ம
புண்யபாவமும் அவர்க் குண்மையில் அயலே. துறவற

தலைவன் அருளை நித்யந்தேடு—தர்ம
சாதகஞ் செய்வதற்குப் போதுமே நாடு;
அலைவதேன் நீவெறுங்காடு—அதை
அடையார்தவருக்குக் கிடையாதோ வீடு? துறவற

## ஸ்ரீகண்டேசனிடம்

### ஓர் மாது வரங்கேட்டல்.

பொன்னே, மரகதமே, பூவே, அப் பூமணமே,
அன்னே என்னை வந்து நீ ஆளாய் ஸ்ரீகண்டசிவா.

கண்ணே, கண்ணின் மணியே, கருத்தே, கருத்தினுள்ளே
தண்ணேயமே, கனிவே, தாயே ஸ்ரீகண்டசிவா.

கண்டபொருளி லெல்லாம் காணும் குணநிலையே,
அண்டந் தழுவிநிற்கும் அன்பே ஸ்ரீகண்டசிவா.

என்றுமுன் றிருப்பதத்தை எண்ணியெண்ணி நான்தொழுதால்,
கன்றுக்குத் தாய்ப்பசுப்போல், கனியாய் ஸ்ரீகண்டசிவா.

அன்புக் கிருப்பிடமே, ஆதரவுக் கோரிடமே,
துன்புக் கிடமின்றி நீ துணைப்பாய் ஸ்ரீகண்டசிவா.

போற்றாமலுன்னைப் பல போது மிருந்ததில்லை;
ஆற்றாமை தீர்த்தருள்வாய், ஐயா ஸ்ரீகண்டசிவா.

தர்மப் பெருங்கடலே, தன்னிணையில்லா வள்ளலே,
கர்மக் கசடறுத்துக் காப்பாய் ஸ்ரீகண்டசிவா.

கண்ணே, என் கற்பகமே, கனியே, கனிரஸமே,
பெண்ணே வரங்கேட்கினும், பேசாய் ஸ்ரீகண்டசிவா.

என்குடும்ப மோங்கிவர, இனியபிள்ளைப் பிச்சைதர,
நின்கருணை யான் விழைந்தேன் நேசா ஸ்ரீகண்டசிவா.

பிள்ளைச்சிறுமுகமென் பேதைமுகம் பார்க்க என்றன்
உள்ளங்களிப்பதென்றோ, உரையாய் ஸ்ரீகண்டசிவா.

நின்பேரெடுத்து நித்யம் தேடியுன்னை நானழைத்தேன்;
என்பேர் விளங்கப் பிள்ளை ஈயாய் ஸ்ரீகண்டசிவா.

வாய்க்கும் சுகம்வருமோ, வாய்க்குருசி வருமோ,
தாய்க்குப் பிள்ளையில்லையேல், தாயே ஸ்ரீகண்டசிவா ?

மக்கட் பெரும்பேறு வாய்க்கவில்லை யாகில், மெத்தக்
கைக்குட் பொருளிருந்தென் காண்போம் ஸ்ரீகண்டசிவா ?

இனிய மதலை தனக் கின்னமுத மூட்டிமனங்
கனியவரந் தந்து நீ காப்பாய் ஸ்ரீகண்டசிவா.

கன்னற் கருணை வெள்ளங் கங்கு கரையின்றி நிற்க,
என்னைத் தெளிக்கவில்லை யேனோ ஸ்ரீகண்டசிவா ?

கண்ணீருங் கம்பலையும் கண்டா யிரங்கிலையோ,
தண்ணீர்மை தானிலையோ, தாயே ஸ்ரீகண்டசிவா ?

ஆழித்துரும்பென நான் ஆசைக்குட் பட்டுலைந்தேன் ;
ஏழைக் கிரங்கிலையோ ஈசா ஸ்ரீகண்டசிவா ?

கேட்டவரந் தான்பெரிதோ, கேட்கு முறை யிலையோ,
கூட்டிவைக்கத் தானரிதோ, கூறாய் ஸ்ரீகண்டசிவா.

உன்றுணையின்றி உல கொன்றுமில்லை யாகில் துணை
உன்றுணை வேறெனக்கெங் குரையாய் ஸ்ரீகண்டசிவா.

எளியேனிசைத்த குற்றம் எல்லாம் மன்னித்தருள்வாய்,
அளியே யுருவங்கொண்ட ஆதி ஸ்ரீகண்டசிவா.

சேயிழைக்குந் தீங்கனைத்தும் தாய் பொறுக்க மாட்டுவதே ;
நாயேற் கிலையோ அந்த ஞாயம் ஸ்ரீகண்டசிவா ?

அம்போருகத்தை யொத்த அருமைமுகம் பார்க்கவுன்னை
சம்போ தயாநிதியே, சார்ந்தேன் ஸ்ரீகண்டசிவா.

உன்னைநம்பி வந்தவருக் கொன்றுமில்லை யென்றுசொல்லிப்
பின்னிடவுந் தான்வருமோ, பேசாய் ஸ்ரீகண்டசிவா.

நானுன்னை நம்பிவிட்டு நாடிப் பிறரிடத்தில்
ஏனென்று கேட்கவைப்பாய், ஈசா ஸ்ரீகண்டசிவா ?

காலங் கெடுத்த தென்றால் காலகாலன் நீயலையோ,
நீலகண்டம் சொல்லுமே நேரே ஸ்ரீகண்டசிவா.

பெண்ணுக்குப் பேயிரங்கும் என்றே பெரியர் சொன்னார் ;
மண்ணிற் பெரியர்சொல்லும் வம்போ ஸ்ரீகண்டசிவா ?

நற்றாயெனக் கிலையோ, ஞாயமெனக் கிலையோ,
பொற்றாளெனக் கிலையோ புகலாய் ஸ்ரீகண்டசிவா.

அந்தமற்ற நின்னருளின் ஆயமெனக் கில்லையென்றால்,
இந்தக் கவலை தந்த தேனோ ஸ்ரீகண்டசிவா ?

என்னைப்போல் மற்றயலோர் ஏங்காதிருக்க வேணும்,
பொன்னைப் போலுங்கருணை புரிவாய் ஸ்ரீகண்டசிவா.

மலையத்வஜன் புதல்வி மலைபோலென் றாயிருக்க,
மலையப்படுமோ என்றன் மனமே ஸ்ரீகண்டசிவா ?

மின்போலும் மேனியள்நின் மேனியொடு சேர்ந்திருக்க,
என்பாவந் தீர்க்கத் தடை யேதோ ஸ்ரீகண்டசிவா ?

என்மேலுனக் கிரக்கம் இன்னம் வரவில்லையென்றால்,
பொன்மேனி யாளிரங்கிற் போதும் ஸ்ரீகண்டசிவா.

கண்டாரும் என்னவதி கேட்டாருமே கனிவார் ;
கண்டா யிரங்கிலையேன் கண்டாய் ஸ்ரீகண்டசிவா ?

சக்திக் கிருப்பிடமாம் தாயிருக்கப் பிள்ளைதரச்
சக்திக்குப் பஞ்சமுண்டோ, தாராய் ஸ்ரீகண்டசிவா.

பங்கேருகப் பதமென் பங்கேயிருக்கி லென்றன்
பங்கே யிருப்பதுண்டோ பாவம் ஸ்ரீகண்டசிவா ?

பாலென் றிரந்த தமிழ்ப் பாலர்க் களித்த அன்பென்
பாலும் சிறிதுவைக்கப் பாராய் ஸ்ரீகண்டசிவா.